# மன்னா


# மன்னார் மறைமாவட்டம் உதயமாகி

# 38ஆவது ஆண்டு நிறைவு விழா

மன்னார் மறைமாவட்டம் உதயமாகி 38வது ஆண்டு நிறைவு விழா மன்னார் தோட்டவெளி மறைசாட்சியர்களின் தூய அரசி திருத்தலத்தில் 26.01.2019 காலை 07.15 மணிக்கு ஆரம்பமாகியது. இத் திருவிழாவிற்கு திருகோணமலை மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி நோயல் இம்மானுவேல் ஆண்டகை அவர்கள் வருகை தந்து சிறப்புத் திருப்பலி ஒப்புக் கொடுத்துச் செபித்தார்.

இத் திருத்தலத்திற்கு வருகை தந்த ஆயர் பேரருட்கலாநிதி நோயல் இம்மானுவேல் ஆண்டகை அவர்களை திருத்தலப் பிரதான நுழைவாயிலில் இருந்து குருமுதல்வர் அருட்பணி. அ.விக்ரர் சோசை, இத்திருத்தல பரிபாலகர் அருட்பணி. டே. அலெக்சாண்டர் சில்வா மற்றும் ஏனைய குருக்கள், துறவிகளால் வரவேற்கப்பட்டு, தோட்டவெளி புனித யோசேவாஸ் மகாவித்தியாலய மாணவர்களின் மேலைநாட்டு மகிழ்வோசையோடு அழைத்து வரப்பட்டார்.

மன்னார் மறைசாட்சிகளின் 475ஆம் ஆண்டு மறைசாட்சியத்தின் நினைவாக இவ்வாண்டு இருப்பதால், முதலில் ஆயர் அவர்கள் மன்னார் மறைசாட்சிகளின் கல்லறைக்குச் சென்று அங்கு அமைக்கப்பட்டிருந்த 475ஆம் ஆண்டு தொடக்க விழா நினைவுப் படிகத்தைத் திரை நீக்கம் செய்து வைத்தார். அதன் பின் திருவிழாத் திருப்பலியையும் ஒப்புக் கொடுத்தார்.

இவ்விழாவில் பல அருட்பணியாளர்கள், துறவிகள், அரச, அரச சார்பற்ற பணியாளர்கள், மன்னார் மறைமாவட்டத்தின் பல பங்குகளிலிருந்தும் வந்திருந்த இறைமக்களும் கலந்து கொண்டனர். இவ்வாண்டிற்கான மன்னார் மறைமாவட்டத்தின் அருட்பணி இலக்கான புதுப்பித்தலை அடிப்படையாகக் கொண்ட பங்கின் திட்டங்களை அந்தந்தப் பங்கின் அருட்பணிப் பேரவைச் செயலர்கள் காணிக்கை வேளையில் காணிக்கையாக அர்ப்பணித்தனர்.

இவ்விழாவிற்கான அனைத்து ஒழுங்குகளையும் இத்திருத்தல பரிபாலகர் அருட்பணி. டே. அலெக்சாண்டர் சில்வா அடிகளார் பலருடைய பங்களிப்போடு செய்திருந்தார். ●






## புனித செபஸ்தியார் பேராலயத் திருவிழா







திருச்சபையின் திருவழிபாட்டு ஒழுங்கின்படி வருடந்தோறும் தை மாதம் 20ஆம் திகதி உலகமெங்கும் புனித செபஸ்தியாரின் விழா கொண்டாடப்படுவருகின்றது. மன்னார் மறைமாவட்டத்தின் தலைமை ஆலயமாகிய மன்னார் புனித செபஸ்தியார் பேராலய மக்களும் தமது பாதுகாவலராம் புனித செபஸ்தியாரின் திருவிழாவை 20.01.2019 ஞாயிற்றுக்கிழமை அன்று மிகவும் சிறப்பாகக் கொண்டாடினர். ஒன்பது நாட்கள் ஆன்மிக ஆயத்த வழிபாட்டோடு 19ஆம் திகதி மாலைப்புகழ் வழிபாடும் இடம்பெற்றது.

தவிர்க்கமுடியாத காரணத்தினால் மன்னார் ஆயர் அவர்கள் இத்திருவிழாத் திருப்பலியில் பங்கேற்ற முடியாததினால் இந்தியா தமிழ்நாடு மதுரை மாநில அமல அன்னை கப்புச்சியன் துறவற சபையின் முதல்வர் அருட்பணி. சத்தியன் இன்னாசி அடிகளார் இத் திருவிழாத் திருப்பலியை ஒப்புக் கொடுத்தார். பல அருட்பணியாளர்களும், துறவிகளும், அரச, அரச சார்பற்ற முதன்மைப் பணியாளர்களும், இறை மக்களும் இத் திருவிழாத் திருப்பலியில் கலந்து செபித்தனர். ●

## வாழ்த்துகின்றோம்!



## இளைஞர் ஆண்டு பிரகடனம் - 2019
## "இளையோரே எழுங்கள் உங்கள் வாழ்வை இறையன்பிற்கு கொடுங்கள்"




கொழும்பு உயர்மறைமாவட்டம் 2019ஆம் ஆண்டை இளைஞர் ஆண்டாக பிரகடனப்படுத்தியுள்ளது. இதற்கிணங்க 13.01.2019 அன்று நீர்கொழும்பு பெரியதெரு புனித மரியாள் பேராலயத்தில் மாலை 5.00மணிக்கு கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர் அதிமேதகு. கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை மற்றும் துணை ஆயர்களும் இணைந்து திருப்பலி ஒப்புக்கொடுத்தனர்.


➡ 15


## மன்னார் மறைமாவட்ட இளைஞர் ஆணைக்குழுவின் கலைவிழா நிகழ்வுகள் மிகச் சிறப்பாக நடைபெற்றது.





மன்னார் மறைமாவட்ட இளையோர் ஆணைக்குழு நடாத்தும் வருடாந்தக் கலைவிழா நிகழ்வுகள் கடந்த தை மாதம் 27ஆம் திகதி கட்டைக்காட்டில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி. விக்ரர் சோசை அடிகளார் முதன்மை விருந்தினராகவும், கௌரவ விருந்தினர்களாக பாராளுமன்ற உறுப்பினர்கள் திரு. செல்வம் அடைக்கலநாதன், திரு. சாள்ஸ் ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள். 19 பங்குகளின் கத்தோலிக்க இளைஞர் யுவதிகள் இந்நிகழ்வில் பங்கேற்றனர். இந்நிழ்வுகளை மறைமாவட்ட இளையோர் ஆணைக்குழு இயக்குனர் அருட்பணி. லக்கோண்ஸ் பிகிறாடோ அடிகளார் நிர்வாகத்தோடு இணைந்து சிறப்பாக ஒழுங்குபடுத்தியிருந்தார்.


*இந்நிகழ்வின் பதிவுகளை 8ஆம் பக்கத்தில் பார்க்கலாம்.* ●




# மன்னா

பதிப்பாசிரியரின் மனப்பொழிவு

## புதுப்பித்தல் ஆண்டு - 2019

## அருளின் காலம்

### தவக்காலம்

தவக்காலம் என்பது கிறிஸ்தவ வாழ்வின் உயிர்ப்பை நோக்கிய புதுவாழ்விற்கான மனமாற்றத்தின் காலம். இத்தவக்காலம் என்பது ஒரு கிறிஸ்தவனை அவனுடைய பழைய வாழ்விலிருந்து அருள்வாழ்விற்கு அழைத்துச் செல்கின்ற காலம்.

தவக்காலமென்றாலே ஒப்புரவு திருவருட்சாதனத்தில் பங்குபற்றல், சிலுவைப்பாதைத் தியானம் மேற்கொள்ளல், அடிக்கடி நற்கருணை திருவிருந்து உட்கொள்ளல், நோன்பிருத்தல், செப தவ ஒறுத்தல் முயற்சிகளில் ஈடுபடுதல் இவைகள்தான் நம் சிந்தனைக்கு வருகின்றன. வாடிக்கையாக வாழ்கின்ற நமக்கு இவையெல்லாம் ஆண்டுதோறும் எம் கிறிஸ்தவ வாழ்வின் வேடிக்கையாக மாறிவிட்டன. நமது நோன்புகளும், தவங்களும், செபங்களும் அகமாற்றத்தை நோக்கிய புதுப்பித்தலைத் தரவேண்டும். அதன் விளைவாக புதிய இறை சமூகம் மலரவேண்டும்.

தவக்காலம் 40 நாட்கள் நீடிக்கின்றன. நாற்பது என்பது ஓர் விவிலிய எண். அகப்புதுப்பித்தலையும், சமூகப்புதுப்பித்தலையும், புதிய வாழ்வையும், புதிய சிந்தனைகளையும், புதிய உள்ளங்களையும், புதிய உறவுகளையும் சுட்டிக்காட்டும் எண்தான் நாற்பது. வாக்களிக்கப்பட்ட கானான் நாட்டை அடைய இஸ்ராயேல் மக்கள் பாலைவனத்தில் அலைந்து திரிந்த ஆண்டுகள் நாற்பது. இறைவனின் பத்துக் கட்டளைகளைப் பெற இறைவாக்கினர் மோசே உண்ணா நோன்பிருந்த நாட்கள் நாற்பது. ஓரேபு என்ற கடவுளின் மலையை அடைய இறைவாக்கினர் எலியா நடந்த நாட்கள் நாற்பது. தன் பகிரங்கப் பணிவாழ்வை ஆரம்பிக்குமுன் இறைமகன் இயேசு பாலைவனத்தில் நோன்பிருந்த நாட்கள் நாற்பது. உயிர்த்த இயேசு விண்ணேற்றம் அடைவதற்கு முன் இவ்வுலகில் தங்கியிருந்த நாட்களும் நாற்பது. ஆகவே நாற்பது என்பது ஒரு வாழ்வு நிலையிலிருந்து இன்னுமொரு வாழ்க்கை நிலைக்கு கடந்து செல்லும் பயண நாட்களாகும்.

தவக்காலத்தில் கடந்து செல்லப்போகும் நாற்பது நாட்களில் நாம் கடைப்பிடிக்கும் நோன்பு, செய்கின்ற வேண்டுதல்கள், புரிகின்ற பக்தி முயற்சி, அறச் செயல்கள் அனைத்தும் நமது அகவாழ்விலும், குடும்ப வாழ்விலும், அன்பிய வாழ்விலும், பங்குச் சமூக வாழ்விலும் புதுப்பித்தலைத் தரவேண்டும். இல்லையெனில் முற்றிலும் வீண். (சபையுரையாளர்)

எம் வாழ்வின் கட்டுக்களிலிருந்து விடுதலைப் பெறாமல் நோன்பிருப்பதால் என்ன பயன்? ஏழை எளியவர்கள் மட்டில் இரக்கமில்லா மனத்தோடு வாழ்ந்துவிட்டு அடிக்கடி செபிப்பது உண்மை செபமாகுமா? குடிவெறி, மதுபோதை, சண்டை சச்சரவு, பில்லிசூனியம், கட்சிமனப்பான்மை, பொறாமை, சந்தேகம், கணவன் - மனைவிக்கிடையே அடிதடி இவற்றை விட்டுவிடாமல் சிலுவைப்பாதைகள், பாதையாத்திரை, நோன்பு மற்றும் வழிபாடுகளில் பங்கேற்பதால் தவக்காலத்தில் அருள்வாழ்வை பெற்றுக்கொள்ளமுடியுமா?

"உங்கள் திருவிழாக்களை நான் வெறுத்து அருவருக்கின்றேன், உங்கள் வழிபாட்டுக் கூட்டங்களில் எனக்கு விருப்பமே இல்லை என் முன்னிலையில் நீங்கள் இரைச்சலிட்டுப் பாடும் பாடல்களை நிறுத்துங்கள், மாறாக நீதி வெள்ளமெனப் பொங்கி வருக, நேர்மை வற்றாத ஆறாகப் பாய்ந்துவருக."

(ஆமோஸ்.5:21-24)

ஆகவே இத் தவக்காலத்தில் நாம் செய்யும் நோன்பும், செபமும், அறச்செயல்களும் அகப்புதுப்பித்தலையும், சமூகப் புதுப்பித்தலையும் கொண்டு வரட்டும்.

*மீண்டும் மறுமடலில் சந்திக்கும்வரை*
*அன்புடன் அருட்பணி. அ. லக்ஸ்ரன் டி சில்வா,*
*மன்னா பதிப்பாசிரியர்.*

❁❁❁

## இயேசு சபைக்கு புதிய குரு நோயல் அஜந்தன் ஜெயநாதன்

கடந்த 26.01.2019 சனிக்கிழமை அன்று திருத்தொண்டர் நோயல் அஜந்தன் ஜெயநாதன் கொழும்பு தெஹிவளை, புனித மரியாள் ஆலயத்தில் யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி. யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையினால் திருநிலைப்படுத்தப்பட்டார்.

இயேசு சபையைச் சேர்ந்த திருத்தொண்டர் நோயல் அஜந்தன் ஜெயநாதன் அவர்கள் யாழ் மறைமாவட்டத்தைச் சேர்ந்த திரு.திருமதி. நீக்கிலஸ் ஜெயநாதன், லெற்றிசியா ஜெயநாதன் அவர்களதும் இளைய புதல்வனாவார். இவர் தனது ஆரம்பக் கல்வியினை (தரம் 1-3) கொழும்பிலுள்ள புனித சூசையப்பர் கல்லூரியிலும், பாகிஸ்தான் கராச்சியில், (Poul's English High School) கேம்பிறிச் பொதுச்சாதரண தரத்தையும், கேம்பிறிச் பொது உயர்தரத்தினையும் (Campbridge GCE A/L) கற்று சித்தியடைந்தார். பின்னர் தனது முதுநிலை தத்துவமானிப்பட்டத்தினை தத்துவவியலிலும், இறையியல் கல்வியை உரோமாபுரி கிரகோரியன் பல்கலைக்கழகத்திலும் குருத்துவக் கல்வியை நிறைவு செய்தார். இவரை மன்னார் மறைமாவட்டம் சார்பாக மன்னா பாராட்டி மகிழ்கின்றது. ●

## நித்திய வார்த்தைப்பாடு அருட்சகோதரி செலின் பிறீடா



திருக்குடும்பக் கன்னியர் சபையின் ஒரு கிளையாகிய "தியானயோக" கன்னியர் சபையைச் சேர்ந்த அருட்சகோதரி செலின் பிறிடா 08.12.2018 அன்று நாகொடையில் அமைந்துள்ள திருக்குடும்ப தியானயோக கன்னியர் மடத்தில் தன்னை முழுவதுமாக இறைவனுக்கு அர்ப்பணித்தார். இவர் வஞ்சியன்குளக் கிராமத்தில் இருந்து உருவாகிய மூன்றாவது அருட்சகோதரியாவார். இவரது அர்ப்பணமும், தியாகமும் இவரது துறவறசபைக்கும், எமது மறைமாவட்ட திருஅவைக்கும் ஆசீர்வாதமாக அமைவதாக. "நீங்கள் என்னைத் தேர்ந்து கொள்ளவில்லை நான்தான் உங்களைத் தேர்ந்துகொண்டேன்" என்று திருவாய் மலர்ந்த இயேசு ஆண்டவரே இவர் உடனிருந்து செயற்பட ஆசிக்கின்றோம். மன்னார் மறைமாவட்டம் சார்பாக மன்னா வாழ்த்துக்களையும், செபங்களையும் தெரிவித்து மகிழ்கின்றது. ●

## மன்னார் மறைமாவட்டம்

### திருவழிபாட்டு நாட்காட்டி - 2019

### பெப்ரவரி

02. காணிக்கை மாதா திருவிழா - மன்னார், பாலைக்குழி (காத்தான்குளம்). சாம்பல்தோட்டம், துள்ளுகுடியிருப்பு.
 - புனித அன்னை வேளாங்கண்ணி ஆலயம் - படகுதுறை (இலுப்பைக்கடவை).
 - புனித செங்கோல் மாதா திருவிழா - முத்தரிப்புத்துறை.
04. இலங்கை மாதா பெருவிழா - அம்பிட்டிய தேசிய குருத்துவக் கல்லூரி விழா.
 - புனித செங்கோல் மாதா ஆலயம் - கற்குழி.
09. புனித வனத்து சின்னப்பர் - 7ம் கட்டை (பம்பமடு).
11. புனித லூர்து அன்னை திருவிழா - ஜீவநகர், முதலைகுத்தி, இரண்டாம் பண்ணை, பாசிமோட்டை, இறம்பைக்குளம், கீளியன்குடியிருப்பு, குஞ்சுக்குளம். (தேக்கம்)
 - புனித மரியாள் - சௌத்பார்.
 - மேதகு பிடெலிஸ் லயனல் இம்மானுவேல் பெர்னாண்டோ. ஆண்டகை. மன்னார் ஆயர் - ஆயர் அபிசேகம். (2012)
16. புனித லூர்து அன்னை திருவிழா - மாந்தை.
17. புனித லூர்து அன்னை திருவிழா - மரக்காரன்பளை.
22. புனித இராயப்பர் - கத்தாளம்பிட்டி.

■ வியாழக்கிழமைகளில் மாலை 4 மணி தொடக்கம் 7 மணி வரை செபவழிபாடு - தோட்டவெளி ஆன்மீக இல்லம்


## திருச்சிலுவைக் கன்னியர் சபையின் தாதியர் டிப்ளோமா கற்கைநெறி ஆரம்பம்

(Holy Cross School of Health Science)

கா.பொ.த உயர்தரத்தில் சித்தி அடைந்தவர்கள் தங்கள் சுயவிபரக்கோவையினை (Bio-Data) திருச்சிலுவை சுகாதார விஞ்ஞான பாடசாலை, இல: 767/4, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம். என்னும் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

**குறிப்பு :-**


✍ பயிற்சி நெறிக் காலம் : 03 வருடங்கள்

✍ விண்ணப்ப முடிவுத் திகதி : 20.03.2019

**தொடர்புகளுக்கு :-**

திருச்சிலுவை சுகாதார விஞ்ஞானப் பாடசாலை,
கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 021-2222423/ 077-1159391


## துறவற வாழ்வின் பொன்விழா காணும் அருட்சகோதரி. அல்போன்சா மரியசோசை



இவர் 1944ஆம் ஆண்டு நாவலப்பிட்டி என்னும் இடத்தில் 09 பிள்ளைகளில் 06வது பிள்ளையாக மரிய செல்லத்துக்கும், மரிய சூசைக்கும் மகளாகப் பிறந்தார். ஆரம்பக் கல்வியை பூண்டிலோயா பாடசாலையில் தொடர்ந்து அருட்தந்தை. சேவியரின் தூண்டுதலின்மூலம் திருச்சிலுவைக் கன்னியர் சபையில் இணைந்தார்.

தனது முதல் அர்ப்பண வாக்குத்தத்தத்தை 1969ஆம் ஆண்டு பெற்று 1974ஆம் ஆண்டு நித்திய வாக்குத்தத்தமும் பெற்றுக்கொண்டார். யாழ்ப்பாண மறைமாவட்டத்தில் தன் துறவற வாழ்வின் ஆரம்பப் பணிகளையாற்றிய அருட்சகோதரி கொழும்பு, பதுளை, திருகோணமலை ஆகிய மறைமாவட்டங்களிலும் இறுதியாக மன்னார் மறைமாவட்டத்திலும் பல வருடங்கள் பணிகளை ஆற்றியிருக்கின்றார்.

ஆகவே துறவறவாழ்வில் 50 ஆண்டுகளை நிறைவுசெய்து ஆண்டவருக்கு நன்றிசொல்லுகின்ற அருட்சகோதரி அவர்களை மன்னார் மறைமாவட்டம் சார்பாக மன்னா வாழ்த்துக்களையும், செபங்களையும் தெரிவித்து மகிழ்கின்றது. ●

## சமாதான நீதிவானாக நியமனம்



திரு. தியோகு தாசீஸ் அவர்கள், இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் நீதி அமைச்சினால், முழுத்தீவுக்குமான ஒரு சமாதான நீதிவானாக நியமனம் பெற்று, கடந்த 09.01.2019 அன்று மன்னார் மாவட்ட நீதிமன்றில் நீதிவான் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துள்ளார். இவர் சிறுக்கண்டல் பங்கைச் சேர்ந்தவர், சிறுக்கண்டல், முருங்கன் முகவரியை உடையவர். சிறுக்கண்டல், கி.அ. சங்க தலைவரும், இரெட்டைக்குளம் வாய்க்கால் விவசாய அமைப்புத் தலைவரும், கட்டுக்கரை திட்ட முகாமைத்துவக்குழு நிர்வாக உறுப்பினரும், நானாட்டான், கி.அ.சங்க மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களின் சமாச பொருளாளரும், நானாட்டான், ப.நோ.கூ. சங்க இயக்குனர் சபை உறுப்பினரும், முருங்கன் வைத்தியசாலை அபிவிருத்தி சபை உறுப்பினரும், முருங்கன் பாடசாலை அபிவிருத்தி சங்க நிர்வாக உறுப்பினரும், மன்னார் துயர் துடைப்பு சங்கம், மன்னார் செஞ்சிலுவைச்சங்க ஆயுள்கால உறுப்பினருமாவார். ●

### மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம் :

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, 'MANNA'
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782

## திருப்பாடுகளின் திருக்காட்சி ஆற்றுகை

கலையருவி, மன்னார் மறைமாவட்ட சமூகத் தொடர்பு ஆணைக்குழு ஏற்பாட்டில் திருப்பாடுகளின் திருக்காட்சி சில பங்குக்கலைஞர்களின் ஒத்துழைப்போடு அரங்கேற்றப்பட இருக்கின்றது. இது தவக்கால பக்திக் கலைவடிவமாகும். இறைமகன் இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு மறையுண்மைகளை ஆழமாகத் தியானிக்க எம்மைத் தூண்டும். ஆகவே உங்கள் அனைவரையும் அன்போடு வரவேற்கின்றோம்.

நேரம் : மாலை 5.30மணி
காலம் : 07.04.2019 (ஞாயிறு)
இடம் : கலையருவி திறந்த அரங்கம், தலைமன்னார் வீதி, மன்னார்.

"உங்கள் மேலான ஒத்துழைப்பையும், ஆதரவையும் எதிர்பார்த்து நிற்கின்றோம்"

## உண்மை உறைக்கும் கமிலஸ்




(நன்றி - தி மெசஞ்சர்)

## ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்

காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், கருத்தாழமிக்கதாகவும் எழுதி அனுப்புங்கள். தரம் கண்டு மன்னாவில் பிரசுரிப்போம்

-மன்னா நிர்வாகம்-

மன்னார் மறைமாவட்டச் செய்திகள்

# மன்னார் புனித மரியன்னை ஆலயத்திருவிழா




மன்னார் புனித மரியன்னை ஆலயத்திருவிழா கடந்த 02.02.2019 சனிக்கிழமை அன்று காலை 6.45 மணிக்கு மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி. விக்ரர் சோசை அடிகளார் தலைமையில் சிறப்பாக ஒப்புக்கொடுக்கப்பட்டது.

இத்திருவிழாவிற்கான ஒன்பது நாள் ஆயத்த வழிபாடுகள் இந்தியாவின் வின்சென்சியன் அருட்பணியாளர்களால் நேர்த்தியான முறையில் ஆயத்தப்படுத்தப்பட்டு பங்குத்தந்தை அருட்பணி. ஞானப்பிரகாசம் அடிகளாரின் வழிகாட்டுதலில் சிறப்பாக இத்திருவிழா நடைபெற்றது. ●



# மன்னார் மாந்தை

## புனித லூர்து அன்னை திருத்தல விழா




அனைத்து மக்களாலும் அன்பு செய்யப்படும் மடுமாதாவின் ஆரம்ப இருப்பிடமான மாந்தைத் திருப்பதியில் அமைந்துள்ள நீண்டகால ஆன்மிகச் செழுமையும் வரலாற்றுச் சிறப்பும் மிக்க லூர்து அன்னை திருத்தலவிழா 16.02.2019 சனிக்கிழமை அன்று காலை மிகவும் பக்தி எழுச்சியோடு கொண்டாடப்பட்டது. அன்று காலை விழாவிற்கு வருகை தந்திருந்த மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி. அ.விக்ரர் சோசை அடிகளார், பங்குத்தந்தை அருட்பணி. ச.மரியதாஸ் லீயோன், மன்னார் மாவட்டச் செயலர் உயர்திரு மோகன்றாஸ் மன்றும் வன்னிப் பாரளுமன்ற உறுப்பினர்களான கௌரவ. செல்வம் அடைக்கலநாதன், கௌரவ. சாள்ஸ் நிர்மலநாதன், கௌரவ. சிவசக்தி ஆனந்தன் மன்றும் அருட்பணியாளர்கள், துறவிகள் ஆலயத்தின் முன்பாகச் செல்லும் மன்னார் சங்குப்பிட்டி பிரதான வாயிலில் வைத்து அடம்பன் மத்திய மகாவித்தியாலய மகிழ்வொலி இசைக்குழுவினரின் வரவேற்பு இசையோடு வரவேற்கப்பட்டனர்.



தொடர்ந்து மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி. அ.விக்ரர் சோசை அடிகளார் தலைமையில் இத்திருவிழா கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது. அருட்பணியளர்கள், துறவிகள், இறைமக்கள், பல்துறைசார் பணியாளர்கள் எனப் பலர் இவ் விழாவில் கலந்து கொண்டனர். ●

# கட்டைக்காடு

## புனித செபஸ்தியார் ஆலயத்திருவிழா






கட்டைக்காடு புனித செபஸ்தியார் ஆலயத்திருவிழா கடந்த தை மாதம் 20ஆம் திகதி காலை 7.30 மணிக்கு பங்குத்தந்தை அருட்பணி. எமில் எழில்றாஜ் அடிகளார் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி. விக்ரர் சோசை அடிகளார் கூட்டுத்திருப்பலியாக இத் திருவிழாத்திருப்பலியை ஒப்புக்கொடுத்தார். ●

# வவுனியா தெற்கிலுப்பை

## புனித செபஸ்தியார் ஆலயத்திருவிழா





வவுனியா தெற்கிலுப்பைக்குளம் புனித செபஸ்தியார் ஆலயத் திருவிழாத் திருப்பலி மிகவும் மங்களகரமாக நடைபெற்றது. திருவிழாத்திருப்பலியினை மறைமாவட்ட பொதுநிலையினர் ஆணைக்குழு இயக்குனர் அருட்பணி. எமிலியானுஸ்பிள்ளை அடிகளார் தலைமைதாங்கி நிறைவேற்றினார். பங்குத்தந்தையர்கள். அருட்பணி ஜெயபாலன், அருட்பணி. தேவராஜன், ஆகியோர் இத்திருவிழாவை சிறப்பாக ஒழுங்குபடுத்தியிருந்தார்கள். ●

**புதிய அலுவலக விலாசம்:**
மன்னா பத்திரிகை அலுவலகம்,
கலையருவி, இல: 202,
தலைமன்னார் வீதி,
மன்னார்.



யாழ். மறைமாவட்டச் செய்திகள்

# சில்லாலை

## புனித யோசேவ்வாஸ் திருத்தல திருவிழா






12.01.2019 சனிக்கிழமை அன்று மாலை 4.30 மணிக்கு சில்லாலை புனித யோசேவ்வாஸ் திருத்தலத் திருவிழா யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றது.

➡ 15

மன்னார் மாவட்டச் செய்திகள்

# பேசாலையில் இரத்ததானம்




மன்னார் பேசாலையில் பல சமூகப்பணிகளில் ஈடுபட்டுவரும் பேசாலை புனித பத்திமா வித்தியாலய பழைய மாணவர்களான கோல்டன் ஸ்டார் மற்றும் பேரொளி கழகத்தினர் ஒன்றினைந்து 09.01.2019 அன்று பேசாலை பிரதேச வைத்தியசாலையில் இரத்ததான முகாம் ஒன்றை நடத்தினார்கள்.


➡ 15

# மன்னாரில்

## மது போதை ஒழிப்பு வாரம்



மன்னார் வைத்தியசாலை சந்தியில்



மன். சித்திவிநாயகர் பாடசாலையில்

இலங்கை சோசலிசக் குடியரசின் அரசாங்கத்தினால் 21.01.2019 முதல் 27.01.2019 வரையிலான காலப்பகுதியை மது போதை ஒழிப்பு வாரமாக அனுசரிக்க அழைப்பு விடுக்கப்பட்டது. அதற்கமைய மன்னார் நகரசபையின் அழைப்பை ஏற்று மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க இளைஞர் ஆணைக்குழு இந்நிகழ்வை ஒழுங்கு செய்தது.

➡ 15

# 'வள்ளுவம் கண்ட தமிழ்த் தேசியம்' சிறப்புச் சொற்பொழிவு

## - மன்னார் தமிழ்ச்சங்கம் ஏற்பாடு -




மன்னார் தமிழ்ச்சங்கத்தின் "ஏற்பாட்டில் வள்ளுவம் கண்ட தமிழ்த் தேசியம்" என்ற தலைப்பில் சிறப்புச் சொற் பொழிவு நிகழ்வு இடம்பெற்றது.

➡ 15



# ஒற்றுமையின்மை சமூகத்தின் பின்னடைவுக்கு காரணம்

### மன்னார் பிரஜைகள் குழு தலைவர் அருட்பணி. ஞானப்பிரகாசம்

எங்கள் தமிழ் சமூகம் நூறு வருடங்களுக்கு மேலாக சந்தித்து வரும் போராட்டத்தில் இது வரைக்கும் எதை சாதித்து இருக்கின்றோம் என்ற கேள்வியில் எம் மத்தியில் ஒற்றுமை இன்மையே இதற்கு காரணமாக இருப்பதாக மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுத் தலைவர் அருட்பணி. அ.ஞானப்பிரகாசம் அடிகளார் இவ்வாறு தெரிவித்தார்.



➡ 14

# யாழ். புனித சவேரியார் ஆலயத்தில் தைப்பொங்கல் நிகழ்வுகள்



கடந்த தை மாதம் 15ஆம் திகதி யாழ். மறைமாவட்டத்தைச் சேர்ந்த தர்மபுரம் புனித சவேரியார் ஆலயத்தில் உழவர் திருநாளாம் தமிழர் தைப்பொங்கல் விழா சிறப்புத்திருப்பலியும், நிழ்வுகளும் நடைபெற்றன.

பங்குத்தந்தை அருட்பணி. சில்வேஸ்ரர் அடிகளாரும் ஆலய மக்களும் இந்நிகழ்வுகளைச் சிறப்பாக ஒழுங்கமைத்திருந்தார்கள். ●

# மட்டக்களப்பு வீச்சுக்கல்முனை

## புனித அன்னம்மாள் ஆலயத்தில் தைப்பொங்கல் விழா



கடந்த 15ஆம் திகதி தை மாதம் மட்டக்களப்பு மறைமாவட்டத்தைச் சேர்ந்த வீச்சுக்கல்முனை புனித அன்னம்மாள் ஆலயத்தில் தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் விழா தமிழர் பாரம்பரிய முறைப்படி சிறப்பு நிழ்வுகளும், திருப்பலியும் சிறப்பாக நடைபெற்றன.

பங்குத்தந்தையும், ஆலய மக்களும் இந்நிகழ்வுகளைச் சிறப்பாக ஒழுங்கமைத்திருந்தார்கள். ●


## உலகத் திருச்சபைச் செய்திகள்

# “நான் ஆண்டவரின் அடிமை உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்”

# 34வது உலக இளையோர் நாள்

கடந்த ஜனவரி 22 முதல் 28 வரை பனாமாவில் 34வது உலக இளையோர் தினம் “நான் ஆண்டவரின் அடிமை உம்சொற்படியே எனக்கு நிகழட்டும்” (லூக்கா.1:38) என்ற விருதுவாக்குடன் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்விற்கு 150 நாடுகளிலிருந்து ஏராளமான இளையோர் கலந்துகொண்டனர்.

***பனாமா பேராயர் உலக இளையோர் தினத்தை ஆரம்பித்துவைத்தார்.***



முதல்நாள் அதாவது 22ஆம் திகதி பானமா பேராயர் யோசே தொமிங்கோ உல்லோவா மெந்தியெத்தா (José Domingo Ulloa Mendieta) திருப்பலி ஒப்புக்கொடுத்து ஆரம்பித்துவைத்தார். திருஅவைக்குத் தேவையான மாற்றமும், மறுமலர்ச்சியும் இளையோராகிய உங்கள் கரங்களில் உள்ளன. உங்களை நாங்கள் நம்புகின்றோம் என்று தனது மறையுரையில் கூறினார்.

மேலும் இளையோருக்கு வழிநடத்துதல் தேவை என்பதை தன் மறையுரையில் சுட்டிக்காட்டிய பேராயர் தங்கள் சொற்களால் அல்ல வாழ்வால் வழிகாட்டுபவர்களை இளையோர் விரும்புகின்றனர். அவர்களைப் பின்பற்றுகின்றனர் என்று எடுத்துரைத்தார்.

***புனித பூமியிலிருந்து பத்து இலட்சம் செபமாலைகள்***

“அமைதிக்காக, சிறப்பாக, எருசலேம் மற்றும் மத்திய கிழக்கின் அமைதிக்காகச் செபிப்பது” பானமா உலக இளையோர் நாளுக்கு, திருத்தந்தை விடுத்த சிறப்பு செப விண்ணப்பம்.

பனாமா நாட்டில், ஜனவரி 22ஆம் திகதி தொடங்கியுள்ள 34வது உலக இளையோர் நாள் நிகழ்வுகளில் கலந்துகொண்ட உலக இளையோருக்குப் பரிசாக அளிப்பதற்கென, புனித பூமியிலிருந்து பத்து இலட்சத்திற்கு மேற்பட்ட செபமாலைகள் பனாமாவிற்கு அனுப்பப்பட்டன. துன்புறும் மற்றும் தேவையில் இருக்கும் திருஅவைகளுக்கு உதவுகின்ற பாப்பிறை அமைப்பு, “Ave Jmj” என்ற திட்டத்தின் கீழ் திருக்கல்லறை அமைப்பின் நிதி ஆதரவுடன் பெத்லகேம் இளம் தொழிலாளர்களைக் கொண்டு ஆயிரக்கணக்கான செபமாலைகளைத் தயாரித்தது.

பெத்லகேமில் வாரத்திற்கு 2,220 செபமாலைகள் என 800 தொழிலாளர்களால் பத்து இலட்சத்திற்கு அதிகமான செபமாலைகள் தயாரிக்கப்பட்டன. மூன்று செபமாலைகள் திருத்தந்தையின் படத்துடன் ஒரு பளிங்கு நிறத்தாளில் வைத்து சுற்றப்பட்டு இளையோர் ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட்டது.

இந்த மூன்றில் ஒன்றைத் தாங்கள் வைத்துக்கொண்டு மற்றொன்றை அதைப் பெறாமல் இருப்பவர்களுக்கு அளிக்கவும் மூன்றாவதை தங்களுடன் வீடுகளுக்கு எடுத்துச் சென்று தங்கள் வயதுடைய இளையோருக்கு அளிக்கவும், பரிந்துரைக்கப்பட்டார்கள்.

***உலக இளையோர் நிகழ்வில் திருத்தந்தை பிரான்சிஸ் கலந்துகொண்டார்.***



இளையோர் நாள் நிகழ்வுகளில் பங்கேற்க ஜனவரி 23ஆம் திகதி உரோம் நகரைவிட்டு கிளம்பிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் மாலை பானமா நகரின் உள்ளூர் நேரம் 4.30 மணியளவில் அந்நகரைச் சென்றடைந்தார்.

ஜனவரி 24ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரை நடைபெற்ற பல்வேறு நிகழ்வுகளில் திருத்தந்தை அவர்கள் கலந்துகொண்டார். 25ஆம் திகதி திருத்தந்தையின் தலைமையில் சிலுவைப்பாதை, 26ஆம் திகதி சனிக்கிழமை மாலை திருவிழிப்பு வழிபாடு, 27ஆம் திகதி ஞாயிறு காலை இறுதித் திருப்பலி ஆகியவை முக்கியமான நிகழ்வுகளாகும்.●

# 53வது சமூகத் தொடர்பு உலக நாள் செய்தி



மனிதர்கள் ஒருவரை ஒருவர் நேருக்கு நேர் சந்திக்கும் உண்மையான சந்திப்பிற்கு நம் சமூக வலைத்தளங்கள் உதவியாக இருக்கவேண்டும். வலைத்தளம் மனிதர்களின் பயன்பாட்டிற்கு வந்த காலத்திலிருந்து அது மக்களிடையே சந்திப்பை உருவாக்கவும், ஒருங்கிணைப்பைக் கொணரவும் வேண்டுமென்ற நோக்கத்தில் திருஅவை அதனைப் பயன்படுத்தியுள்ளது என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வெளியிட்ட ஓர் செய்தியில் கூறியுள்ளார்.

செய்தியாளர்களின் பாதுகாவலரான புனித பிரான்சிஸ் டி சேல்ஸ் திருநாள் ஜனவரி 24ஆம் திகதி கொண்டாடப்படுவதையொட்டி சமூகத்தொடர்பு உலக நாளின் செய்தியை திருத்தந்தையர் அந்நாளில் வெளியிட்டு வந்துள்ளனர்.

**53வது சமூகத் தொடர்பு உலக நாள் செய்தி**

ஆயரும், மறைநூல் வல்லுனருமான புனித பிரான்சிஸ் டி சேல்ஸ் திருநாள் கொண்டாடப்பட்டதையொட்டி 53வது சமூகத் தொடர்பு உலக நாளின் செய்தியை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வெளியிட்டுள்ளார்.

திருத்தூதர் பவுலின் கூற்றான “நாம் யாவரும் ஒருடலில் உறுப்புக்களாய் இருக்கின்றோம்” (எபேசியர் 4:25) என்பதை தலைப்பாகவும், ‘சமூக வலைத்தள குழுமங்களிலிருந்து மனித குடும்பத்திற்கு’ என்பதை உப தலைப்பாகவும் கொண்டு திருத்தந்தையின் செய்தி வெளியாகியுள்ளது.

**அரசியல், வர்த்தக உலகங்களுக்கு உதவும் வலைத்தளம்**

நாம் ஒருவர் ஒருவரோடு தொடர்பு கொள்ளவும், ஒருவருக்கொருவர் உதவி செய்யவும் சமூக வலைத்தளங்கள் உதவுகின்றன என்பதை உணரும் அதே நேரம் இந்த வலைத்தளங்கள் தனிப்பட்டவர்களின் அடையாளங்களை மறைமுகமாகப் பயன்படுத்தி அரசியல் மற்றும் வர்த்தக உலகங்களுக்கு உதவி செய்கின்றன என்பதையும் நாம் புரிந்து கொள்வது அவசியம் என்று திருத்தந்தை தன் செய்தியில் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

“வலை” என்ற சொல் ஓர் உருவகமாக செயலாற்றுகின்றது என்பதை இச்செய்தியில் சிறப்பாகக் குறிப்பிடும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் பல்வேறு கயிறுகள் கோடுகள் ஆகியவை ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்து வலைகள் உருவாக்கப்படுவது போல் மனிதர்களும் ஒருவரோடொருவர் இணைவதற்கு நமது வலைத்தளங்கள் உதவி செய்யவேண்டும் என்று கூறியுள்ளார்

➡ 14

## புனித டொன் பொஸ்கோவின் திருநாளில்

# திருத்தந்தையின் மறையுரை



புனித டொன் பொஸ்கோ இளையோரைத் தேடிச் சென்றபோது, மறைக்கல்வி நூலையும், சிலுவையையும் சுமந்து செல்லாமல் பாசத்தை சுமந்து சென்றதால் அவரால் இளையோரை அணுகிச் செல்ல முடிந்தது.

ஜனவரி 31ஆம் திகதி கொண்டாடப்பட்ட புனித டொன் பொஸ்கோவின் திருநாளையொட்டி, திருத்தந்தை வழங்கிய மறையுரையில் அருட்பணியாளர்கள் இப்புனிதரிடமிருந்து கற்றுக்கொள்ளக்கூடிய பாடங்களைச் சுட்டிக்காட்டினார். சாந்தா மார்த்தா இல்லச் சிற்றாலயத்தில் புனித டொன் பொஸ்கோ திருநாள் திருப்பலியை நிறைவேற்றிய திருத்தந்தை இத்திருப்பலியின் சபை மன்றாட்டில் கூறப்பட்டுள்ள புனிதரின் பண்புகளை தன் மறையுரையில் குறிப்பிட்டுப் பேசினார். தொடர்ந்து சமுதாயத்தால் கைவிடப்பட்ட இளையோரைத் தேடிச்சென்றவர் புனித டொன் பொஸ்கோ என்பதை தன் மறையுரையில் சுட்டிக்காட்டிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இப்புனிதர் இளையோரைத் தேடிச்சென்றபோது மறைக்கல்வி நூலையும், சிலுவையையும் சுமந்து செல்லாமல் பாசத்தை சுமந்து சென்றதால் அவரால் இளையோரை அணுகிச்செல்ல முடிந்தது என்று கூறினார்.

அருட்பணியாற்றுவோர் குறிப்பிட்ட நேரங்களில் மட்டும் பணியாற்றும் அலுவலர்கள் அல்ல, மாறாக முழு நேரமும் தன்னைச் சுற்றியிருப்போருக்காக உழைக்கவும் அவர்களுக்காகப் போராடவும் துணிந்தவர்கள் என்று திருத்தந்தை தன் மறையுரையில் மேலும் வலியுறுத்திக் கூறினார். தன் குழந்தைப் பருவம் முதல் துன்பங்களைத் தாங்கி புடமிடப்பட்டதால் புனித டொன் பொஸ்கோ பரந்து விரிந்த மனதுடன் இளையோரைத் தேடிச் செல்ல முடிந்தது என்று கூறினார் திருத்தந்தை.

➡ 15

# மனித வர்த்தகத்திற்கு எதிராக திருத்தந்தையின் செபக் கருத்து



மனித வர்த்தகம், கட்டாயப் பாலியல் கொடுமை, வன்முறை ஆகியவற்றால் பாதிக்கப்பட்டோரை தாராள மனதுடன் வரவேற்கும் வரத்திற்காக செபிப்போமாக. “அடிமைத்தனம் வேறு ஏதோ ஒரு காலத்தில் நடைபெற்றது அல்ல, அது நம் காலத்திலும் தொடர்ந்து வருகின்றது. மனித குலத்திற்கு எதிரான இக்குற்றத்திற்கு நாமும் ஏதோ ஒரு வழியில் உடந்தையாக இருக்கின்றோம். எனவே, இக்குற்றத்திற்கும், நமக்கும் தொடர்பில்லை என்று நம்மால் கை கழுவ முடியாது” என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், பெப்ரவரி 07ஆம் திகதி அன்று வெளியிட்ட ஒரு காணொளிச் செய்தியில் கூறியுள்ளார். ஒவ்வொரு மாதமும், திருத்தந்தையின் செபக்கருத்துக்களை, காணொளி வடிவில் வழங்கிவரும், இயேசு சபையினரின், செபத்தின் திருத்தூதுப் பணிக்குழு வெளியிட்ட “The Pope Video” காணொளியில், நவீன அடிமைத்தனம், மனித வர்த்தகம் ஆகியவற்றை மையப்படுத்தி திருத்தந்தை தன் கருத்துக்களை வழங்கியுள்ளார். முற்காலத்தில் இருந்ததைவிட இன்னும் சொல்லப்போனால் அக்காலத்தைவிட அதிகமான வடிவங்களில் அடிமைத்தனம் நம்மிடையே பரவியுள்ளது என்பதை தன் காணொளிச் செய்தியில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்.

மனித வர்த்தகம், கட்டாயப் பாலியல் கொடுமை, வன்முறை ஆகியவற்றால் பாதிக்கப்பட்டோரை தாராள மனதுடன் வரவேற்கும் வரத்திற்காக செபிப்போமாக என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இக்காணொளிச் செய்தியை நிறைவு செய்துள்ளார்.

மனித வர்த்தகம் மற்றும் அடிமைத்தனம் ஆகிய கொடுமைகளுக்கு உள்ளான புனித ஜோசப்பின் பக்கித்தா (Josephine Bakhita) அவர்கள் இறையடி சேர்ந்த 8ஆம் திகதி மனித வர்த்தகத்திற்கு எதிராக விழிப்புணர்வு மற்றும் செபங்களை மேற்கொள்ளும் உலக நாள் கடைப்பிடிக்கப்படுவதையொட்டி திருத்தந்தை வழங்கியுள்ள செபக்கருத்து இவற்றைக் குறித்து நம்மை சிந்திக்க அழைக்கின்றது.●


**மன்னா வாசகர்களே,**

மன்னா பத்திரிகைக்கான பணத்தை காலம் தாமதிக்காமல் உடனடியாக வழங்கி உங்கள் அன்பான ஒத்துழைப்பை மன்னா விநியோகஸ்தர்களுக்கு வழங்குங்கள்!


# புதுப்பித்தலின் முக்கியத்துவத்தை உணரும் காலத்தில் நாம் உள்ளோம்



நன்மையை நோக்கிய பாதையில் மகிழ்ச்சியுடன் நடைபோட நன்னெறி இறையியலாளர்கள் உதவமுடியும். புனித அல்போன்ஸ் கல்விக்கழகம் ஆரம்பிக்கப்பட்டதன் 70ஆம் ஆண்டு கொண்டாட்டங்களையொட்டி அக் கல்விக்கழகத்தின் அங்கத்தினர்களை திருப்பீடத்தில் சந்தித்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் நன்னெறி இறையியலைக் கற்பிப்பதில் அவர்கள் ஆற்றிவரும் பங்களிப்பைப் பாராட்டினார். ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ள சிறப்புப் பங்களிப்பைக் குறித்து இக் கல்விக்கழகம் மகிழும் அதேவேளை இறை மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு இணைந்த வகையில் பதிலளிக்க துணிச்சலான முடிவுகள் எடுக்கப்படவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார் திருத்தந்தை.

இன்றைய உண்மை நிலைகளுக்கு ஏற்ற வகையில் நிலைப்பாடுகள் எடுக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்திய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் புதுப்பித்தலின் முக்கியத்துவத்தை உணரும் ஒரு காலத்தில் நாம் இருக்கின்றோம் என்பதையும் நினைவூட்டினார். நன்மையை நோக்கிய பாதையில் மகிழ்ச்சியுடன் நடைபோட இறையியலாளர்கள் உதவமுடியும் என்பதனையும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் எடுத்துரைத்தார்.

பாதுகாப்பற்ற நிலைகளாலும், ஏழ்மையாலும் வாழ்வின் ஓரத்திற்குத் தள்ளப்படுவதாலும், துன்பங்களை அனுபவிக்கும் மக்களின் குரல்கள் அனைவராலும் செவிமடுக்கப்பட வேண்டும் என்பதனையும் வலியுறுத்திய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் பிறர் அன்பிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும் என்ற நற்செய்தி மதிப்பீடு இதற்கு உதவும் என்று கூறினார். பயன்படுத்தப்பட்டு பின்னர் குப்பைபோல் மனிதர்களை வீசி எறிவது, சுயநலக் காரணங்களால் இயற்கை சுரண்டப்படுவது, வருங்காலம் குறித்து அச்சத்துடன் ஏழைகள் வாழ்வது போன்ற நிலைகளை களைந்தெறிய நன்னெறி இறையியலாளர்கள் தங்கள் பங்கை ஆற்றவேண்டிய தேவையையும் வலியுறுத்தினார் திருத்தந்தை பிரான்சிஸ்.●

புதுப்பித்தல் ஆண்டு சிறப்புக் கட்டுரைகள்

# புதிய உறவுகள் புதிய பணிகள்

பல நூற்றாண்டுகளாகத் திருச்சபையில் தூய ஆவியானவர் மறக்கப்பட்ட கடவுளாகவே விளங்கிவந்தார். தொடக்கத்திருச்சபையின் உயிர்நாடியாக, உள்ளிருப்புச் சக்தியாக செயற்பட்டவர் காலப்போக்கில் படிப்படியாக ஓரங்கட்டப்பட்டார். அவரது உடனிருப்போ, ஆற்றலோ சரிவர உணரப்படவில்லை, செயற்பாடுகளோ அவ்வளவாக இனங்கண்டு கொள்ளப்படவில்லை. மாறிவரும் காலச்சூழலிற்கேற்ப தூய ஆவியானவர் விடுக்கும் அழைப்பிற்குச் செவிகொடுக்காமல் திருச்சபை ஆடம்பரத்திலும், அதிகாரப்போக்கிலும் மதிமயங்கி நிறுவன அமைப்புக்குள் பாதுகாப்பாக முடங்கிக் கிடந்தது. தனது இயல்பு, அமைப்பு, பணி ஆகியவற்றை கிறிஸ்துவோடு மட்டும் தொடர்புபடுத்தி, எல்லாம் அவராலேயே நிறுவப்பட்டதாக, எல்லா அதிகாரமும் அவரிடமிருந்து வருவதாகப் பறைசாற்றித் தனது தெய்வீகத்தன்மையை நிலைநாட்டுவதில் கண்ணும் கருத்துமாயிருந்தது. இதனால் ஏற்பட்ட தாக்கமும், பாதிப்பும் இன்றுவரை திருச்சபையில் தொடருவதையும் அதன் வாழ்விலும், பணியிலும், சிந்தனையிலும், செயற்பாட்டிலும் வெளிப்படுவதையும் காணலாம்.

இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் விளைவாக மறுமலர்ச்சிக்கான அறிகுறிகள் திருச்சபையில் ஆங்காங்கே அரும்பியுள்ளன. காலத்தின் அறிகுறிகளை துளாவி ஆராய்ந்து இறைவார்த்தையின் ஒளியில் தன்னை மாற்றி அமைப்பதற்கான முயற்சியில் அது ஈடுபட்டுள்ளது. இம்முயற்சி திருவினையாக வேண்டும். திருச்சபை இயேசுவின் சீடர்களின் இயக்கமாக கொள்கைப்பிடிப்புள்ள, உயிர்த்துடிப்புள்ள சமூகமாக நாளும் மலரவேண்டும். இது தூய ஆவியானவர் விடுக்கும் அழைப்பு. இயேசுவின் பிறப்பின் மாபெரும் யூபிலியைக் கொண்டாடுவதற்காகத் திருச்சபை தன்னைத் தயாரிக்கும் இக்காலகட்டத்தில் 21ஆம் நூற்றாண்டு என்னும் புது யுகத்திற்குள் உலக சமுதாயம் அடியெடுத்து வைக்கும் இந்த வரலாற்றுச் சிறப்புமிகு தருணத்தில் தூய ஆவியானவர் விடுக்கும் இந்த அழைப்பும், அறைகூவலும் முக்கியத்துவம் வாய்ந்தவை.

குறிப்பாக திருச்சபை அவரது அழைப்பின் உட்பொருளை உணர்ந்து செயற்படவேண்டும். இன்றைய சூழலில் இயேசுவின் சீடர்களின் இயக்கமாகிய திருச்சபைக்கு ஆவியானவர் விடுக்கும் அழைப்பை பல்வேறு கோணங்களில் காண்போம்.

## அன்புறவில் வாழ்வோம்

இன்றைய திருச்சபையில் பிளவுகளுக்கும், பிரிவினைகளுக்கும் பஞ்சமில்லை. ‘கொஞ்சமோ பிரிவினைகள் அது கோடி என்றால் பெரிதாமோ’ என்று பாட்டுக்கொரு புலவன் பாரதிமொழிந்த சொற்கள் எம் இலங்கை சமுதாயத்திற்கு மட்டுமல்லாது முழுத் திருச்சபைக்கும்



முற்றிலும் பொருந்தும். திருச்சபை வெளிப்புறத்தில் ‘ஒரே சமூகம்’ என்ற தோற்றத்தை ஏற்படுத்தினாலும் அதன் உற்புறத்தில் சாதி, இனம், மொழி நிறம், பாலினம், பண்பாடு, பொருளாதாரம் ஆகியவற்றின் அடிப்படையின் பிளவுகளும், ஏற்றத்தாழ்வுகளும், அடக்குமுறைகளும் மலிந்து கிடக்கின்றன. பரிசேயர்கள் போல் சடங்குகளாலும், சம்பிரதாயங்களாலும் வெளிபுறத்தைத் தூய்மைப்படுத்தும் திருச்சபை அதன் உட்புறத்தில் ‘தன்னல விருப்புகளும்’ (மத்.23:25) ‘எல்லா வகையான அழுக்குகளும்’ (மத்.23:27) ‘போலித்தனமும் நெறிகேடும்’ (மத்.23:28) புரையோடிக் கிடப்பதை மறந்துவிட்டது. குறிப்பாக ஆயர்கள், குருக்கள், துறவிகள், பொதுநிலையினர் என எல்லா நிலைகளிலும் சாதிய உணர்வுகள் ஆழமாக ஊடுருவி இருப்பது திருச்சபை இயேசுவின் இலட்சியத்தை விட்டு விலகிச் சென்றுகொண்டிருப்பதை சுட்டிக்காட்டுகின்றது.

இயேசுவின் இலட்சியம், இறையாட்சி, அவர் போதித்தது, வாழ்ந்துகாட்டியது, தம்மையே முற்றிலும் அர்ப்பணித்து உருவாக்கியது இறையாட்சியே. அது பிளவுகளும், பிரிவினைகளும் நீங்கி, அநீதிகளும், அக்கிரமங்களும் அழித்து, மாந்தர் அன்புறவிலும், தோழமையிலும், சமத்துவத்திலும், சகோதரத்துவத்திலும் வளரும் உறவு வாழ்வு.

இத்தகைய உறவு வாழ்வை இவ்வுலகில் நிலைப்படுத்துவதற்காகத்தான் இயேசு சீடர்களின் அமைப்பாகிய திருச்சபையை உருவாக்கினார். இந்த அமைப்பில் “யூதர் என்றும், கிரேக்கர் என்றும், அடிமைகள் என்றும், உரிமைக் குடிமக்கள் என்றும் இல்லை. ஆண் என்றும், பெண் என்றும் வேறுபாடில்லை.” (கலா.3:28) ஏனெனில் திருமுழுக்குப் பெற்ற அனைவரும் ஒரே கடவுளின் பிள்ளைகள். ஒரே ஆண்டவரின் சீடர்கள். ஒரே ஆவியால் வழிநடத்தப்படுபவர்கள். மூவொரு இறைவனில் அனைவரும் அடைந்த இந்த ஒருமைப்பாட்டை விசுவாச உண்மையாக ஞாயிறு தோறும் வழிபாட்டில் அறிக்கையிடும் திருச்சபையில் பிளவுகள் நிலவுவது எவ்விதத்தில் நியாயமாகும்?

இந்நிலையில் தூய ஆவியானவர் திருச்சபையை மனமாற்றத்திற்கும், புதுவாழ்விற்கும் அழைக்கின்றார். அவரே இறைமகனை ஒன்றிணைத்து ஒருவரோடு ஒருவர் உறவுகொண்டு அன்பிலும் நட்பிலும் வளர ஆற்றலைத் தருகின்றார்.

## புத்துலகு படைப்போம்

“உலகெங்கும் சென்று நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்.” (மாற்.16:15) என்று பணித்தார் இயேசு. நற்செய்திப்பணி திருச்சபைக்குத் தூய ஆவியானவர் விடுக்கும் பிரிதொரு அழைப்பு. நற்செய்திப் பணி என்பது இயேசுவைப் பற்றி வெளிப்படையாகப் போதிப்பதில் மட்டும் முடிந்துவிடுவதில்லை. அவருடைய மதிப்பீடுகளிற்குச் சான்று பகர்வதும், அவற்றைச் சமுதாயத்தில் உருவாக்கி வளர்ப்பதும் புதிய உலகத்தைப் படைப்பதும் ஆகும். மனிதத்தைச் சிதைக்கும் அநீதிகளை வேரறுத்து மாந்தருக்கு முழு விடுதலை அளிப்பதில்தான் நற்செய்திப்பணி அடங்கியுள்ளது என்பதை இயேசுவே தெளிவாகச் சுட்டிக்காட்டியுள்ளார். தாம் வாழ்ந்த காலத்தின் சமூக, பொருளாதார, அரசியல் சூழ்நிலைகளை நன்கு அறிந்தவராய் மக்களோடு மக்களாக முழு மூச்சுடன் விடுதலைப்பணியில் ஈடுபட்டார். மனிதருக்கு எதிரான அனைத்தையும் ‘அப்பா’ இறைவனுக்கு எதிரானவையாகக் கண்டார். ஆவியின் ஆற்றலால் அவற்றை எதிர்த்துப் போராடினார். (லூக் 4:18-19) இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றும் திருச்சபையும் விடுதலைப்பணிக்காக ஆவியானவரால் அனுப்பப்படுகின்றது.

ஏழைகளைச் சுரண்டி அடிமைகளாக்கும் சமூகப் பொருளாதார அமைப்புக்களைக் கேள்விக்குட்படுத்தி அடிமைத்தனத்திற்குக் காரணமான சூழலிலிருந்து மக்களை விடுவிக்கத் திருச்சபை முனைப்புடன் போராடவேண்டும். இறையாட்சியின் மதிப்பீடுகளைச் சமுதாயத்தின் அடித்தளங்களில் உட்படுத்த வேண்டும். இறைவன் விரும்பும் புதிய சமுதாயம் படைக்கவேண்டும். இதுவே திருச்சபை இயேசுவின் மீது கொண்டுள்ள நம்பிக்கைக்கு உருக்கொடுக்கின்றது, அதை அர்த்தமுள்ளதாக்குகின்றது. 1971ஆம் ஆண்டில் உரோமையில் கூடிய ஆயர் மன்றம் இந்த உண்மையைத் தெளிவாக எடுத்தியம்பியுள்ளது. “மனித சமுதாயத்திற்கு மீட்புக்கொணர்வதும் அதை எல்லாவகை அடக்குமுறைகளிலிருந்து விடுவிப்பதும் திருச்சபையின் பணியாகும். இதுவே நற்செய்தி அறிவித்தலாகும். நீதியை நிலைநாட்ட மேற்கொள்ளும் செயற்பாடும், உலகை உருமாற்ற மேற்கொள்ளும் ஈடுபாடும் நற்செய்திப்பணியின் மையக்கூறுகள்” என்பதை திருச்சபையின் அனைத்து நிலையினரும் உணர்ந்துகொள்ளவேண்டும். ●

# குடும்ப வாழ்வைப் புதுப்பித்தல்

# குடும்பங்கள் தங்களைப் புதுப்பிக்க அழைப்பு

– அருட்தந்தை அ. பிலிப் –

## மூன்றாம் தலையீட்டை விலக்காமை

இன்பத்திலும் துன்பத்திலும், உடல்நலத்திலும் நோயிலும், கணவனும், மனைவியும் சேர்ந்து பயணம் செய்யப்போவதாக வாக்குப்பண்ணுகின்றார்கள். இவர்கள் மற்றவர்களின் உதவியை நாடும்போது அல்லது உதவி செய்கின்றோம் என்று மற்றவர்கள் இக்குடும்பத்தினுள் நுளையும் போது விருந்தாளிகள் நிரந்தரமாக கூடாரம் அடித்துவிடுகின்றார்கள். உதவி செய்வதற்கு பதிலாக இவர்களே இக்குடும்பத்தை நடத்துகின்றார்கள். இவர்களின் தலையீட்டால் கணவனும், மனைவியும் சுயமாக இயங்கமுடியாது திண்டாடுகின்றார்கள்.

## தொடக்கத்தில் இருந்தே சேர்ந்து செபிக்காமை

கணவன், மனைவி மட்டும் குடும்பத்தின் உறுப்பினர்கள் அல்ல. இவர்களை இணைத்த வானகத் தந்தையும் இவர்களோடு சேர்ந்தே குடும்பத்தில் வாழ்கின்றார். எனவே குடும்பத்தில் இவருக்கு உரிய இடத்தைக் கொடுக்கவேண்டும். இருவரும் ஒருவர் ஒருவருக்காக வானகத் தந்தையிடம் வாய்விட்டுச் செபிப்பதை மற்றவர் கேட்கவேண்டும். இவ்வாறு செபிக்கும்போது ஆக்கபூர்வமான தட்டிக்கொடுத்தல்களும், குணமாக்கும் ஆன்மீக சுகவாழ்வும் இவர்களில் நிகழ்வதை இவர்கள் காண்பார்கள்.

### இ. குடும்ப உறவை மீளப் பலப்படுத்தும் சில வழிகள்

1. பிடிவாதத்தில் இருந்து இறங்கி தான் பிழைவிட்டதை ஒத்துக்கொள்ளுதல்.
2. இருவரும் தனித்திருந்து மனம் திறந்து பேசி ஒருவரை ஒருவர் மன்னித்தல்.
3. தன் பிழைகளுக்கு என்ன கைமாறு செய்யப்போவதாக மற்றவரிடம் தெரியப்படுத்துதல்.
4. பின்னர் இருவரும் பாவமன்னிப்பு அருட்சாதனத்தை அணுகுதல்.
5. தினமும் குறிப்பிட்ட நேரத்தில் இருவரும் சேர்ந்து செபிக்கத் தீர்மானித்தல்.

### ஈ. குடும்பத்தின் அர்ப்பண வாழ்வுக்கான சில வழிகள்

1. இறைபிரசன்ன ஆன்மீகம். 2. பணிவு என்ற நற்செய்தி அறிவுரை. 3. ஏழ்மை என்ற நற்செய்தி அறிவுரை. 4. கற்பு என்ற நற்செய்தி அறிவுரை. 5. இறையாட்சிக்கான குடும்பப் பணிகள்.

சென்றமாதத் தொடர்ச்சி



## இறைபிரசன்ன ஆன்மீகம்

வானகத் தந்தையின் முன்னிலையில் வாழ்வதே இறை பிரசன்னம். அவர் என்முன்னே நான் அவர் முன்னே ஒருவரை ஒருவர் பிரசன்னப்படுத்தும் போது நான் அவருக்கு பிரசன்னமாக இல்லாத போதிலும் அவர் எனக்கு என்றும் பிரசன்னமாய் இருக்கின்றார். மற்றவர்களை குறை கூறுவதால் நான் அவர்களில் இருக்கும் வானகத் தந்தையின் பிரசன்னத்தை உணர மறுக்கின்றேன். நிகழ்பவை பற்றி முறையிடுவதால் என்னைச் சுற்றியுள்ள அவரின் பிரசன்னத்தை உணர மறுக்கின்றேன். அவரின் பிரசன்னத்தை என்னில் ஆழமாக்க நான் மற்றவர்களுக்கு அன்புப்பணிகள் செய்வதாலும், அவர்களோடு சமாதானத்தில் இருப்பதாலும் உறுதி செய்து கொள்கின்றேன். என்ன நிகழ்ந்தாலும் அவருக்கு தெரியும் என்ற பாணியில் வாழ நான் கற்றுக் கொள்கின்றேன். கணவனும் மனைவியும் இறைபிரசன்னத்தை இவ்வாறு உணரும் போது தங்களிடையே உள்ள பிடிமானத்தை இறுக்கமாக வைத்துக் கொள்கின்றார்கள்.

## பணிவு என்ற நற்செய்தி அறிவுரை

தலைவரின் கூற்றுக்கு பணிதல் என்பதை கீழ்ப்படிதல் என்று புரிந்து கொள்கின்றோம். இது ஒரு நிறைவான விளக்கம் அல்ல. ஆனால் பணிவு என்பது வானகத் தந்தையின் திருவுளத்திற்கு தன்னை ஆளாக்கிக் கொள்வதாய் இருக்கின்றது. அவரின் விருப்பத்தை கணவனும், மனைவியும் சேர்ந்து செயற்படுத்தும்போது அவர்கள் பணிவு என்ற நற்செய்தி அறிவுரையை வாழ்கின்றார்கள். இவ்வாறு அவர்கள் தாழ்ச்சியில் ஒருவருக்கு ஒருவர் பணிந்து வாழவும் கற்றுக் கொள்கின்றார்கள்.

## ஏழ்மை என்ற நற்செய்தி அறிவுரை

எதுவும், குறிப்பாக பணம் இல்லாத நிலையை ஏழ்மை என்று புரிந்து கொள்கின்றோம். இது ஒரு தவறான பார்வை. ஏழ்மை என்பது வானகத் தந்தையின் பராமரிப்பில் தங்கியிருப்பதை காட்டுகின்றது. கணவனும், மனைவியும் தங்கள் தேவைகள் அனைத்திற்கும் வானகத் தந்தையில் தங்கியிருந்து தங்களிடம் உள்ளவற்றில் மற்றவர்களுக்கும் பகிர்ந்து கொடுக்கும் பெரிய மனத்தில் ஏழ்மை என்ற நற்செய்தி அறிவுரையை வாழ்கின்றார்கள். தங்களின் ஆடம்பர வாழ்க்கையை தவிர்த்து மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் இவர்கள் தங்கள் தேவைகளை நிறைவு செய்து கொள்கின்றார்கள்.

## கற்பு என்ற நற்செய்தி அறிவுரை

உடலுறவு அற்ற நிலையை கற்பு என்று நாம் என்னுகின்றோம். இது ஒரு தவறான சிந்தனை. கற்பு என்பது வானகத் தந்தையின் அன்பை சுவைத்து அதை மற்றவர்களுக்கு வழங்கும் ஓர் உயரிய பண்பு. இதனை மணத்துறவு நிலையிலோ அல்லது திருமண நிலையிலோ ஒருவர் செயற்படுத்த முடியும். துறவிகள் மணத்துறவு நிலையில் வானகத் தந்தையின் அன்பை தாங்கள் சுவைத்து மற்றவர்களுக்கு வழங்குகின்றார்கள். கணவனும், மனைவியும் ஒருவர் மற்றவருக்கு பிரமாணிக்கமாய் இருக்கும் நிலையில் இதை நிகழ்த்துகின்றார்கள். கணவனும், மனைவியும் ஏற்படுத்தும் குடும்பம் இறையாட்சியின் புளிக்காரமாய் இருக்கின்றது. இவர்கள் தாங்கள் வாழும் சூழலில் கிறிஸ்துவை மற்றவர்களுக்கு தம் சாட்சிய வாழ்வால் கொடுக்கின்றார்கள். மற்றைய குடும்பங்களின் இன்ப, துன்பங்களிலும் நோய், நொடி, இழப்புக்களிலும் இரண்டறக் கலந்து இதை வெளிப்படுத்துகின்றார்கள். தூய ஆவியாரின் துனையோடு தங்கள் செப வாழ்வை மற்றவர்களுக்கும் கொடுத்து எடுத்துக் காட்டான குடும்பமாய் திகழ்கின்றார்கள். பங்குப் பணிகளில் பங்கேற்பதன் மூலம் பங்கை உயிரோட்டம் உள்ளதாக இவர்கள் வைத்திருக்கின்றார்கள். ●

புதுப்பித்தல் ஆண்டு சிறப்புக் கட்டுரைகள்

# மனமாற்றம் அறவாழ்வின் பொற்காலம்

### தொடக்கமாக:

மனிதன் மட்டுமே இவ்வுலகில் தனது எதிர்காலத்தை தன் கையில் வைத்திருக்கின்றான். சுதந்திரப்பறவையாக அவன் சுமந்து செல்லும் முடிவுகள்தான் எதிர்கால வைகறைகளை நிட்சயிக்கின்றன. விடியலைத் தேடிச்செல்லும் இத்தொடர் பயணத்தில் எத்தனை தோல்விகள், முரண்பாடுகள், முடியாமைகள் இவை ஒவ்வொன்றுமே அறவாழ்வில் மனிதன் முழுமை பெறாத நிலையைக் குறிக்கின்றன. தான் சென்றுகொண்டிருக்கும் பாதையின் உண்மை நிலையை உணராததால் (1யோவா.1:8) மனிதன் ஒளியில் நடப்பதில்லை. தன்னறிவு பெற்றவர் மட்டுமே இறை உறவு, பிறர் உறவு, சமுதாய உறவு எனும் எல்லா நிலைகளிலும், விழிப்பும், தெளிவும் கொண்டு முன்னேறுகின்றனர். இத்தகைய முன்னேற்றத்திற்கு மனமாற்றம் என்பது ஒரு தொடர் தேடலாக அறவாழ்வில் முழுமை பெறும் முயற்சியாக உறவு நிலைகளில் உன்னதம் பெறும் தளரா போராட்டமாக அமைகின்றது. மனமாற்றத்தை நாம் இங்கு அறநெறிப் பார்வையில் பொருள் கொள்ள முயல்வோம்.

### அந்நியமாதல்

அறவாழ்வில் பல புரட்சிகள் நிகழ்கின்றன. மனித வாழ்வின் இத்தகைய தவறுகள் பிறரை ஊனப்படுத்துகின்றன. மனிதத் தவறுகள் தனிமனிதனோடு நின்று விடாமல் அநீத நிறுவனங்களாகவும், அமைப்புக்களாகவும் உருமாறிப் பலரது மனிதத்திற்கு அச்சுறுத்தலாகவும் மாறிவிடுகின்றன. எனவே அறவாழ்வில் நிகழும் தவறுகள் நம்மையே நம்மிடமிருந்து அந்நியப்படுத்துகின்றன. ஏனெனில் இத்தகைய தவறுகள் நிகழும்போது நம் வாழ்வில் மிக உயர்வாக மதிக்கும் விழுமியங்களை அர்த்தமற்றதாக்குகின்றோம். எனவே நாம் நல்லவர்களாகவும், சிறப்பியல்புள்ளவர்களாகவும் இருந்திருக்க வேண்டிய நிலையிலிருந்து அந்நியப்படுத்தப்படுகின்றோம். இது நமக்குள்ளே நிகழும் சிதைவு. நாம் எப்படி இருக்கவேண்டுமென்று விரும்புகின்றோம் என்பதற்கும் எப்படி உண்மையிலே இருக்கின்றோம் என்பதற்கும் ஓர் இடைவெளி. இதனால்தான் சில தவறுகள் நிகழ்ந்த பிறகு நான் இதை எப்படிச் செய்தேன் என வியக்கும் அளவிற்கு நம்மையே விமர்சனப்படுத்துகின்றோம். அறவாழ்வில் நாம் செய்யும் பெரும் தவறுகள் நம்மிலே நாம் தகுதி அற்றவர்கள் என்ற உணர்வை ஏற்படுத்துகின்றன. நமது வாழ்வின் மையத்தையே பாதித்து நாம் குணம் பெற அழைப்பு விடுக்கின்றன.

நம்மை மையப்படுத்தி வாழ்வதனால் நாம் நம்மிடமிருந்தே அந்நியப்படுவது மட்டுமன்றிப் பிறரிடமிருந்தும் ஒதுங்கி விடுகின்றோம். பிறர்மீது நமக்குள்ள கடமை என்னவென்பதை உணராமலே வாழ்வதுதான் இன்று பலரை அநீதத்திலும், வறுமையிலும் உழல வைக்கின்றது என விடுதலை இறையியலாளர் பலர் கருதுகின்றனர். நமது வாழ்வும், மனமும் எதை மையப்படுத்திச் சுழல்கின்றனவோ அதைப் பொறுத்தே பிறரோடு இணைந்த உறவு வாழ்வா அல்லது பிறரை அந்நியப்படுத்தும் சுயநல வாழ்வா என்பது முடிவாகின்றது! செல்வத்தை நமக்கென்று பெருக்கிக் கொள்வதே நமது இலக்கு என்றால் மற்றெல்லோரும் நம் உறவு வட்டத்தின் விளிம்பிற்கு ஒதுக்கப்படுகின்றனர். இங்கு மற்றெல்லோருமே நம்மால் அந்நியப்படுத்தப்பட்டு ஒதுக்கப்படுகின்றனர்.

பல சமய மரபுகள் அறவாழ்வில் நிகழும் தவறுகளுக்கும், இறை உறவிற்கும் நெருங்கிய தொடர்பைக் கற்பிப்பதில்லை. ஆனால் கிறிஸ்தவ மரபில் இது மிக முக்கியத்துவம் பெறுகின்றது. பிறரன்பில் தவறுபவர் இறையன்பில் முழுவதுமாகத் தவறிவிட்டார். "ஒளியில் இருப்பதாகச் சொல்லிக்கொண்டு தம் சகோதர, சகோதரிகளை வெறுப்போர் இருளில்தான் இருக்கின்றார்கள்" (1யோவா.2:9) யோவானைப் பொறுத்தவரை தன் சகோதரனை வெறுப்பவன் இறைமகனை அறியாதவன். இவை இரண்டிற்கும் நெருங்கிய தொடர்புண்டு. மத்தேயு 25ஆம் அதிகாரத்தில் எளியவருக்குச் செய்ததெல்லாம் எனக்கே செய்தீர்கள் எனும்போது கிறிஸ்தவ அறவாழ்வின் அடிப்படை உண்மையை முன்வைக்கின்றது. பிறரை அன்புசெய்வது இறைவனை அன்பு



செய்வது பிறரை வெறுப்பது இறைவனை வெறுப்பது. இது இறைவனிடமிருந்து நாம் அந்நியப்படுத்தி நிற்பதை தெளிவாக்குகின்றது. திடீரென நிகழ்வதன்று மாறாக ஒரு மரம் எப்படி வேர்களை விட்டு கிளைகளைப் பரப்பி வளர்ந்து கனிகளைத் தருமோ அதுபோலவே மனமாற்றத்தால் விளையும் ஆவியின் கனிகளும் பலன்தர நீண்ட காலம் எடுக்கின்றன.

(காண்.கலா. 5:22-26) தனிமனித மனமாற்றம் என்பது வெறும் இறை மனித உரையாடல் மட்டுமன்றித் தம்மை உணர்ந்து தமது அழைப்பைத் தெளிந்து பொறுப்போடு உலகில் அர்ப்பணிக்கும் ஒருவர் இறைவன், இயேசு, திருச்சமூகம் இவை மூன்றையும் உறவால், உண்மையால், அன்பால் நெருங்கி வருகின்றார் என்பதே. எனவே அவரது அறவாழ்வு முப்பரிமாண நிலைகளில் ஆழம் பெறுகின்றது. அர்த்தம் பெற்றுத் தனித்தன்மை அடைகின்றது.

### மனமாற்றம் ஆள்தன்மையுள்ள பதிலிருப்பு

இயேசுவின் ஆவி மனமாற்றத்திற்காக நம்மிடம் விடுக்கும் அழைப்பிற்கு நாம் ஒவ்வொருவரும் ஆள் தன்மையுடன் பதிலிருக்க வேண்டுமென எதிர்பார்க்கின்றார். நமக்குத் தரப்பட்ட வாழ்வென்னும் கொடை வளர, வளம்பெற இறை ஆவி தொடர்ந்து நம்மை உறுதிப்படுத்துகின்றார். எனவே வாழ்வென்னும் கொடையை அன்பில் ஆழமாக, அகலமாக இறை அன்பின் சாயலாக உருமாற்றுவதே நமது அறவாழ்வுப் பொறுப்பு. (காண் எபே 3:15-19) இத்தகைய முயற்சி இறை பெருமையையும், அருளையும், இரக்கத்தையும் நம் வாழ்வில் ஆழமாக உணரச் செய்கின்றது. இந்த உணர்வுதான் உலகிலுள்ள ஒவ்வொருவருக்கும் நீதியையும், அமைதியையும் வழங்கவேண்டிய துணிவையும் அர்ப்பணத்தையும் நம்மில் உருவாக்குகின்றது. இந்த அர்ப்பணத்தில் நிலைப்பதற்கு எதிராகத் தடைகள் வரலாம் ஆனால் கடவுளே நம் சார்பாக நிற்கும் பொழுது நமக்கெதிராக எவர் எழ முடியும்?

### நெருங்கி வருதல்

அறநெறி தவறுகளால் தம்மிடமிருந்தும், பிறரிடமிருந்தும், இறைவனிடமிருந்தும் அந்நியப்பட்டு நிற்கும் மனிதன் இந்த மூன்று நிலைகளிலும் உறவால் நெருங்கி வருவதே மனமாற்றம். இதுவே நம் மத்தியில் செயலாற்றும் இறை ஆட்சியை ஏற்று நற்செய்தியை நம்புவது. (மாற்.1:15) இறை அழைப்பு நம் ஒவ்வொருவரையும் மகனில் தோழமை கொள்ள அதனால் அவர் காட்டிய எளியோரில் தோழமை கொள்ள அழைக்கின்றது. (காண்.1கொரி1:9) நாமே வாழ்வில் எல்லாம் என்ற தன்மை நிலையிலிருந்து விடுபட்டு இறை நம்பிக்கையை அன்பில் செயற்படுத்தும் இறையாட்சி செயற்பாடே மனமாற்றம். (காண் கலா5:6)

### மனமாற்றம் விழிப்புணர்வாக

அநீதமும் அடிப்படைவாதப் போக்குகளும், மனிதத்தை அந்நியப்படுத்தும் இந்தியச் சூழலில் ஒவ்வொருவரும் தங்களுக்கு இறைவன் தந்துள்ள அழைப்பை உணர்வதே மனமாற்றம். தமது அழைப்பைச் சரியாக உணர்ந்து பொறுப்புள்ள தனி மனிதர்களாக மனிதத்திற்காகத் தம்மை அர்ப்பணித்து வாழ ஆரம்பிக்கும்பொழுது ஒவ்வொருவரும் இறை நம்பிக்கையில் வளர்கின்றார்கள். சவுலுக்குத் தமஸ்கு வழியில் நிகழ்ந்தது போல இந்த மனமாற்றம்.

### திருச்சபையில் மனமாற்றம்

தனிமனித மனமாற்றங்கள் தம்மிலே முடிந்துவிடுபவை அல்ல அவை திருச்சபையில் அசைவுகளை, ஆக்கங்களை, அன்புக்கனிகளை பிறப்பிக்கின்றன. திருச்சபையில் ஒவ்வொருவரும் இறைவார்த்தையையும், இறை உடலையும் ஒரே குடும்ப உணர்வோடு உண்ணும்பொழுது ஒருவர் ஒருவரைச் சிறப்பான பகிர்வால் உறுதிப்படுத்திக் கொள்கின்றனர். (மத்.10:8) தங்களது பகிர்வால் தூய பவுல் கொலோசேய திருச்சபைக்குக் கூறியதுபோல "நன்றியோடு உளமாரப்பாடிக் கடவுளைப் போற்றுகின்றனர்." (கொலோ.3:16) யாரும் தனித்தீவல்லர். யாரும் வாழ்வுப் பாலைவனத்தைத் தனியே கடப்பதில்லை.

கிறிஸ்தவ திருச்சமூகங்களில் ஒருவர் ஒருவருக்கு மாதிரியாகவும், ஒருவர் மற்றவரை விமர்சனப்படுத்துவதன் வழியாகவும், கற்றுக்கொடுத்து, கற்றுக்கொண்டு வாழ்வதால் கிறிஸ்துவின் உடலைக் கட்டி எழுப்புதல் தொடர்கின்றது. (காண் எபே.4:11-16) இறை மனிதத் தோழமைச் சூழலில் விமர்சனங்கள் கூட பலன் தருகின்றன. கண்களும், காதுகளும் திறக்கப்பட்டு வாழ்வின் உண்மை நிலைகள் புலப்படுகின்றன. எனவே ஒரு திருச்சபை முழுவதுமே அன்புக் குடும்பமாக இணைந்து இப்பொழுது இங்கு வெளிப்படும் இறைத் திருவுளம் என்ன என்பதை உணர்ந்து கொள்கின்றது. நன்மை எது, இறைவனுக்கு விருப்பமானது எது, நிறைவானது எது என்பவை தெளிவாகி இங்கு நடைபெற வேண்டியவை நிச்சயிக்கப்படுகின்றன. (உரோ 12:2)

### பிளவுபட்ட உலகில் மனமாற்றம்:

"வாக்கு மனிதர் ஆனார்" (யோவா 1:14) என்பது உண்மையென்றால், வரலாற்றால், காலத்தால், இடத்தால் இயேசு கட்டுப்படுத்தப் பட்டவரென்றால் நாமும் நம் செயற்பாடுகளை இத்தகைய சூழலுக்குள்தான் நிறைவேற்ற வேண்டும். நமது இடமும், காலமும் ஒரு பிளவுபட்ட அநீத உலகமென்றால் கிறிஸ்தவ மனமாற்றமும் இந்தச் சூழலில் தான் நிகழ வேண்டும். நம்மைச்சுற்றி நிகழும் அநீதம், அக்கிரமம், அடக்குமுறை, சுரண்டல், வறுமை, பசி, கொடுமைகளைக் கண்டு இவை ஏன் அன்றாட நிகழ்வுகளாகிவிட்டன என்ற கேள்வியை எழுப்ப வேண்டும். சமூக, அரசியல், பொருளாதார சக்திகளால் இந்நிலைகள் நியாயப்படுத்தப்பட்டுத் தொடர்வது சரியா என்ற கேள்வி எழும்பாவிடில் உண்மையான மனமாற்றம் ஒருவரில் நிகழவில்லையென்றே சொல்லலாம்.

அறவாழ்வில் நாம் இறைவனிடமிருந்து பெற்றுக்கொண்ட நன்மை தீமைகளைப் பிரித்தறியும் ஆற்றல் இங்கு செயற்படுத்தப் படவில்லையென்றே அர்த்தமாகும். நமது அறிவு குறுகியது. நமது பார்வைகள் வாழ்நிலை சூழல்களால் கட்டுப்படுத்தப்படுபவை. திருச்சபையிலும், உலகிலும் நாம் கொள்ளும் தொடர் கருத்துப் பரிமாற்றங்களே நமது வாழ்வுப் பார்வைகளை, வாழ்நெறிகளை, அறவாழ்வுச் செயல் நெறிகளை சரியானதாக்கும். அப்பொழுது நாம் தொடரும் வாழ்வுப் பயணம் புதிய பரிமாணங்களோடு தொடர் வளர்ச்சியாக இறை ஆட்சிக்கு இயைந்த மாற்றங்களை நம்மிலும், உலகிலும் பிறப்பிக்கும்.

### முடிவாக:

நாம் ஒவ்வொருவரும் நிறைவாழ்வை நோக்கிச் செல்ல அழைக்கப்பட்டிருக்கின்றோம். நிறைவை நோக்கிய இத் தொடர் தேடலில், மனமாற்றம் என்பது நமது அழைப்பை உணர்ந்து நாம் நம்மிடமிருந்தும், பிறரிடமிருந்தும், இறைவனிடமிருந்தும் அந்நியப்படுத்தலைத் தவிர்ப்பது. அதே நேரத்தில் தனிமனிதர்களாக மட்டுமன்றி, திருச்சபையாக, திருச்சமூகமாக நம்மையும், நம் சமூகத்தையும் அன்பும், நீதியும் நிறைந்ததாக நாம் உருமாற்ற எடுக்கும் தொடர் முயற்சிகளே அற வாழ்வில் நாம் செல்ல வேண்டிய சரியான வழி. அதுவே இறைவன் எதிர்பார்கக்கும் உண்மை வழி. ●

# கிறிஸ்துவுக்குள் புதிய வாழ்வுக்கு அழைக்கும் மறைசாட்சியம்

வட ஆப்பிரிக்காவின் கார்தேசு நகரில் நல்ல குடும்பத்தில் பெர்பெத்துவா பிறந்தார். கிறிஸ்துவின் மீது அசைக்கமுடியாத விசுவாசம் கொண்டு வாழ்ந்தார். இவருக்கு உதவிசெய்ய பெலிசித்தா இருந்தார். இவரும் கிறிஸ்துமீது அதிக பற்றுறுதி கொண்டிருந்தார். உரோமைப் பேரரசன் செப்திமியூஸ் செலேரூஸ் ஆட்சிக்காலத்தில் கிறிஸ்தவர்களுக்கெதிராக ஆணை பிறப்பிக்கப்பட்டுத் துன்புறுத்தப்பட்டனர். அவர்களில் பெர்பெத்துவாவும், பெலிசித்தாவும் அடங்குவார்.

கிறிஸ்துவைத் தம் மையமாக்கிக் கொண்ட பெர்பெத்துவாவும் அவர்தம் பணிப்பெண் பெலிசித்தாவும் சிறையில் அடைக்கப்பட்டனர். அந்நேரத்தில் பெர்பெத்துவாவின் தந்தை சிறைக்கு வந்து தாம் அவரிடம் கொண்டுள்ள அன்பையும் தமது முதிர் வயதில் தமக்கு ஆதரவாக அவர் இருக்கவேண்டுமென்றும் எடுத்துக்கூறிப் புதிய மறையை விட்டுவிட்டு வரும்படி எவ்வளவோ கெஞ்சினார். பெர்பெத்துவா தம் தந்தையின் ஆதங்கத்தையும் ஆவலையும் மனத்தில் உண்டான குழப்பத்தையும் தாம் தேர்ந்துகொண்டுள்ள கடவுளாகிய கிறிஸ்துவையும் ஒப்புமைப்படுத்திப் பார்த்ததில் கிறிஸ்துவின் மீது உள்ள அன்பே உயர்ந்தது.

ஆகவே பெர்பெத்துவா தம் தந்தையின் மீது இரக்கம் காட்டிய போதிலும் அவரது விருப்பப்படி நடக்க இயலாது என்று உறுதிபடக் கூறினார். முகவாட்டத்துடன் சென்ற தந்தை 15 நாட்கள் கழித்து மீண்டும் சிறைக்கு வந்து தம் மகள் பெர்பெத்துவாவிடம் தம் பொருட்டு புதிய மறையை புறக்கணிக்காவிட்டாலும் அவளது குழந்தை நலனுக்காகவும், அதன் எதிர்காலத்திற்காகவும் பழைய பாரம்பரியம் கொண்ட உரோமை மறைக்குத் திரும்புமாறு மனமுருகி வேண்டினார். ஆனால் மனத்தில் உறுதிப்பாடு கொண்ட பெர்பெத்துவா தம் தந்தையின் இந்த விண்ணப்பத்தையும் நிறைவேற்றவில்லை. பெர்பெத்துவாவிற்குக் கிறிஸ்து ஒருவரே வாழ்வு, வழி, ஒளி எல்லாம் விளைவு? கொடிய மிருகங்களிடம் எறியப்பட்டு இறப்பது என்ற அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டது.

இந்த நேரத்தில் பெலிசித்தா நிறை கர்ப்பிணியாக இருந்தார். ஆகவே அவரது மறைச் சாட்சியம் தள்ளிப்போடப்படலாம் என்று ஓர் எதிர்பார்ப்பு கிறிஸ்தவர்கள் மத்தியிலும் பெலிசித்தாவிடமுமே இருந்தது. ஆனால் பெலிசித்தாவோ தான் பெர்பெத்துவாவுடனேயே மறைசாட்சியம் எய்தவேண்டும் என பேராவல் கொண்டார். ஆகவே கிறிஸ்துவிடம் தமக்குக் குழந்தை விரைவில் பிறக்கவேண்டும் என்று உருக்கமாக வேண்டினார். வேண்டுதல் கேட்கப்பட்டு குழந்தை பிறந்தது. அதன்பின் பெலிசித்தாவும், பெர்பெத்துவாவும் மிருகங்களிற்கு இரையாகத் தூக்கி எறியப்பட்டனர். மிருகங்களுடன் போர் புரிவதை சாத்தானிடம் போர் புரிவதாக நினைத்தனர். இருவரும் மிருகங்களுக்கு இரையாகி மறைசாட்சியம் எய்திக் கடவுளுக்குச் சான்று பகர்ந்தனர்.

புனித பவுலடியார் கூறுவதுபோல் 'வாழ்வது நானல்ல கிறிஸ்துவே என்னில் வாழ்கின்றார்.' கிறிஸ்துவின் உறுதுணையில் தன்னையே வென்றுவிட்ட சீடத்திகளுக்கு மிருகத்துடன் போராட்டமோ, துன்பமோ, சாவோ ஒரு பொருட்டே அன்று. கிறிஸ்துவில் ஏற்கெனவே இறந்த ஒருவருக்கு இறப்பு என்பது ஓர் சடங்கு மட்டும்தானே? ●

**மன்னா வாசகர்களே,**

மன்னா பத்திரிகைக்கான பணத்தை காலம் தாமதிக்காமல் உடனடியாக வழங்கி, உங்கள் அன்பான ஒத்துழைப்பை மன்னா விநியோகஸ்தர்களுக்கு வழங்குங்கள்!

புதுப்பித்தல் ஆண்டு சிறப்புக் கட்டுரைகள்

# தனிமனித புதுப்பித்தல்

– அருட்பணி. நெவின்ஸ் யோகராச் பீரிஸ், மன்னார் மறைமாவட்டம் –

**ஊற்றுக்களுக்கு திரும்புங்கள் - Come back to the Gospel.**

பழைய ஏற்பாட்டிலும் சரி புதிய ஏற்பாட்டிலும் சரி புதுப்பிக்கப்படுதல் அல்லது மனமாற்றம் அடைதல் பற்றிய குறிப்புக்கள் பல இடங்களில் பரவிக்காணப்படுகின்றது. யூத மற்றும் கிறிஸ்தவ சமயங்களில் புதுப்பித்தல், புதுப்படைப்பாக மாறுதல், ஆன்மீக எழுச்சி காணுதல், மனமாறுதல் இவை முக்கிய அம்சங்களாக கருதப்படுகின்றது. இப்படியாக இந்த மாற்றத்தை பல விதங்களில் விளக்கலாம் என்பது ஒருபுறம் இருந்தாலும் அதன் அடிப்படை உண்மை என்னவென்றால் புதுப்பித்தல் தனக்குத் தேவை என்று தன் உள்ளத்தில் முதலில் உணர்கின்ற ஒருவன்தான் தன் வாழ்க்கையில் மாபெரும் மாற்றத்தை அனுபவிக்கின்றான். இப்படியான மனமாற்றத்தின் காரணமாக ஒருவர் தன் அணுகுமுறையை மட்டும் மாற்றிக் கொள்வதில்லை, மாறாக தன் வாழ்க்கைப் பாதையையும், ஏன் தன் வாழ்க்கை முழுவதையும் மாற்றிச் சீரமைத்துக் கொள்கின்றார். இதைத்தான் எங்கள் திருத்தந்தை பிரான்சிஸ் அண்மைக்காலங்களில் மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வருகின்றார். அதாவது திருச்சபையில் வாழும் ஒவ்வொரு தனி மனிதனும் அது திருத்தந்தை தொடங்கி கருதினால்கள், ஆயர்கள், குருக்கள், துறவிகள், பொதுநிலையினராகிய ஒவ்வொருவருக்குள்ளும் ஓர் புதுப்பித்தல் நடந்தேற வேண்டும். இது வெறுமனே மனம் வருந்துதல் அல்ல, மாறாக அது அடிப்படை வாழ்க்கை மாற்றமாக (A total Conversion, A Radical Change, A Revolution) இடம் பெற வேண்டும் என்று கற்பிக்கின்றார். இன்னும் அவரது முன் உதாரணமான வாழ்க்கை ஓர் புரட்சிகரமான வாழ்க்கை மாற்றத்திற்கு எம் எல்லோருக்கும் அழைப்பு விடுகின்றது. Come back to the Gospel என்று அவர் அழைப்பது இயேசு காட்டிய நற்செய்தியின் வாழ்விற்கு எம்மை அழைக்கின்றார். இந்த வகையில் கிறிஸ்தவ வாழ்விற்கு ஊற்றாகவும், உரமாகவும் இருப்பது இறைவார்த்தை. தனி மனித புதுப்பித்தல் என்று நோக்கும் போது நற்செய்தியில் எல்லோரையும் கவர்ந்த நபர்களில் சக்கேயுவும் ஒருவன் (He is a model for the Renewal and Revolution in the life of a person). தனி ஒரு மனிதனான சக்கேயுவின் மனமாற்றமே இயேசுவை 'இன்று இவ் வீட்டிற்கு மீட்பு உண்டாயிற்று' (லூக் 19: 1-10) என அறிக்கையிடச் செய்தது. சக்கேயு ஓர் யூதர் ஆனால் வரிதண்டுபவர் என்ற காரணத்தால் தம் இனத்தாராலேயே ஒதுக்கப்பட்டவர், வெறுக்கப்பட்டவர். அவரிடம் பதவி, புகழ், பணம், அரசியல் செல்வாக்கு அனைத்தும் இருந்தன. ஆனால் அவருக்குள் மகிழ்ச்சி இல்லை, நிறைவு இல்லை, உறவு என்று சொல்ல ஒருவரும் இல்லை அவரின் பணமோ, பதவியோ, புகழோ அவர் விரும்பிய விடுதலையைத் தர முடியவில்லை. எல்லாம் இருந்தும் ஒன்றும் இல்லாத ஒரு வெறுமையை உணர்ந்தார்.

இவரின் தனி மனித புதுப்பித்தல் என்ற மனமாற்றத்தை 4 படிநிலைகளில் ஆராயலாம்.

**1. தன்நிலை உணருதல்:**

தன்னிடம் பணம் இருந்தும் தான் மகிழ்ச்சியாக இல்லை என்பதை உணர்ந்தார். தன்னிடம் உள்ள பணம் பாவப்பட்ட பணம் என்பதை உணர்ந்தார். தன்னிலே உள்ள வெறுமையை போக்க ஆண்டவர் ஒருவராலேயே முடியும் என்று எண்ணம் கொண்டார்.

**1. இயேசுவைக்காண தீர்க்கமான முடிவெடுத்தல்:**

- ♦ தன்னிடம் இல்லாத நிறை மகிழ்ச்சியை தேட ஆரம்பித்தார்.
- ♦ தனது குட்டையான உடல் தடையாக இருந்தாலும் இயேசுவைப் பார்க்க ஆசையோடு அத்திமரத்தில் ஏறினார்.
- ♦ பதவி, அந்தஸ்து எல்லாவற்றையும் இயேசுவைக் காண வேண்டும் என்ற ஆவலில் தூக்கி எறிந்துவிட்டு சிறுபிள்ளை போல மரத்திலே ஏறினார்.

**2. இறங்கி வருதல் - மேலிருந்து கீழ்நோக்கி:**


- ♦ இறங்கி வா இன்று உன்னோடு தங்கவேண்டும் என்ற இயேசுவின் அழைப்புக்கு உடனே பதில் கூறினார்.
- ♦ உச்சாங் கொப்பிலே தன்னை உயர்வாக கருதி இறுக்கிப் பிடித்திருக்கும் நிலையைத் தளர்த்தி இறங்கி வருதல்
- ♦ சாதியம் என்ற உச்சங் கொப்பிலிருந்து இறங்குதல்
- ♦ பணக்கார அந்தஸ்து நிலையிலிருந்து இறங்கிவருதல்
- ♦ கர்வம், ஆணவம், ஆதிக்கம் என்ற உச்சங் கொப்பிலிருந்து இறங்குதல். நான் அதிகாரி - நீ பணிவிடை செய்பவன் என்ற ஏற்றத்தாழ்விலிருந்து இறங்கிவருதல்
- ♦ நான் ஆண் - நீ பெண் என்ற வேறுபாட்டிலிருந்து இறங்கி வருதல்.

**3. மனமாற்றத்தை வாழ்வில் காட்டுதல்:**

- ♦ சக்கேயு தான்மனம்மாறிய புதுப்பிக்கப்பட்ட செய்தியை எல்லோருக்கும் அறிவிக்கின்றார்.
- ♦ கட்டாயப்படுத்தி பணம் சேர்த்தவன் இயேசுவை சந்தித்த பின்னர் புது மனிதர் ஆகின்றார்.
- ♦ இதன் அடையாளமாக பணத்தையும் செல்வத்தையும் குவித்து சுயநலத்தில் வாழ்ந்தவர் பகிர்ந்து கொள்ள முன்வருகின்றார்.
- ♦ எவரையாது ஏமாற்றி இருந்தால் நான்கு மடங்காகத் திருப்பிக் கொடுக்க முடிவு செய்கின்றார்.
- ♦ தன் பிழையை ஏற்றுக்கொண்டு மன்னிப்பு வேண்டுகின்றார். தனது அயலாரோடு உறவோடு வாழ முன்வருகின்றார்.

இவையெல்லாம் நடந்து முடிந்த பின்னர்தான் இயேசு இவ்வீட்டிற்கு மீட்பு உண்டாயிற்று என்று கூறுகின்றார். இதேபோலவே லூக்கா 15ஆம் அதிகாரத்தில் காணாமற்போன மகன் உவமையிலே ஊதாரிமைந்தனின் மனமாற்றம்

சென்ற மாதத் தொடர்ச்சி



நிலைகளில் இடம் பெறுகின்றது. தன் உணர்வு பெறுதல், பொறுப்புக் கூறல் திரும்பி வருதல்.

**A. தன் உணர்வு பெறுதல்:** அவன் அறிவு தெளிந்தவனாய் (லூாக்.15:17) (Creating a self awareness) எந்தவொரு தனிமனிதனும் ஆன்மீக, சமூக ரீதியாகவோ, உளவியல் கலாசார ரீதியாகவோ தன்னைப் புதுப்பித்துக் கொள்வதற்கு தன்னிலை உணர்தல் என்பது மிகமிக அவசியமான அடிப்படைக் கூறாக அமைகின்றது. நான் யார்? எனது கிறிஸ்தவ அழைப்பின் தார்ப்பரியம் என்ன? என்னிடம் காணப்படுகின்ற குறை நிறைகள் என்ன என்பதை கருத்தாய் ஆராய்தல் அவசியம். (what are my abilities and Limitations; success and failures in my life)

**B. பொறுப்புக் கூறல்:** எனது தற்போதய நிலைக்கு (குறைகளோடும், நிறைகளோடும்) காரணங்களை பிறர் மேல் சுமத்தாது அதற்கு நானே பொறுப்பேற்றல். (you accept that you are responsible for your present state.) "அப்பா கடவுளுக்கும் உமக்கும் எதிராக நான் பாவம் செய்தேன், இனிமேல் நான் உம்முடைய மகன் எனப்படத் தகுதி அற்றவன் என்று இளைய மகன் தனது குறையை ஏற்றுக்கொண்டார். (லூாக்15:19)

**C. திரும்பி வருதல்:** தந்தையிடமாக வருதல் என்பது (Go back to your Father) அவரே நலமளிக்க வல்லவர், என்னை ஏற்றுக் கொள்ளக்கூடியவர், வாழ்வின் நிறைவும் முழுமையும் கடவுளிடமே உண்டு என்ற நம்பிக்கையை ஆழப்படுத்தியவர்களாக பழைய வாழ்விலிருந்து புது வாழ்விற்கு திரும்புதல் (It is a total change). "உடனே அவன் புறப்பட்டுத் தம் தந்தையிடம் வந்தான். தொலைவில் வந்து கொண்டிருந்தபோதே அவன் தந்தை அவனைக் கண்டு, பரிவு கொண்டு, ஓடிப்போய் அவனைக் கட்டித்தழுவி முத்தமிட்டார்". (லூக் 15:20)

ஆக தனிப்பட்ட கிறிஸ்தவ வாழ்வை புதுப்பிக்கின்றோம் என்று சொல்லுகின்ற வேளையிலே அது இறைவார்த்தையின் ஒளியிலே வளர்க்கப்படுவதாக அமையவேண்டும். எனவே தான் ஊற்றுக்களுக்கு திரும்புங்கள் என்ற அழைப்பு கிறிஸ்துவிலே எம் வாழ்வை மையப்படுத்தியவர்களாக அவரது வார்த்தை என்கிற நீரோடையில் பருகி அவரது நிழலில் இளைப்பாறி எம்மை புதுப்பித்துக் கொள்வதாகும்.

"வானத்து பறவைகளை நோக்குங்கள், அவை விதைப்பதுமில்லை, அறுப்பதுமில்லை, களஞ்சியத்தில் சேர்த்து வைப்பதுமில்லை. உங்கள் விண்ணகத்தந்தை அவற்றுக்கும் உணவு அளிக்கின்றார்". (மத் 6:26) இந்த இறைவார்த்தைகளைக் கேட்கின்றபொழுது எமது பார்வையெல்லாம், எண்ணமெல்லாம் வானத்திலே வட்டமிடுகின்ற பறவைகள் பக்கம்தான் எழுகின்றதே ஒழிய, அப் பறவைகள் வந்து தங்குகின்ற, இளைப்பாறுகின்ற மரத்திலோ, அதன் கிளைகளிலோ, கூட்டிலோ எம் பார்வை திரும்புவதில்லை. அவை மகிழ்ச்சியோடு வட்டமிடவும், அன்றாட உணவை பெற்று நிறைவடைவதற்கும் அடிப்படை காரணி என்னவென்றால் அவை தினம் வந்து தங்குகின்ற மரம், அதன் நிழல், அதன் குளிர்மை. இயேசு கிறிஸ்துவை ஆணிவேராகக் கொண்டு அன்னை மரியாவையும், புனிதர்களின் வேதசாட்சியம் என்கின்ற விழுதுகளையும், கிளைகளையும் பக்க பலமாகக் கொண்டு விரிந்து நிற்கின்றது எம் மன்னார் திருச்சபை. அதிலே தங்கிச்செல்கின்ற பறவைகள் நாங்கள் குடும்பங்கள் நாங்கள், வானத்தை வட்டமிடுகின்ற இளஞ் சிட்டுக்குருவிகள் நாங்கள். எம் வாழ்வு நிறை மகிழ்வையும் முழுமையையும் காணவேண்டும் என்றால் ஆண்டவரோடு தங்குகின்ற அப்பா அனுபவத்தைப் பெறவேண்டும். "ரபி நீர் எங்கே தங்கியிருக்கின்றீர் என்று கேட்டார்கள். அவர் அவர்களிடம் வந்து பாருங்கள் என்றார். அவர்களும் சென்று அவர் தங்கியிருந்த இடத்தைப் பார்த்தார்கள். அன்று அவர்கள் அவரோடு தங்கினார்கள்". (யோவான். 1:38-39) அவர்கள் அன்று இயேசுவோடு தங்கியிருந்த அனுபவம்தான் அவர்களை எல்லாவற்றையும் விட்டுவிட்டு பழைய ஒரு நிலையில் இருந்து புதுவாழ்விற்கு, புதுப்பிக்கப்பட்ட வாழ்க்கைமுறைக்கு, சீடத்துவ வாழ்விற்கு உந்தித்தள்ளியது. நான் என்னை ஓர் ஆழ்நிலை இறை அனுபவத்திற்கு இட்டுச்செல்கின்றபோது மட்டுமே இந்த நிலை சாத்தியமாகும்.

கடவுள் உலகைப் படைக்கின்ற போதே அதை தன் திருமகன் வழியாக புதுப்பிக்க வேண்டுமென்று சித்தம் கொள்கின்றார், "இதோ புதிய வானகமும், புதிய வையகமும் படைக்கின்றேன்" (எசா 65:17), என்று எசாயா காண்கின்ற காட்சி கிறிஸ்து இயேசுவிலே ஆரம்பமாகின்றது. இதையே யோவான் தனது நற்செய்தியிலே இயேசுவை வாக்கு என்று குறிப்பிட்டு அவ்வாக்காகிய இயேசு எவ்வாறு அனைத்தையும் புதிதாக மாற்றுகின்றார் என்று தொடர்ந்து காட்டுகின்றார். முதல் அதிகாரத்திலே "தொடக்கத்திலே வாக்கு இருந்தது, அவ்வாக்கு கடவுளோடு இருந்தது அவ்வாக்கு கடவுளாயும் இருந்தது, உண்டானது எதுவும் அவராலன்றி உண்டாகவில்லை" என்று கூறும் யோவான் தொடக்க நூலில் கடவுள் உலகை ஆறு நாட்களில் படைத்தார். ஏழாம் நாள் ஓய்வெடுத்தார் என்றும் அது அவரின் மாட்சியின் வெளிப்பாடாக அமைந்திருந்தது என்றும் (தொ.நூ1:1-2:3), அதேபோன்று யோவான் 2ஆம் அதிகாரத்தில் ஆறு நாட்கள் நிகழ்ச்சிகள் நிறைவுற்று ஏழாம் நாள் நிகழ்ச்சியாக கானாவூர் திருமண நிகழ்ச்சியைக் காட்டி அங்கு இருந்த ஆறு கற்தொட்டிகள் மற்றும் தண்ணீர் வழியாக நடக்கவிருக்கும் இயேசுவின் மாட்சிக்குரிய செயலை விபரிக்கின்றார். (யோவா 2:11) அதாவது இயேசு தண்ணீரை திராட்சை இரசமாக மாற்றுவதன் மூலம் மெசியாவின் காலத்தை தொடங்கிவைத்து அனைத்தையும் புதிதாகப் படைப்பதாக புதுப்பித்தலுக்கு வழிகாட்டுகின்றார். தொடர்ந்துவரும் அதிகாரத்திலும் இயேசு யூத சமயத்தின் அடையாளங்களான கோவில் வழிபாடு, ஓய்வுநாள், திருச்சட்டம், விழா, பாஸ்காப் பலி போன்றவற்றை எப்படி மாற்றி அனைத்தையும் புதிதாக மாற்றுகின்றார் என்று விபரிக்கின்றார். அதாவது அனைத்தையும் புதிதாக மாற்றும் உள்ளார்ந்த புதிய ஆன்மீகத்தை விபரிக்கின்றார்.

இந்த ஆன்மீக புதுப்பித்தல் என்பது ஒவ்வொரு மனிதரின் உள்ளார்ந்த தேடல். இயேசு தன்னைப் பின்பற்ற விரும்பும் அனைவரையும் பார்த்து, "என்ன தேடுகின்றீர்கள்?" (யோவா 1:38) என்று தொடர்ந்து கேட்டுக்கொண்டே இருக்கின்றார். எனவேதான் இயேசு" மறுபடியும் பிறந்தாலன்றி எவரும் இறையாட்சியைக் காண இயலாது" (யோவா 3:3) என்று கூறி, அதற்கு விளக்கம் தருகையில் "ஒருவர் தண்ணீராலும் தூய ஆவியாலும் பிறந்தாலன்றி இறையாட்சிக்கு உட்பட இயலாது" (யோவா3:5) என விபரிக்கின்றார். இறைவனை வழிபடுவோர் உண்மை இயல்புக்கேற்ப உள்ளத்தில் வழிபட வேண்டும். (யோவா 4:23) எனது சதை உண்மையான உணவு, எனது இரத்தம் உண்மையான பானம் என்பதை அறிந்து இயேசுவை நம்ப வேண்டும். (யோவா 6:55) இப்படியாக உள்ளார்ந்த புதிய ஆன்மீகத்தைத் தந்து நாம் அனைவரும் புதுப்பித்தல் பெறவும், சீடத்துவ வாழ்க்கை வாழவும் வழிகாட்டுகின்றார்.

## ஏன் வேண்டும் தனிமனித புதுப்பித்தல்?

எந்தவொரு இயக்கமும் அதைத் தொடங்கியவரின் நோக்கத்தையும் செயற்திட்டத்தையும் அறிந்து அதைக் காலச் சூழலுக்கு ஏற்ப நிறைவேற்றுவதில்தான் அர்த்தம் பெறுகின்றது. பழகிப்போன பணிகளுக்குள் பாதுகாப்பான அமைப்புக்குள் புதிய பார்வையை வளர்ப்பதும், புதிய அணுகுமுறைகளைக் கையாள்வதும், புதிய பணிகளை ஆற்றுவதும், பணித்தளங்களினது தற்போதைய இன்றியமையாத தேவையாக இருக்கின்றது.

மாற்றம் என்ற சொல்லைத்தவிர மற்ற அனைத்தும் இவ்வுலகில் மாறிக்கொண்டுதான் இருக்கின்றன. மனிதனின் மனம்கூட மாற்றத்தையும், புதுமையையும் விரும்புகின்றது. மாற்றம் இல்லையென்றால் வளர்ச்சி இல்லை. இவ்வாறாக எங்கும் மாற்றம், எதிலும் மாற்றம் என்ற போக்கில் போய்க்கொண்டிருக்கும் உலகில் மனிதன் ஏனோ தனது இறைமனித உறவுகளை மேன்மைப்படுத்தும் மாற்றங்களை வரவேற்கத் தயங்குகின்றான்.

புதுப்பித்தல் ஆண்டு என்ற தொனிப்பொருளைக் கேட்டவுடனே எம் எல்லோரின் மனதிலும் எழுகின்ற கேள்வி யார் எல்லாம் மாற்றம் காண வேண்டும்? எவையெல்லாம் புதுப்பிக்கப்பட வேண்டும்? என்பதாகும். ஆனால் எவன் ஒருவன் தன்னிலே புதுப்பித்தலை அடைகின்றானோ, மாற்றத்தைக் காண்கின்றானோ அவன் மட்டுமே சமூக மாற்றங்களை உருவாக்க முடியும். இந்நிலையில் எம் கத்தோலிக்க திரு அவையாகிய மன்னார் மறை மாவட்டத்தை நோக்குகின்றபோது தனிமனித புதுப்பித்தல் திரு நிலையினரிலும், பொதுநிலையினராகிய இறைமக்கள் இரு பகுதியினரிலும் ஏராளமான மாற்றங்கள் புதுப்பித்தல் அவசியமானதாக கருதப்படுகின்றது. ●

*(அடுத்த இதழில் தொடரும்)*



**ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்**




காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், கருத்தாழமிக்கதாகவும் எழுதி அனுப்புங்கள்.

தரம்கண்டு மன்னாவில் பிரசுரிப்போம்.

*- மன்னா நிர்வாகம் -*



# மாணவர் மன்னா



## விவிலிய வினாவிடைப் போட்டி இல: 08
## [யோவான் நற்செய்தி 1 – 10 வரை]

### போட்டி விதிகள்

1. விடைத்தாளிலே விடைகளை எழுதி அனுப்புதல் வேண்டும்.
2. உங்கள் விடைகளை 01.04.2019ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். சரியான விடைகளை எழுதும் மூன்று அதிஷ்டசாலிகளுக்குப் பரிசுத்தொகை அனுப்பிவைக்கப்படும்.
3. மறைக்கல்வி மாணவர்கள் மட்டும் பங்குபற்றலாம். (தரம் - 3 முதல் தரம் 12 வரை)
4. முழுமையாக சரியான விடைகளை எழுதுவோரின் பெயர்கள் மட்டும் மன்னாவில் பிரசுரிக்கப்படும்.
5. உங்கள் விடைப் பத்திரத்தில் பெயர், கல்விகற்கும் தரம், பங்கு, விலாசம் குறிப்பிடுதல் வேண்டும்.
6. பங்குத்தந்தையின் கையொப்பம் பெறல் வேண்டும்.
7. மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் நற்செய்தி விவிலிய மாதாந்த அஞ்சல் வழி போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்களே 'நற்செய்தியாளர் விருது' பெறும் இறுதி எழுத்துப் பரீட்சைக்கு தகுதிபெறுவார்கள்.
9. "விவிலிய வினாவிடைப் போட்டி - 08", மன்னா பத்திரிகை அலுவலகம், கலையருவி, இல 202, தலைமன்னார் வீதி, மன்னார் என்ற முகவரிக்கு அனுப்பவும்.

### விவிலிய வினாக்கள்

01. கானாவூர்த் திருமணத்தில் இயேசு ஏற்படுத்திய திராட்சை இரசம் எங்கு இருந்து வந்தது என்று யாருக்கு தெரியும் என்று கூறப்படுகின்றது?
02. இருள் எதன் மேல் வெற்றி கொள்ளவில்லை?
03. விண்ணகத்திற்கு ஏறிச் சென்றவர்கள் யாரைத் தவிர விண்ணகத்திற்கு ஏறிச் செல்லவில்லை என சொல்லப்படுகின்றது?
04. இயேசு சமாரியப் பெண்ணிடம் கேட்ட முதல் கேள்வி யாது?
05. இயேசு முப்பத்து எட்டு ஆண்டுகளாய் உடல்நலம் அற்றவரை குணமாக்கியபின் இனி கேடானது எதுவும் உமக்கு நிகழாது இருக்க என்ன செய்யக்கூடாது என்றார்?
06. இயேசு பெரும் திரளாய் தம்மை நோக்கி வரும் மக்களுக்கு கொடுப்பதற்கு அப்பம் எங்கிருந்து வாங்கலாம் என்று யாரிடம் கேட்டார்?
07. இயேசுவை பிடிப்பதற்கு பரிசேயர்களும் யாரும் சேர்ந்து காவலர்களை அனுப்பினர்?
08. இயேசு யூதர்களிடம் இருக்கிறவர் நானே என்பதை நீங்கள் நம்பாவிடில் என்ன நிலைக்கு அவர்கள் உள்ளாகுவார்கள் என்றார்?
09. இயேசு தீர்ப்பு அளிக்கவே நான் இவ்வுலகிற்கு வந்தேன் பார்வையற்றோர் பார்வை பெறவும், பார்வையுடையோர் என்னிலைக்குள்ளாகவும் வந்தேன் என்றார்?
10. இயேசு யூதர்களிடம் கடவுளுடைய வார்த்தையை பெற்றுக்கொண்டவர்களே தெய்வங்கள் என்று சொல்லப்படுகிறார்கள் என்று யோவான் நற்செய்தி பத்தாம் அதிகாரம் எந்த வசனத்தில் சொல்லப்படுகின்றது?

## விவிலிய வினாவிடைப்போட்டி இல. 06 இல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசுபெறும் மூன்று அதிஸ்டசாலிகள்:

**முதலாம் பரிசு:**
N. கெஸ்ரோ,
ஜிம்றோன் நகர்,
எமில்நகர், மன்னார்.

**இரண்டாம் பரிசு:**
ம. டெரினா,
இல: 47/2, தாஸ்கோட்டம்,
நெளுக்குளம், வவுனியா,
வேப்பங்குளப்பங்கு.

**மூன்றாம் பரிசு:**
சி. டிலைக்ஷன்,
1/5, பெரியகமம்,
மன்னார்.
பேராலயப்பங்கு.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 70 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 53 பேர்.

## விவிலிய வினாவிடைப்போட்டி இல. 06இல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

01. கி. அனுசியா, முருங்கன், பொந்தீவுகண்டல்பங்கு.
02. ஜெ. தனுஷிக்கா, பறப்பாங்கண்டல்பங்கு.
03. ம. திருசாளினி, வவுனியா, வேப்பங்குளம்பங்கு.
04. வி. சுடர்மாறன், பறப்பாங்கண்டல்பங்கு.
05. நி. நிஜித், தாமரைக்குளம், அடம்பன்பங்கு.
06. J. செல்மதி, நறுவிலிக்குளம் வஞ்சியன்குளம்பங்கு.
07. ஜெ. சயனுதா, பறப்பாங்கண்டல்பங்கு.
08. அ. அகஸ்ரீனா, பறப்பாங்கண்டல்பங்கு.
09. அ. அன்ஸ்லின், பேசாலைப்பங்கு.
10. சு. கிறிஸ்ரா, தோட்டவெளிப்பங்கு.
11. J. ஜெனுக்ஷா, பறப்பாங்கண்டல்பங்கு.
12. அ. அன்ரனிஸ் டிலான், பெரியபண்டிவிரிச்சான்பங்கு.
13. செ. பிபியானா குருஸ், முத்தரிப்புத்துறைப்பங்கு.
14. சு. சுகி, அடம்பன்பங்கு.
15. ஜெ. பிறித்திக்கா பீரிஸ், பேராலயப்பங்கு.
16. ஜெ. பிறின்ஸ்ரன் ஜோ பீரிஸ், எமில்நகர், பேராலயப்பங்கு.
17. அ. அனுசியா, பள்ளக்கமம், முருங்கன்பங்கு.
18. ந. லிவின்ரா, காத்தான்குளம்பங்கு.
19. N. மேரி நிஷாலினி, பள்ளிமுனைப்பங்கு.
20. J. மது மித்திரா, சின்னக்கரிசல், தோட்டவெளிப்பங்கு.
21. J. பியூரன், கரிசல், தோட்டவெளிப்பங்கு.
22. ச மேரி டிஷா, வங்காலை, வஞ்சியன்குளம்பங்கு.
23. வி. ஆன் துஸ்மிதா, முதலைகுத்தி, உயிலங்குளம்பங்கு.
24. R. லெயூமி, கள்ளிகட்டைக்காடு, உயிலங்குளம்பங்கு.
25. சா. டிலுஜன், பறப்பாங்கண்டல்பங்கு.
26. எ. டிவைன்சி, சாவற்கட்டு, பேராலயப்பங்கு.
27. அ. மேரி அனோலின், கட்டைக்காடுபங்கு.
28. இ. ஆன் குளோடியா, கட்டைக்காடுபங்கு.
29. தி. தனுஜான், காத்தான்குளம், கட்டைக்காடுபங்கு.
30. இ. மரீஸ் ஏஞ்சலின், எருவிட்டான், நானாட்டான்பங்கு.
31. S. நெகோமியா, முதலைகுத்தி, உயிலங்குளம்பங்கு.
32. நி. கபிஸ் அன்ரனி, மாதகல்பங்கு.
33. அ. ஆன் சோபிக்கா, வஞ்சியன்குளம்பங்கு.
34. தி. அஜந்தினி, காத்தான்குளம், கட்டைக்காடுபங்கு.
35. அ. அன்ரனி ஷெரோன், வஞ்சியன்குளம்பங்கு.
36. பி. நிதுசா, தாராபுரம், தோட்டவெளிப்பங்கு.
37. ம. யூட்ஸ் சஜான், சூரியகட்டைக்காடு, கட்டைக்காடுபங்கு.
38. ம. யூட்ஸ் சன்சிகன், கட்டைக்காடுபங்கு.
39. A. டிவைன்சன் ஆன் அன்ரனி குருஸ், வங்காலைப்பங்கு.
40. S.A. எரோமிக்கா, பேசாலைப்பங்கு.
41. சை. யேசுதாசன், காத்தான்குளம், கட்டைக்காடுபங்கு.
42. S. டெல்சினா, காத்தான்குளம், கட்டைக்காடுபங்கு.
43. ச. மயூரா, அடம்பன், வங்காலைப்பங்கு.
44. அ. அன்ரனிதாஸ், வேப்பங்குளம்பங்கு.
45. ச. அமலி, காத்தான்குளம், கட்டைக்காடுபங்கு.
46. ம. நிலான், தோட்டவெளிப்பங்கு.
47. இ. நிறோஜன், தாழ்வுபாடுபங்கு.
48. யேசுதாஸ், கீரி, எழுத்தூர்ப்பங்கு
49. நிமல்ராஜ், அளவக்கைப்பங்கு.
50. கே. சுவேதிகா, வேப்பங்குளம்பங்கு.

## தந்தை



தாய் கருவினில் சுமந்தாள்
தந்தை தன் நெஞ்சினில் சுமந்தார்.
வீட்டில் தந்தைக்கு முதலிடம் - என்
மனதிலும் தந்தைக்கே முதலிடம்

எட்டு வயதினிலே என் தந்தையே
அன்னையாக கரம் பற்றி
நல்லொழுக்கங்களையும் எனக்குள்
விதையாக விதைத்தார் - என் அப்பா

என் சிறுவயதினில்
அன்பை அமுதமாக ஊட்டி
அன்னைக்குச் சமமாகவும் வழிநடத்தி
எம் இருவரையும் அன்போடு வளர்க்கின்றார்.

பிள்ளைகள் கஷ்டப்படாமல் இருக்க
தம் வாழ்வையே அர்ப்பணித்தார்
எனது மூன்று ஆண்டு காலமாய்
என்னை வளர்த்து வருகின்ற என் தந்தைக்கு
எனது இக்கவிதை ஒரு சமர்ப்பணம்

*யோ. கியூட்சன் (டிவைன்), முருங்கன்* ●

## எனது அம்மா

அம்மா.... அம்மா.... அம்மா....
என்னை அன்பாய் தூக்கி முத்தமிடும் அம்மா
என்னை ஒரு பொருள் போல பாதுகாக்கும் அம்மா
என்னை சிறு மலர் போல வளர்க்கும் என் அம்மா
என்னை ஒரு நகை போல காத்து அரவணைக்கும் என் அம்மா

சொத்தைப் போல அரவணைக்கும் என் தாய் தான் அம்மா
சொந்தத்தை விட என்னை அதிகமாக அன்பு செய்யும் அம்மா
சொன்ன பேச்சை கேட்டால் சொக்கா வேண்டி தருவாள்
சொக்கை பிடித்து ஒரு முத்தம் தந்து அரவணைக்கும் அம்மா

அன்பு மிகுந்த அம்மா என்னை அன்போடு அரவணைப்பாள்
அம்மா என்ற சொல்லே ஒரு அன்பு மிகுந்த சொல்தான்
அம்மா ஒரு அன்பு மிகுந்தவள் என்பது வெளிப்படுகின்றது
அம்மா என்றால் இன்பமே பொங்கும்
அம்மா... அம்மா... அம்மா... அம்மா...

*K. அன்ரனி (தங்கன்), பொந்தீவுகண்டல், முருங்கன்* ●

# சிறந்த வாழ்க்கைக்கு உகந்த விடயங்கள்

**மறக்க முடியாத ஆசிரியர்கள்.**

அந்த ஆசிரியர் ஓய்வு பெற்றார். அவருக்குப் பாராட்டு விழா நடத்தினர். "நீங்கள் தலைசிறந்த ஆசிரியர். உங்களால் மறக்க முடியாத ஆசிரியர் யார்?" என்று கேட்டபோது? அவர் சொன்னார் "நான் முனைவர் பட்டம் முடித்தவுடன் படித்து முடித்ததாய் நினைத்தேன். வகுப்பில் மாணவர்கள் சந்தேகங்கள் கேட்கத் தொடங்கியதும் முதலில் திணறினேன், பிறகு தினமும் மறுபடி படிக்கத் தொடங்கினேன். எனவே என்னால் மறக்கமுடியாத ஆசிரியர்கள் என் மாணவர்கள் தான்" என்றார். கற்றுக்கொள்ளலாம் எப்போது வேண்டுமானாலும் யாரிடம் வேண்டுமானாலும்.

**அப்படியோர் அண்ணனாக**

பணக்கார இளைஞனின் விலையுயர்ந்த கார் நின்றுகொண்டிருந்தது. ஏழைச் சிறுவன் ஒருவன் எட்டி நின்று அந்தக் காரையே ஆசையுடன் பார்த்துக் கொண்டிருந்தான். சிரித்துக் கொண்டே அந்த இளைஞன் சொன்னான், "இது என் அண்ணன் எனக்குப் பரிசளித்தது" சிறுவன் முகத்தில் வியப்பு. "உனக்கு அப்படி ஓர் அண்ணன் இருந்திருக்கலாம் என்று ஆசைப்படுகின்றாயா" இளைஞன் கேட்டான். சிறுவன் சொன்னான், "இல்லை! அப்படியோர் அண்ணனாக வளர வேண்டுமென்று விரும்புகின்றேன்". ●

*"நம்பிக்கை உணர்வு நல்லெண்ணங்களையே வளர்க்கும்"*

# புனித சிலுவை யோவான் ஜோசப்

இத்தாலியின் தெற்குப் பகுதியில் உள்ள இஸ்கியா என்னும் தீவில் 1654 ஒகஸ்ட் 15 அன்று சிலுவை யோவான் ஜோசப் பிறந்தார். கிறிஸ்டென்ட் கார்லோ கேடானோ என்பது இவரின் இயற்பெயராகும். சிறுவயது முதலே செபத்தின் அருமையையும், நற்பண்புகளின் அவசியத்தையும் பெற்றோரிடமிருந்து கற்றுக்கொண்டார்.

தேவைக்கும் அதிகமான செல்வம் இருந்த போதும் ஏழ்மை வாழ்வையே அதிகம் விரும்பினார். எளிமையாகவே உடை அணிந்தார். அதனாலேயே இறை அழைத்தலை உணர்ந்து 16 வயதானபோது துறவுமடத்தின் வாசலில் போய் நின்றார். பிரான்சிஸ்கன் சபையின் ஒரு பிரிவாகிய அல்காந்தர் பிரிவில் சேர்ந்தார். அதிதீவிர ஒறுத்தல் முயற்சிகளைப் பின்பற்றிய இப்பிரிவு அல்காந்தர் பீட்டர் என்ற துறவியால் 1524 இல் ஸ்பெயின் நாட்டில் ஆரம்பிக்கப்பட்டது. இதன் முதல் இத்தாலியராக சேர்ந்த கிறிஸ்டென்ட் தமது பெயரை சிலுவை யோவான் ஜோசப் என்று மாற்றிக்கொண்டார்.

தொடர்ந்து பட்டினி கிடந்து இறைவனின் மாட்சிமையைக் காண விழைந்தார். திராட்சை இரசத்தை ஒருபோதும் தொடாமல் வாழ்ந்தார். தாழ்ச்சி மற்றும் கீழ்ப்படிதலின் முன்மாதிரிகையாக வாழ்ந்தார். அக்பிலா என்ற இடத்தில் மடம் ஒன்று அமைக்க நினைத்த சபையினர் 1674ஆம் ஆண்டு யோவான் ஜோசப்பை அனுப்பினார்கள். தாமே உடல் உழைப்பைக் கொடுத்து மடத்தை உருவாக்கியதோடு அதற்கான விதிமுறைகளையும் வகுத்தார்.

தமது சபை நவதுறவிகளுக்கு பயிற்சியாளராக 24 வயதிலேயே யோவான் விளங்கினார். யோவானுடைய செப தவ வாழ்க்கை முறையைக் கண்ட தலைமைத் துறவி அவரைக் குருவாகுமாறு வேண்டுகோள் விடுத்தார். தனது விருப்பமின்மையையும், தொடர்ந்து துறவியாகவே வாழ நினைக்கும் தமது விருப்பத்தையும் யோவான் வெளிப்படுத்தினார். தலைமைத் துறவி அன்புக் கட்டளையாக மீண்டும் கேட்டதும் கீழ்ப்படிதலுடன் சம்மதித்தார். 1677இல் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். அல்காந்தர் பிரிவிற்கான இத்தாலி நாட்டின் பொறுப்பாளராக யோவான் 1702ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டார். யோவான் நோயாளிகளைத் தொட்டாலே அவர்கள் குணம் பெற்றார்கள். மருத்துவம் மற்றும் ஆறுதல் குணம் கொண்ட இவருடைய தொடுதலுக்காக மக்கள் காத்துக் கிடந்தார்கள். எல்லா வகையான நோயாளர்களும் வந்து குணம் பெற்றுச் சென்றார்கள். மக்களின் இதயங்களை வாசிக்கும் ஆற்றலும், ஒரே நேரத்தில் இரண்டு இடங்களில் நின்று போதிக்கக்கூடிய வரமும் பெற்றிருந்தார். பஞ்சம் நிலவிய காலங்களில் இருந்த குறைவான உணவுப் பொருளை ஆசீர்வதித்து பலுகிப் பெருகச் செய்தார்.

அன்னை மரியாள் மீது பக்தியும் பற்றும் கொண்டிருந்த யோவான் ஜோசப் தனது மருத்துவத் தொடுதலுக்காக வந்த அனைவரிடமும் அன்னையின் பக்தியைப் பரப்பினார். அனைவரும் அன்னையை நேசிக்க வேண்டும் என்று விரும்பினார். எளிமையை ஆடையாகக் கொண்டு இறைவனின் அன்பை எல்லோருக்கும் வழங்கி வாழ்ந்த யோவான், 1739 மார்ச் ஐந்தாம் நாள் இறந்தார். திருத்தந்தை ஆறாம் பத்திநாதர் 1789 மே 24 அன்று அருளாளர் நிலைக்கு யோவான் ஜோசப்பை உயர்த்தினார். திருத்தந்தை 16ஆம் கிரகோரி 1839 மே 26ஆம் நாள் புனிதராக உயர்த்தினார். ●



# இளையோர் மன்னா





## இளைஞன் என்பவர் யார்?

கொழும்பு உயர் மறைமாவட்டம் 2019ஆம் ஆண்டை இளையோர் ஆண்டாக பிரகடனப்படுத்தியுள்ளது. இவ் இளைஞர் ஆண்டிலே இளைஞர்கள் நல்ல முறையில் தங்களைத் தயாரிக்க வேண்டும். அத்தோடு இளைஞர், இளம்பெண், இளமைப்பருவம், இளைய தலைமுறை இப்படிப் பல்வேறு சொற்கள் இளைஞர்களை மற்றும் இளைஞர்களுடைய வாழ்க்கை முறையை சுட்டிக்காட்டப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இளையோர் என்பவர்களை 15 வயதிற்கும் 24 வயதிற்கும் உட்பட்டவர்கள் என்று ஐக்கிய நாடுகளின் பொதுக்குழு குறிப்பிட்டுள்ளது. உலக வங்கியோ குழந்தைப் பருவத்திற்கும் முதிர்பருவத்திற்கும் இடைப்பட்ட பருவத்தை இளமைப்பருவம் என்று அழைத்து, 15 வயதிற்கும் உட்பட்டவர்களை இளைஞர் என்று மதிப்பிடுகின்றது. இன்னும் சிலர் 30 வயதுவரை இளையோரின் வயதாக கணிப்பதும் உண்டு.

இப்படிப்பட்ட வேறுபட்ட கணிப்புகள் உலகமெங்கும் காணப்படுகின்றன. இளைஞர்கள் என்பவர்கள் குறிப்பிட்ட வயதிற்கு உட்பட்டவர்கள் என்பது உடல் சார்ந்த, வயது சார்ந்ததாகக் கணிக்கப்படுகின்றது. எனினும் மனநிலை, சிந்தனை, செயற்பாடு சார்ந்த நிலையில் இளைஞர் என்பவர் வயது வரம்பைத் தாண்டியவர் என்றே மதிக்க வேண்டும். எனவே வயது அடிப்படையிலும், மனநிலை அடிப்படையிலும் வயதைக் கொண்டு இளமைப் பருவத்தைக் கணித்தோமென்றால் இன்று முப்பதுக்குள் முதுமை எய்துபவர்களின் பட்டியல் நீண்டிருக்கும். வெறும் உடல் தோற்றத்தைக் கொண்டு வழுக்கைத்தலை, நரைத்த முடி, ஒட்டிய வயிறு, குழிவிழுந்த கன்னம், பசியால் வாடிய முகம், போதைப்பொருட்களால் உருவிழந்த தோற்றம், மதிப்பிடுவோம் என்றால் பலரையும் முதியோர் பட்டியலில்தான் சேர்க்க வேண்டும். ஆனால் வயதையும், மனநிலையையும் கணக்கில் எடுத்து இளமைப்பருவத்தை குறிப்பிட விரும்புகின்றோம். இப்பருவம் போராட்டம் நிறைந்த பருவம், சிக்கல் நிறைந்த பருவம், குழப்பம் நிறைந்த பருவம், யார் சொல்வதையும் கேட்க மறுக்கும் பருவம், புதிய வழிமுறைகளைத் தேடுவதாக நினைத்து தவறிழைக்கும் பருவம், எதிர்காலத்தைப் பற்றி அதிக பயமும், தயக்கமும் நிறைந்த பருவம், எதையாவது சாதிக்க வேண்டும் என்ற துடிப்போடு அலையும் பருவம். கால ஓட்டத்தில் எண்ணத்தளவிலும், உடல் அமைப்பிலும், வாழ்க்கை அனுபவத்திலும், காதல் தோல்வியிலும், முதுமையின் தரைதட்டியிருப்போர் பலர். இவ்விளைஞர்கள் நம்பிக்கைத் தீபங்களை கரங்களில் ஏந்திக்கொண்டு நிற்பதாக நினைத்து தங்களையே சுட்டுக்கொண்டும், காயப்படுத்திக்கொண்டும், ஓலமிட்டுப் புலம்பக்கூடியவர்கள். சிலர் தோல்விகளைக் கண்டு நிரந்தரமாக மரணப்பிடியில் சிக்கி விழிபிதுங்கி வீதிகளில் பைத்தியமாய் அலைந்து கொண்டிருக்கின்றார்கள். சிலர் கனவுகளை தங்கள் சட்டைப்பைக்குள் போட்டுக்கொண்டு கற்பனை உலகைத்தேடி சிறகு விரித்து அனைத்தையும் இழந்து மனித சாயலே இல்லாமல் போகின்றார்கள். இன்னும் சிலர் நம்பிக்கையோடும், சாதனைத் துடிப்போடும் பயணித்து, பிறகு வாழ்க்கையில் ஏற்பட்ட தோல்விகளைக் கண்டு அவநம்பிக்கையோடும், வேதனையோடும் வீதி வீதியாக அலைந்து திரிகின்றார்கள் இளைஞரை எதிர்மறையாகவும் கண்ணோக்க வேண்டும். ஒவ்வொரு இளைஞருக்குள்ளும் புதைந்து கிடக்கும் ஆற்றலை வெளிக்கொணர வழி செய்ய வேண்டும். தன் 18 வயதிற்குள் மிகச் சிறந்த இலக்கியப் படைப்பை உருவாக்கிய ஆல்பிரட் டென்னிசன் போன்றோர் இம்மண்ணில் பலர் உண்டு. தன்னுடைய 25 வயதிற்குள் இத்தாலியை வென்ற மாவீரன் நெப்போலியன் போன்று துணிச்சல்மிக்க வீரர்கள் உலகெங்கும் உண்டு. தன்னுடைய 25 வயதிற்குள் பல புதிய கண்டுபிடிப்புக்களை நிகழ்த்திக் காட்டிய நியூட்டன் போன்று புதிய கண்டுபிடிப்புக்களை நிகழ்த்தும் சாதனை இளைஞர்களும் உண்டு. ஒவ்வொரு இளைஞரும் இந்த சமுதாயத்தின் இதயத்துடிப்பு இமயமலை உச்சிபோல் உயர வேண்டும் என்ற கனவு கொண்டவர்கள்.

வாய்ப்புக்காக வாழ்க்கை முழுவதும் தேடித்தேடி களைத்துப்போன பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் மத்தியில் இலட்சியத்தோடும், கனவுகளோடும் வாழ்ந்து சாதனை படைப்போர் பலர் உண்டு. இன்று எல்லாத்துறைகளிலும் இளைஞர்கள் சாதித்துக் கொண்டிருக்கின்றார்கள். இவ்வாறெல்லாம் சாதனைபுரிந்து கொண்டிருக்கும் இளைஞர்கள் பலர் தொடர்ந்து சாதனை புரிந்து வாழ்வதற்கும், சாதனை புரியாமல் வேதனைத் தீயில் வாழும் இளைஞர்கள் சாதிப்பவர்களாக மாறுவதற்கும், மாற்றுவதற்கும் வாழ்க்கை முறை தேவை. இவ்வாழ்க்கை முறையை ஆன்மீகம் என்றும் அழைக்கலாம். சாதிப்போர் சறுக்கி விழாமல் இருக்க, வேதனைப்படுவோர் புதிய வழிமுறைகளைக் கண்டுகொள்ள இவ் ஆன்மீகம் வழிகாட்டும். இதற்கு முன்னோடியாக இறை இயேசு தம் வாழ்வையே பிறருகாகக் கொடுத்து வழிகாட்டினார். இறைமை செத்துக்கிடந்த மானிட சமுதாயத்தில் சட்டத்திற்கு அல்ல மானிடத்திற்கு சிறப்பிடம் கொடுத்து வாழக் கற்றுக்கொடுத்தார். இந்த இயேசுவின் புதிய ஆன்மீக வழிமுறை பலருக்கும் வழிகாட்டுவதாக அமைந்துள்ளது என்பதில் மாற்றுக்கருத்தில்லை.

# கிறிஸ்தவ நாகரிகம் புதிய பாடத்திட்டம்

## கிறிஸ்தவ மறையின் ஆரம்பமும், நற்செய்தியைப் பரப்ப புனித பவுல் ஆற்றிய பங்களிப்பும்

– அருட்தந்தை யா. றமேஸ் அ.ம.தி–

### 1. திருச்சபையின் ஆரம்பமும், பணியும்

யூதர்களின் விழாவாகிய பெந்தக்கோஸ்தே தினமே திருச்சபையின் ஆரம்ப நாளாகும். அன்றைய நாளில் சீடர்கள் அனைவரும் ஒரே இடத்தில் தாய் மரியாவுடன் 120 பேர் ஒன்றுகூடி செபித்துக் கொண்டிருந்தார்கள். இயேசுக்கிறிஸ்து வாக்களித்த துணையாளரை அனுப்புவார் என்ற அவரது வாக்குறுதி நிறைவேற காத்திருந்த திருத்தூதர்கள் மேல் தூய அவியானவர் இறங்கினார். 'கொடுங்காற்று வீசுவது போன்ற ஒரு இரைச்சல் வானத்தில் உண்டாக பிளவுண்ட அக்கினி நாவு வடிவில் அவர்கள் மேல் இறங்கினார். இயேசுவின் சீடர்கள் தூய ஆவியைப் பெற்றதற்கான வெளி அடையாளங்களாக தூய ஆவியின் செயற்பாடுகள் அருங்குறிகளாகத் தரப்படுகின்றன. படிப்பறிவில்லாத கலிலேயர் பேசுவதை மற்றவர்கள் தத்தம் சொந்த மொழியில் கேட்டனர். தூய ஆவியின் வருகை சீனாய் மலையில் இறைவன் மோசேக்கு காட்சி கொடுத்ததை எமக்கு நினைவூட்டுகின்றது. இது ஒரு புதிய யுகத்தின் ஆரம்பத்தை, புத்துயிர் அளிக்கப்படுவதை, புதிய இஸ்ரயேலர் இனம் உருவாகுவதை, திருச்சபையின் பிறப்பை குறிக்கின்றது. கிறிஸ்துவில் நம்பிக்கை கொண்டு செயலாற்றும் ஒரு சமூகமாக திருச்சபை பெந்தக்கோஸ்தே நாளில் பிறந்தது.

பெந்தக்கோஸ்தே நாளில் இறைப்பிரசன்னமும், பணிக்கான அழைப்பும் திருத்தூதர்களுக்கு வழங்கப்படுகின்றது. இது மோசேக்கு நெருப்பு வடிவில் இறைப்பிரசன்னம் உணர்த்தப்பட்டு பணி கொடுக்கப்பட்டதுபோல அமைந்துள்ளது. திருச்சபைக்கு தலைமைதாங்க அழைக்கப்பட்ட திருத்தூதர் பேதுரு தனது முதல் திருவுரையை மக்களுக்கு வழங்கி 3000 பேரை திருச்சபையில் சேர்த்து பணியை ஆரம்பிக்கின்றார். தொடர்ந்து பேதுரு பிறவி முடவனைக் குணமாக்கிய சம்பவம் மக்களை திருத்தூதர்களின் படிப்பினைக்கு செவிசாய்க்கத் தூண்டியது. தூய ஆவியை பெற்றுக்கொண்ட திருத்தூதர்களின் விசுவாச வாழ்வும், நற்செய்தி அறிவிப்பும், செபமும் திருச்சபையை வளர்ச்சியுறச் செய்தது. அவர்கள் துன்பங்களையும், கசையடிகளையும் பொறுத்துக்கொண்டு திருச்சபை உலகெங்கும் பரப்பப்பட சாட்சிகளாய் விளங்கினார்கள். ஆதித்திருச்சபை எருசலேமில் எங்கும் விரைவாகவும், துரிதமாகவும் பரவி, ஒரு வலிமையான, கவர்ச்சியான சமூகமாக விளங்கியது.

### 2. ஆதிக்கிறிஸ்தவர்களின் வாழ்க்கை முறை

**திருத்துதர்களுடைய படிப்பினையை வாழ்வாக்கினார்கள்:**

ஆதிக்கிறிஸ்தவர்கள் பேதுருவின் மறையுரை வழியாக பெற்றுக்கொண்ட முதல் விசுவாசத்தை, திருத்தூதர்களின் போதனைகள் வழியாக உறுதிப்படுத்தினர். கிறிஸ்துவைப் பற்றி மிகவும் ஆழமாக அறிந்துகொண்டு தங்களை நற்செய்திப் பணிக்கு ஆயத்தப்படுத்தினர். மறையுண்மைகளை, வேத நூலை மென்மேலும் கற்றறிய ஆவலும், ஆர்வமும் உள்ளவர்களாகக் காணப்பட்டனர். திருத்தூதர்களின் வழியாக பல புதுமைகளும் அரும் செயல்களும் நடைபெற்றன. இதனால் ஆதிக்கிறிஸ்தவர்கள் தங்கள் விசுவாசத்தை இறைவனில் ஆழப்படுத்தினர். **"அவர்கள் அனைவரும் ஒரே உள்ளமும், ஒரே உயிரும் உள்ளவர்களாயிருந்தனர் :**

தொடக்கக் கிறிஸ்துவில் தங்களுக்குள் ஒரு புது உறவு ஏற்பட்டுள்ளதை உணர்ந்து கொண்டு அனைவரும் ஒரே உள்ளமும், ஒரே உயிரும் உள்ளவர்களாய் இருந்தனர். அவர்கள் எல்லோரும் திருத்தூதர்களின் தலைமையில் நட்புறவுடன் உறவாடி, பொறுப்புணர்வுடன் வாழ்ந்து, கிறிஸ்து கூறிய அன்பிலும், ஒற்றுமையிலும் ஒன்றித்து வாழ்ந்தனர். வேறுபாடுகள் எதுவுமின்றி ஒற்றுமையாக வாழ்ந்ததோடு, தங்கள் உடமைகளையெல்லாம் பொதுப் பொருளாகக் கொண்டிருந்தனர். இவர்களின் வாழ்க்கைமுறை ஏனையோரையும் கவர்ந்தது. எபிரேய மொழி பேசும் யூதர்களும், கிரேக்க மொழி பேசும் யூதர்களும் ஒன்றாக இருந்தாலும், திருமுழுக்கின்போது அவர்களை ஆட்கொண்ட தூய ஆவியினால் அவர்கள் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டிருந்தார்கள்.

**அப்பம் பிடுதல் மூலமாக பகிர்ந்து வாழ்ந்தனர்:**

ஒன்றாக இருந்தாலும், திருமுழுக்கின்போது அவர்களை ஆட்கொண்ட தூய ஆவியினால் அவர்கள் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டிருந்தார்கள். ஆதிக்கிறிஸ்தவர்கள் ஒவ்வொருநாளும் தாங்கள் தனியார் வீடுகளில் ஒன்றுகூடி கிறிஸ்தவர்களுக்கே உரித்தான நற்கருணை வழிபாட்டில் எளிய உள்ளத்தோடும், பேருவகையோடும் பங்குபற்றி எல்லோரும் ஒன்றாக சேர்ந்து பந்தியில் விருந்துண்டு மகிழ்ந்தனர். 'அப்பம் பிடுதல்' என்பது நற்கருணையைக் குறிக்கும் சொற்றொடராகும். அதனை தங்கள் வாழ்வில் ஒருவர் ஒருவரிடம் உள்ளதை பகிர்தலின் மூலமாக வெளிக்காட்டினார்கள். உடமைகள் நிலபுலன்கள் உள்ளோர் அவற்றை விற்று, அனைவருக்கும் அவரவர் தேவைக்கேற்ப பகிர்ந்தளித்ததோடு, பிறர் நல் வாழ்வில் அக்கறை கொண்டவர்களாய், அவர்கள் தேவைகளை நிறைவு செய்பவர்களாய் வாழ்ந்தனர். அவர்கள் அனைவரும் இவ்வுலகப் பொருட்களிலே எவ்வித பற்றும் அற்றவராய் இருந்தார்கள். தத்தம் உடமைகளை தமக்குச் சொந்தமானதாய்க் கருதாமல் பொதுப் பொருட்களாகக் கொண்டு வாழ்ந்தனர். நிலபுலன்கள் உடையோர் அதை விற்று, பணத்தை கொணர்ந்து திருத்தூதர்களின் காலடியில் வைத்தனர். திருத்தூதர்கள் அவற்றை அனைவருக்கும் அவரவர் தேவைக்கேற்ப பகிர்ந்தளித்தனர்.

**செபத்தில் நிலைத்திருந்தனர்:** அவர்கள் ஒவ்வொரு நாளும் தாங்கள் தனியார் வீடுகளில் ஒன்று கூடி, கிறிஸ்தவர்களுக்கே உரித்தான நற்கருணை வழிபாட்டில் எளிய உள்ளத்தோடும், பேருவகையோடும் பங்குபற்றினர். ஓய்வு நாளையும் பிரமாணிக்கமாக அனுசரித்தனர். ஆதிக்கிஸ்தவர்கள் தனித்தனியே மட்டுமல்ல, அவர்கள் எல்லோரும் ஒரே குடும்பமாக, ஒரே சமூகமாக ஒன்று கூடி, இறைவனைப் போற்றிப் புகழ்ந்து, தம் தேவைகளுக்காக அவர் உதவியை வேண்டினர். அவர்கள் இறைவன் பிரசன்னத்தை தங்களில் உணர்ந்து, தேவ பயத்துடனும், பயபக்தியுடனும் வாழ்ந்தனர். இதனால் இறைவனுடைய அருளும் ஆசீரும் அவர்களுக்குத் தாரளமாகக் கிடைத்தன. இவர்களது செப வாழ்வால் பலர் இயேசுவில் விசுவாசம் கொண்டு, திருமுழுக்குப் பெற்று, திருச்சபையில் சேர்ந்தனர்.

### 3. திருச்சபையில் திருத்தொண்டர்கள் நியமனமும் ஸ்தேவானின் மரணமும்

திருச்சபையின் உறுப்பினர் தொகை அதிகரிக்க அவர்களின் பொது வாழ்வில் பிரச்சினைகள் தோன்றின. கிரேக்க மொழி பேசும் யூதக் கிறிஸ்தவர்கள் தம் கைம்பெண்கள் அன்றாடப் பந்தியில் சரியாகக் கவனிக்கப்படவில்லையென, எபிரேய மொழி பேசுகின்ற யூதர்களுக்கு எதிராக திருத்தூதரிடம் முறைப்பாடு செய்தனர். இறைவார்த்தையை அறிவித்து மக்களை இறைவனிடம் சேர்ப்பதையே நோக்காகக் கொண்ட திருத்துதர்கள் இப்பிரச்சினைக்கு தீர்வு காணவும், நற்செய்திப் பணி தடையின்றி தொடரவும் திருத்தொண்டர்களை நியமித்தனர். விசுவாசிகளிடம் நற்சான்று பெற்ற ஆவியானவரின் வல்லமையும் ஞானம் கொண்ட எழுவர் தெரிவு செய்யப்பட்டனர். திருத்தூதர்கள் அவர்கள்மேல் கைகளை விரித்து, இறைவனை வேண்டி அவர்களை அறப்பணிக்கென நியமனம் செய்தனர். அவர்களே திருச்சபையில் முதல் நியமனம் பெற்ற பணியாளர்கள் (திப6:1-6). திருத்தொண்டர் ஸ்தேவான் கிறிஸ்துவின் நற்செய்திக்காக வேதசாட்சியாக மரித்தார். ஸ்தேவானுடைய மரணத்தின்பின்னர் மக்கள் எல்லோரையும் பேரச்சம் ஆட்கொண்டது. அதனால் அவர்கள் உலகின் பல பாகங்களுக்கும் சென்று மறைவாக வாழ்ந்தார்கள் இவ்வாறு சென்றவர்கள் தாங்கள் சென்ற இடங்களில் எல்லாம் கிறிஸ்துவைப்பற்றி நற்செய்தியை அறிவித்தார்கள். இவர்களுடைய சாட்சிய வாழ்வினால் இவர்களை சூழ்ந்திருந்த மக்களும் கிறிஸ்துவை விசுவசித்து திருச்சபையில் சேர்ந்து கொண்டனர். இதனால் திருச்சபை எல்லா இடங்களிலும் பரவியது.

### 4. பவுலுடைய இறையனுபவமும், மறைதூதுரைப் பயணங்களும்

பவுல் எனும் கிரேக்க மொழி பேசும் யூதன் யௌவனப் பண்பாட்டினர் தர்சு என்ற கிரேக்க நகரத்தில் குடியேறிய பெஞ்சமின் குலத்தைச் சேர்ந்த யூத குடும்பத்தில் கி.பி.10ஆம் நூற்றாண்டில் பிறந்தார். அவர் தன்னுடைய தந்தை வழியாக உரோமை குடியுரிமையைப் பெற்றிருந்தார். கிரேக்க சிந்தனை சூழலிலேயே தன் சிறுபராயத்தைக் கழித்தார். மெய்யியல் அறிவில் தேர்ச்சி பெற்றிருந்தார். சட்ட வல்லுனரான கமாலியேலின் கீழ் வேதநூலை நன்கு பயின்று யூதப் பாரம்பரியங்களை நன்றாகக் கற்று யூத சட்டங்களை நுணுக்கமாக கடைப்பிடிக்கும் பரிசேயன் ஆனார். யூதத்தில் இருந்த நெருங்கிய ஈடுபாடு கிறிஸ்தவர்களை அழிக்க அவரைத் தூண்டியது. தமஸ்கு நகரிலே அவர் பெற்ற அனுபவம் அவரை புகழ் பெற்ற நற்செய்தியாளனாக மாற்றியது. உலகில் பல பாகங்களுக்கும் சென்று இயேசுவைப் பற்றிய நற்செய்தியை எடுத்துரைத்தார். திருச்சபை உலகெங்கும் பரவ முக்கிய கருவியாக திகழ்ந்தார். நீரோவின் கலாபனையில் கிறிஸ்துவுக்காக வேத சாட்சியாக மரித்தார்.

**பவுலுடைய இறையனுபவம்**

ஆதிக் கிறிஸ்தவர்களைக் கொலை செய்யும் நோக்கிலே தமஸ்கு நோக்கிச் சென்ற பவுல் பேரொளியால் ஆட்கொள்ளப்பட்டு உயிர்த்த கிறிஸ்துவின் ஒலியைக் கேட்டதும் பவுல் தன்னிலை உணர்ந்து பழையதை மறந்து இயேசுவின் கட்டளைக்குப் பணிய ஆரம்பித்தார். இயேசு என்கின்ற மீட்பரை பல்வேறு புரிதல்களுக்கு உட்படுத்தி உட்கிடையான முடிவுகளால் புறம் தள்ளாமல் நடு நாயகம் ஆக்கி தான் பெற்ற அனுபவத்தை வாழ்வுக்குட்படுத்தினார். இறைவனுடைய நற்செய்தியை சகலருக்கும் அறிவிக்க இயேசுவால் தெரிந்து கொள்ளப்பட்ட கருவியாக பவுல் தனது பணிவாழ்வில் இயேசுவின் உடனிருப்பையும், அவருடைய வல்லமையையும், பாதுகாப்பையும் உணர்ந்தார். தனது பணி வாழ்வில் அவர் கண்ட காட்சிகள் மூலமாக இறைத்திட்டத்தை இறைவன் வெளிப்படுத்தும் விதத்தை உணர்ந்து கொண்டார். பணிசெய்த மக்களில் ஏற்பட்ட நல் மாற்றம் அவர்களது வாழ்வியல் மாற்றங்கள் பவுலுக்கு மன அமைதியையும், மகிழ்ச்சியையும் வருவித்தது. கிறிஸ்துவின் நற்செய்திக்காக அவர் சந்தித்த துன்பங்களும், பாடுகளும், இறை அனுபவங்களும் பவுலுக்கு ஆன்மீக திருப்தியை அளித்து எபேசு அனுபவத்தை வாழ்வில் காணும் மன அனுபவத்தையும் கொடுத்தது.

→ 15

குடும்பச் சிறப்புக்கட்டுரை

# குடும்பம் குவலயமாக

“குடும்பம் என்பது வெறும் ஏட்டளவு கருத்து மட்டுமல்ல. ஒரு நாட்டைக் கட்டியெழுப்பும் அடித்தளம்”

### சொர்க்கத்தை மண்ணில் காட்டுவது பாசம் நிறைந்த குடும்பம்!

ஒரு வயதிற்குமேல் அப்பாவிடம் அடிக்கடி பேசாவிட்டாலும் அப்பாவைப்பற்றி அதிகம் தெரிந்து வைத்திருக்கும் மகன். அண்ணனின் இரகசியங்கள் எல்லாம் தெரிந்திருந்தும் அப்பாவிடம் சொல்லிவிடாத தங்கை. தங்கை இன்னொரு வீடு செல்லும் வரை அவளைக் காக்கும் அண்ணன். தன் வரவுசெலவு சோகங்களை சமையலறைக்குள்ளே ஒளித்துவிட்டு எப்போதும் சிரித்த முகத்துடனே வரும் அம்மா உழைத்த களைப்போடு வீடு வந்தபோதும் பிள்ளைகளின் முகத்தைக் கண்டதும் புத்துணர்ச்சி அடையும் அப்பா. சேலை முந்தானையில் முடிஞ்ச சில்லறைகளாலே பேரனின் பொருளாதாரத் தேவைகளை தீர்துவைக்கும் பாட்டி நாங்களெல்லாம் அந்தக் காலத்திலே என்று ஆரம்பித்து கதை சொல்லியே சொர்க்கத்தை மண்ணில் காட்டுவது பாசம் நிறைந்த குடும்பம்!

### 1. குடும்பம் சமூகத்தின் உயிர்நாடி.

குடும்பம் என்பது சமூகத்தின் உயிர்நாடி. உறவு என்பது குடும்பத்தின் ஆணிவேர். குடும்பம் தான் நாம் எப்படி வாழவேண்டும் என்பதை நமக்கு கற்றுத்தரும் பள்ளிக்கூடம். குடும்ப நபர்களின் எண்ணங்கள், ஏக்கங்கள், துன்பம், இன்பம் என அனைத்திலும் பங்கெடுக்க கற்றுக்கொள்ளும் பாசறையாக குடும்பங்கள் விளங்குகின்றன. திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் கூற்றுப்படி, குடும்பங்களின் மகிழ்ச்சிக்கு ‘தயவு செய்து’ ‘நன்றி’ ‘மன்னியுங்கள்’ ஆகிய மூன்று சொற்களும் முத்தாய்ப்பாக உள்ளன. கிறிஸ்தவ குடும்பங்கள் கிறிஸ்துவின் அன்பு, கனிவு, தோழமை ஆகியவற்றுக்கு எடுத்துக்காட்டாக விளங்கினால் உறவுகள் மலரும். அன்பும் மகிழ்வும் நிறைந்த சமுதாயம் உருவாகும்.

இன்றைய உலகின் சூழலில் திருமண முறிவின் பல வழக்குகள் ஒவ்வொரு நாளும் நீதிமன்றங்களில் விவாதத்திற்கு வருகின்றன. வழக்கின் முடிவுகள் பல குடும்பங்களின் முறிவுகளாகவே உள்ளன.

### 2. குடும்ப உறவில் வளர

குடும்ப உறவில் வளர ஒருவர் மற்றவரை நம்ப வேண்டும். தந்தையைத் தாய் நம்புவதும், தாயைத் தந்தை நம்புவதும், பிள்ளைகள் பெற்றோரை நம்புவதும், பெற்றோர்கள் பிள்ளைகளை நம்புவதும் குடும்ப உறவிற்கு மிகவும் அவசியமாகின்றது.

ஒருவர் மற்றவரை சந்தேகப்படுமாறு நடந்துகொள்வது, குடும்பத்தின் ஒற்றுமையையும், கட்டுக் கோப்பையும் குலைக்கின்றது. குடும்ப உறுப்பினர்கள் ஒருவர் ஒருவரைப் புரிந்து கொண்டு திறந்த மனத்தோடு உரையாடி தங்கள் சந்தேகங்களைச் சுமூகமாகத் தீர்த்துக்கொள்ளும் பொழுது குடும்ப உறவு நீடித்து நிலைக்கின்றது.



### குடும்ப உறவு நீடித்து நிலைக்க

குடும்ப உறுப்பினர்களை குறை நிறைகளுடன் ஏற்றுக்கொள்வோம். ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து மகிழ்வோம். பிறரை மனம் குளிர பாராட்டுவோம், உறவுகளுடன் மனம் திறந்து உரையாடுவோம், பெற்றோரை மதித்து போற்றுவோம், குடும்பமாகக்கூடி செபித்து இறையருளைப் பெறுவோம்.

### 3. கிறிஸ்தவ குடும்பங்கள் குட்டித் திருஅவையாக

அனைத்தையும் படைத்த இறைவன் திருமண வாழ்வை மனித சமுதாயத்தின் தொடக்கமாகவும், அடித்தளமாகவும் அமைத்துள்ளார். தம் அருளால் கிறிஸ்துவிலும், திரு அவையிலும் அதை பெரியதோர் அருளடையாளமாக அமைத்துள்ளார். கிறிஸ்தவ மணமக்கள் ஒருவர் ஒருவருக்கும் தம் பிள்ளைகளுக்கும் தம் இல்லத்தைச் சார்ந்த பிறருக்கும் அருட்கொடை துணையாளர்களாகவும், நம்பிக்கையில் சாட்சிகளாகவும் இருக்கின்றார்கள். அவர்களே தம் பிள்ளைகளுக்கு நம்பிக்கையை முதன் முதலாகப் பறைசாற்றுபவர்களாகவும் இருக்கின்றார்கள். சொல்லாலும், முன்மாதிரிகையாலும் இவர்களுக்குக் கிறிஸ்தவ வாழ்விலும், திருத்தூதுப் பணியிலும் பயிற்சி அளிக்கின்றனர். இவர்கள் தத்தம் அழைத்தலைத் தேர்ந்து கொள்ள முன்மதியுடன் உதவுகின்றனர். இவர்களில் எவருக்கேனும் இறை அழைத்தல் இருப்பதாகக் கண்டால் அதை முழுக்கவனத்துடன் ஊட்டி வளர்க்கின்றனர்.

திருமணப் பிணைப்பு தூய்மையானது முறிவுபடாதது எனத் தம் வாழ்க்கையாலேயே வெளிப்படுத்தி எண்பிப்பதும், கிறிஸ்தவருக்கேற்ற முறையில் பிள்ளைகளை வளர்ப்பதும் பெற்றோர் அல்லது காப்போரின் உரிமையும் கடமையுமாகும் என வன்மையாய் வலியுறுத்துவதும், குடும்பத்தில் முறையான தன்னாட்சி உரிமையையும், மாண்பையும் பாதுகாப்பதும் மணமக்களின் கடமையாக என்றும் இருந்து வருகின்றது.

### 4. குடும்பத்தின் திருத்தூதுப்பணி

சமுதாயத்தின் முதல் உயிரணுவாய் இருப்பதே குடும்பத்தின் திருத்தூதுப்பணி. இப்பணியைக் கடவுளிடமிருந்தே குடும்பம் பெற்றுள்ளது. திருமண வாழ்வில் இணைந்த தம்பதியர் தங்கள் குடும்பத்தோடு மட்டும் தங்கள் கடமையை நிறைவேற்றினால் போதாது. திருஅவை சமூகத்திலும் திருத்தொண்டாற்ற அழைக்கப்படுகின்றது. ஏனெனில் கிறிஸ்துவினுடைய போதனைகளையும், வாழ்வையும் தம்முடைய வாழ்வாக மாற்றுவதுதான் கிறிஸ்தவ வாழ்வு. கிறிஸ்துவைப்போல் வாழும்போதுதான் “இனி வாழ்பவன் நானல்ல, கிறிஸ்துவே என்னுள் வாழ்கின்றார்” (கலாத். 2:20) என்று தம்மால் கூற முடியும்.

கிறிஸ்தவ வாழ்வு, உறவின் வாழ்வு என்பதை மையப்படுத்தி பிறரோடும், கடவுளோடும் உள்ள உறவை வலுப்படுத்த உதவவேண்டும். நம்பிக்கை, எதிர்நோக்கு, அன்பு, சமூக நீதி போன்றவற்றைத் திருவிவிலியத்தின் அடிப்படையில் அறிந்துகொண்டு ‘கிறிஸ்து அவனாக’ ‘கிறிஸ்து அவளாக’ வாழ வேண்டும். நீதி அமைதிக்கான முயற்சிகளில் வாழும் தலத்திருஅவையுடன் ஒத்துழைத்து இறைமகன் இயேசு நிறுவ விரும்பிய இறையாட்சிப் பணியில் பங்கேற்பதுதான் கிறிஸ்தவக் குடும்பத்தின் திருத்தூதுப் பணி.

### திருத்தூதுப் பணியை சிறப்புடன் ஆற்ற

குடும்ப உறுப்பினர்கள் ஒருவர் மீது ஒருவர் பற்றுக் கொண்டிருக்க வேண்டும். ஒன்றாய்க் குழுமி இறைவனை நோக்கி செபிக்க வேண்டும். திருஅவையின் திருவழிபாட்டில் குடும்பம் முழுவதும் கலந்துகொள்ள வேண்டும். கிறிஸ்தவ குடும்பங்கள் விருந்தோம்பும் குடும்பங்களாக மிளிர வேண்டும். தேவையிலுள்ள சகோதரர் சகோதரிகள் அனைவருக்கும் உதவ வேண்டும். நீதியையும் பிற நற்செயல்களையும் ஊக்குவிக்க வேண்டும். கைவிடப்பட்ட குழந்தைகளை தத்து எடுத்து வளர்க்க வேண்டும். முன்பின் தெரியாதவரையும் வாஞ்சையுடன் வரவேற்கவேண்டும். இளைஞர்களுக்கு அறிவுரை வழங்கி வேலைவாய்ப்புப்பெற உதவ வேண்டும். திருமணம் புரிய இருப்பவர்கள் சிறந்த முறையில் அதற்குத் தங்களைத் தயாரிக்க உதவுதல் வேண்டும். மறைவாழ்வுக் கல்வியை அவசியம் கற்கவேண்டும். பொருளாதார அல்லது ஒழுக்கப் பிரச்சனைகளில் சிக்கியிருக்கும் மணமக்களுக்கும், குடும்பங்களுக்கும் ஆதரவாக இருத்தல் வேண்டும். முதியோர்களின் தேவைகளில் உதவ வேண்டும். ●

**மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம் :**

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar

பணம் பெறுபவர் பெயர் : The Editor, ‘MANNA’

வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782

# திருக்குடும்பத்தின் பார்வையில் குடும்ப ஆன்மீகம்

1. மரியா வானதூதரிடம், “இது எப்படி நிகழும்? நான் கன்னி ஆயிற்றே!” என்றார். குடும்பத்தில் சந்தேகங்கள் எழும்புவது அதைக் கேட்டு தெரிந்து கொள்வது நல்லது. ஏன்? எதற்கு? எப்படி என்று கேள்விகள் கேட்டு குழப்பங்களைத் தீர்த்துக் கொள்வது நல்லது.

2. மரியா “நான் ஆண்டவரின் அடிமை, உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்” என்றார். ஒரு குடும்பம் தன்னையே இறைவனுக்கு சரணாகதி ஆக்குவதுதான் குடும்ப ஆன்மீகம். குடும்பத்திற்கான கடமைகளைச் செய்துவிட்டு, கடவுளுக்கு தங்களைச் சமர்ப்பணம் செய்வது நல்லது.

3. எலிசபெத்து உரத்த குரலில், “பெண்களுக்குள் நீர் ஆசி பெற்றவர், உம் வயிற்றில் வளரும் குழந்தையும் ஆசி பெற்றதே! என் ஆண்டவரின் தாய் என்னிடம் வர நான் யார்? உம் வாழ்த்துரை என் காதில் விழுந்ததும் என் வயிற்றினுள்ளே குழந்தை பேருவகையால் துள்ளிற்று” என்றார். குடும்பத்தில் உள்ள குழந்தைகளை வாழ்த்துவது நல்லது. குடும்பத்தில் நேர்மறையான வார்த்தைகளை எப்போதும் பயன்படுத்துவது நல்லது.

4. மரியா பின்வருமாறு கூறினார். “அவர் தோள் வலிமையைக் காட்டியுள்ளார். உள்ளத்தில் செருக்குடன் சிந்திப்போரைச் சிதறடித்து வருகின்றார். வலியோரை அரியணையினின்று தூக்கி எறிந்துள்ளார். தாழ்நிலையில் இருப்போரை உயர்த்துகின்றார். பசித்தோரை நலன்களால் நிரப்பியுள்ளார். செல்வரை வெறுங்கையராய் அனுப்பிவிடுகின்றார். குடும்பத்தில் இருப்பவர்கள் சமூகத்திற்காக உழைப்பதை தம் கடமை என்று உணர வேண்டும். அரசியல் மாற்றத்திற்காக குடும்பங்கள் உழைக்க வேண்டும். சமூக மாற்றத்திற்காக குடும்பங்கள் அயராது பாடுபட வேண்டும். நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்காக ஒவ்வொரு குடும்பமும் ஈடுபட வேண்டும்.

5. அவர் கணவர் யோசேப்பும் நேர்மையாளர், அவர் மரியாவை இகழ்ச்சிக்கு உள்ளாக்க விரும்பாமல் மறைவாக விலக்கிவிடத் திட்டமிட்டார். குடும்பத்திலுள்ள கணவன், மனைவி தங்களுடைய பிரச்சனைகளைத் தங்களுக்குள்ளே தீர்த்துக்கொள்கின்ற யுத்திகளைக் கற்றுக்கொள்ள வேண்டும். குடும்ப ஆற்றுப்படுத்துதல் மையங்கள் இருப்பதை அறிந்து அவற்றைப் பயன்படுத்த வேண்டும்.



6. தாவீதின் வழிமரபினரான யோசேப்பும், தமக்கு மண ஒப்பந்தமான மரியாவோடு, பெயரைப் பதிவு செய்ய, கலிலேயாவிலுள்ள நாசரேத்து ஊரிலிருந்து யூதேயாவிலுள்ள பெத்லகேம் என்ற தாவீதின் ஊருக்குச் சென்றார். மரியா கருவுற்றிருந்தார். அவர்கள் அங்கு இருந்த பொழுது மரியாவுக்குப் பேறுகாலம் வந்தது. அவர் தம் தலைமகனைப் பெற்றெடுத்தார். விடுதியில் அவர்களுக்கு இடங்கிடைக்கவில்லை. எனவே பிள்ளையைத் துணிகளில் பொதிந்து தீவனத்தொட்டியில் கிடத்தினார். குடும்பத் தலைவனும், தலைவியும் குடும்பத்திற்காகவும், குழந்தைகளுக்காகவும் பல தியாகங்களை மேற்கொள்ள வேண்டும். குடிப்பழக்கத்தை ஒரு அப்பா தியாகம் செய்யாததாலே, தொடர்ந்து குழந்தைகளும் மதுவுக்கு அடிமையாவதை நாம் பார்க்கின்றோம் எனவே தியாகம் என்பது குடும்பத்திற்கு மிகத் தேவை.

7. மரியா இந்நிகழ்ச்சிகளையெல்லாம் தம் உள்ளத்தில் இருத்திச் சிந்தித்துக்கொண்டிருந்தார். குடும்பத்தில் ஒருவர் மற்றவரின் அமைதியை, மௌனத்தை மதிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.

8. குழந்தையும் வளர்ந்து வலிமை பெற்று ஞானத்தால் நிறைந்து கடவுளுக்கு உகந்ததாய் இருந்தது. பெற்றோர் தங்கள் குழந்தைகளின் உடல் வலிமை அதாவது, அவர்களுடைய உடற்பயிற்சி மற்றும் உணவு பழக்க வழக்கங்களைக் கண்காணிக்க வேண்டும். குழந்தைகள் ஞானம் பெறுவதற்கு குடும்ப நூலகங்கள் உருவாக்க வேண்டும். குழந்தைகள் கடவுளுக்கு உகந்தவர்களாய் வாழ மறைக்கல்வி, பாலர் சபை, சிறுவழி இயக்கம், சிறார் பணிக்குழு, இளம் கிறிஸ்தவ மாணவ இயக்கம் ஆகியவற்றில் அவர்கள் உறுப்பினர்களாக இருக்கின்றார்களா? என்பதை பெற்றோர் கண்காணிக்க வேண்டும்.

9. அங்கே அவர் போதகர்கள் நடுவில் அமர்ந்து அவர்கள் சொல்வதைக் கேட்டுக்கொண்டும் அவர்களிடம் கேள்விகளை எழுப்பிக் கொண்டும் இருந்தார். அவற்றைக் கேட்ட அனைவரும் அவருடைய புரிந்து கொள்ளும் திறனையும் அவர் அளித்த பதில்களையும் கண்டு மலைத்துப் போயினர். பெற்றோரும் பெரியோரும் குழந்தைகளுடைய கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டும். குழந்தைகளுக்கு கேள்வி கேட்கின்ற ஒரு பழக்கத்தைக் கற்றுக் கொடுக்க வேண்டும்.

10. அப்பொழுது அவருடைய தாய் அவரை நோக்கி, “மகனே, ஏன் இப்படிச் செய்தாய்? இதோ பார், உன் தந்தையும் நானும் உன்னை மிகுந்த கவலையோடு தேடிக்கொண்டிருந்தோமே” என்றார். பெற்றோர்கள் கோபப்படக்கூடாது. ஆனால் கண்டிப்போடு கூடிய அன்பு இருக்க வேண்டும்.

11. இயேசு அவரிடம், “அம்மா, அதைப்பற்றி நாம் என்ன செய்ய முடியும்? எனது நேரம் இன்னும் வரவில்லையே” என்றார். இயேசுவின் தாய் பணியாளரிடம், “அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்” என்றார். பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் படிப்பு, அறிவு, ஆற்றல், திறமைகள் இவற்றை பொதுநலனுக்காகப் பயன்படுத்தக் கற்றுக்கொடுக்க வேண்டும். தங்களுடைய அன்பியத்திலும், அக்கம் பக்கத்திலும் குழந்தைகள் பிற குழந்தைகளோடு இணைந்து நல்லது செய்வதற்கான வாய்ப்புக்களைப் பெற்றோர் உருவாக்கிக் கொடுக்க வேண்டும். திருக்குடும்பத்தின் ஆன்மீகம் நம் குடும்பங்களின் ஆன்மீகமாகட்டும். ●

**புதிய அலுவலக விலாசம்:**

மன்னா பத்திரிகை அலுவலகம்,

கலையருவி, இல: 202,

தலைமன்னார் வீதி, மன்னார்.



# கலை இலக்கியச் சாளரம்

# கவிதைக் களம்

## முதியோர் புலம்பல்

**ச. பற்றிக் லெம்பேட், ஓய்வுநிலை கிராம அலுவலர், வங்காலை.**

பொன்னாடை போர்த்தியே மேடையில்
முதியோர் எம்மை புகழ்ந்திடுவார்
என்னாடை இரவல் வாங்கியது
என்பதை யாரறிவார்
பன்னாடை என்றும் எம் குழந்தைகள்
எமை இகழ்ந்திடுவார்
இந்நாட்டின் முதியோர் மனத்துயர்தனை
யார் தான் தீர்த்திடுவார்.

முடக்குவாதத்தால் வீட்டின்
மூலைக்குள் என் வாழ்வு
நடக்க முடியாத என்னையோ
கவனிப்பார் எவருமில்லை.
துடக்கு நீக்கிய என் துணையும்
போய் விட்டது மேலே
மடக்கு கதிரையையும் ஒளித்து விட்டாள்
என் வீட்டின் மருமகள்.

வீட்டை விற்று நடுத்தெருவில்
அலைய விட்டான் என் மகன்
மாட்டை விற்று எமை பட்டினியும்
போட்டான் என் மகன்.
பீடையில் நாம் வீழ்ந்த வேளை
பார்த்திராத இவர்கள்
பாடையில் தாய் கிடக்கிறாள் இன்று
அம்மா என்று அலறி நடிக்கின்றார்கள்.
புண்கள் நிறைந்த என் அருகில்
நெருங்கத் தயங்கும் மருமகள்
கண்களால் தூர நின்று என் கழுத்து
நகைகளைக் கணக்கிடுவாள்
உண்பதற்கு நல்ல உணவை தர
மறுக்கும் அவள்.

எண்ணுவதற்கு முன் என் பென்சனை
எட்டி நின்று பறித்திடுவாள்.
வேர்வை சிந்தி உழைத்தேன்
அதனால் நீ உயர்ந்தவன் ஆனாய்
பார்வை இழந்ததுவே என் இரு கண்களும்
படுத்த படுக்கையானேன்
நோர்வையில் நீயிருந்து நோட்டுக்களை
அனுப்புவதால் எனக்கென்ன பயன்
போர்வையை என் புண்பட்ட உடலுக்கு
போர்த்திவிட அருகில் எவருமில்லையே!



## அதிகரித்த அவலங்கள்

முத்து முத்தான மனித உறவுகள்
முற்றத்தில் சிந்திடும் இரத்தக் கண்ணீர்கள்.
பற்றும் பாசமும் வைத்த உறவுகள்
பாதியில் பிரிந்திடும் துன்ப அவலங்கள்!

அன்னை மடியினில் தவழ்ந்த பிள்ளை
அன்பினைப் பெற்றிட யாருமே இல்லை.
பள்ளிப் படிப்பினைப் பாதியில் நிறுத்தி
பரிதவிக்கும் காலம் மலிந்துவிட்டது.

அனாதையும், விதவையும் அதிகரித்தனர்
அன்பினைப் பெற்றிட யாருமே இல்லை.
யுத்தம் நடக்கின்ற இரத்த பூமியில்
அரக்கர் கூட்டம் அதிகரித்து விட்டனர்.

காலைச் செய்தியில் நபரைக் காணவில்லை
மதியச் செய்தியில் மறைவாகக் கொலை
இரவுச் செய்தியில் இறந்து கிடக்கிறதாம்
இனந்தெரியாத முறையில் ஒரு மனித உடல்

வீதியின் அருகினில் அதிகரித்த கிளைமோர்
தவறிய இலக்குகளால் தடுமாறும் மனிதர்கள்
அப்பாவி மக்களுக்கு அவலங்கள் நேர்ந்ததே
ஆறாத் துயரினில் குடும்பங்கள் சோர்ந்ததே!

வானில் கேட்பது 'கிபீர் மிக்' ஓசை
காற்றோடு காற்றாய் மல்ரிபெரல் செல் ஓசை
காதில் கேட்பது மக்களின் புலம்பல் ஓசை
மொத்தமாய்க் கேட்பது மனித அவல ஓசைகள்


மூத்த உறவுகளின் முகம் பார்க்க முடியாது
சொந்த பந்தங்களின் சுகம் கேட்கமுடியாது
நன்மை, தீமைக்கும் நாம் சேரமுடியாது
எம் வாழ்வில் விடிவு எப்போது மலரும்?

## மனமே, என் மனமே.

எங்கும் பரந்திருக்கும்
ஏக பிரபஞ்ச சக்தியின் அகமே என் மனம்!
எதை எதையோ அறிந்திட வேண்டும்
எதை எதையோ தெளிந்திட வேண்டும்
எனத் துடிக்கும் நான்
ஏனோ என்னையே தெரிந்திட வேண்டும்
என நினைப்பதுகூட இல்லை!

ஆதியும் அந்தமும் இல்லாதவர்
என்னில் அடைபட்டு இருக்கிறார் என்பதை
அறிய மறுக்கும் என் மனமே....!

மனமே, உன் மகத்துவம்தான் என்ன!
மாண்பினை அறிந்திடு! மதிப்புடன் வளர்ந்திடு!
மனமே, என் மனமே!







# ஏலக்காயின் மருத்துவக் குறிப்புக்கள்



- நறுஞ்சுவையும், நறுமணமும் உள்ள மருந்துப்பொருள் ஏலக்காய். ஏலக்காய் கார்ப்புச் சுவையும் வெப்பத் தன்மையும் கொண்டது. சிறுநீரைப் பெருக்கும். தாகம், வியர்வையுடன் கூடிய தலைவலி, வறட்சி முதலியவற்றைக் கட்டுப்படுத்தும்.
- நாம் குறைந்தபட்சம் தேநீர் பாயாசம் முதலியவற்றில் சேர்த்தால் கூட நல்ல சுறுசுறுப்பைப்பெற முடியும். அத்தோடு ஜீரணக்கோளாறு இல்லாமல் ஆரோக்கியமான உடலையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ளலாம்.
- பசியே ஏற்படுவதில்லை, சாப்பிட பிடிக்கவில்லை என்று கூறுபவர்கள் தினமும் ஒரு ஏலக்காயை வாயில் போட்டு மென்றால் பசி எடுக்கும். ஜீரண உறுப்புக்கள் சீராக இயங்கும்.
- ஏலக்காயை பாலில் சுடவைத்து அத்துடன் ஒரு தேக்கரண்டித் தேனும் சேர்த்து அருந்தி வந்தால் இருபாலருக்கும் குறைபாடுகள் குணமாகும். அதே நேரத்தில் பாலில் அதிகமாக ஏலக்காய்த்தூளைச் சேர்த்தால் மலட்டுத்தன்மை ஆண்மைக்குறைவு அதிகரிக்கும். எனவே ஒரு சிட்டிகை ஏலக்காய்த் தூளையே பயன்படுத்தினால் போதும்.
- வெங்காயம் வெள்ளைப்பூண்டு சேர்த்துக் கொள்பவர்களுக்கு நெஞ்செரிச்சலும், வாய்வுத் தொந்தரவும் இருக்கும். இவர்கள் சாப்பாட்டிற்குப் பிறகு ஏலக்காய் மெல்லுவது நல்லது.
- இரண்டு ஏலக்காயில் உள்ள விதைகளை இடித்து கிராம்பு மல்லித்தூள் சேர்த்து தண்ணீர் கலந்து விழுங்கினால் உடல் ஜீரணமாகும். இதே போல ஏலக்காயை 'சுவிங்கம்' மிற்கு பதிலாக மென்றால் வயிற்றுப் பசியை அதிகரித்து நன்கு சாப்பிட வைக்கும்.
- ஏலக்காய், சீரகம், சுக்கு, கிராம்பு சம அளவாகப் பொடித்து, 2 கிராம் தேனில் தினமும் 3 வேளைகள் சாப்பிட்டுவர வயிற்று வலி குணமாகும்.
- நெஞ்சில் சளி உள்ளவர்கள் அடிக்கடி இருமி அவதிப்படாமல் இருக்கவும் உதவும். சிலர் வாயிலிருந்து நாற்றம் வீசும். அருகில் இருந்து பேசமுடியாதபடி வாய் நாற்றம் அதிகமாக இருக்கும். இவர்களும் ஏலக்காய் மென்று சாப்பிடலாம்.

# கொஞ்சம் சிரிங்க

**மகன்:** பலநாள் கள்ளன் ஒருநாள் பிடிபடுவான்தானே அப்பா?
**அப்பா:** ஓம். அதை நீ ஏன் கேக்கிறாய்?
**மகன்:** இல்லை அப்பா, நான் உங்கட 500 ரூபாயை எடுத்து 5 மாதம் ஆயிற்று!

* * * * *

**டோசி** : தீயணைப்புப் படைவீரரைக் கட்டினது தப்பாப் போச்சு!
**கில்டா:** ஏன்டி?
**டோசி:** அடுப்பு எரிஞ்சாக்கூட வந்து அணைச்சிடுறாரு!

* * * * *

**ராமு:-** தாஜ்மஹால் நமக்குக் கூறும் செய்தி என்னடா?
**சோமு:-** "செத்தாலும் செலவு வைப்பாள் காதலி" என்று கூறுகிறது.

* * * * *

**விமலா:** கீதா உன் வீட்டில் தினமும் சண்டையாக உள்ளதே
**கீதா:** நான் அவரின் சேட்டை அயன் பண்ணி குடுக்க அவர் எனக்கு கன்னத்தில் அடித்துவிட்டார்.
**விமலா:** நீ நல்ல காரியம்தானே செய்திருக்கிறாய்?
**கீதா:** இல்லை, அவர் சேட் போட்டுக்கொண்டிருக்கும்போது நான் அயன் பண்ணிவிட்டேன்.

* * * * *

**சாந்தி** : நீங்க எனக்கு லவ் லெட்டர் கொடுத்த விஷயம் எங்க வீட்டுல எல்லோருக்கும் தெரிஞ்சு போச்சு
**குமார்:** ஐயையோ உன் தங்கச்சிக்குமா?

**அம்மா:** வாடா கண்ணு, உனக்கு நிலாவைக் காட்டி சோறு ஊட்டுகிறேன்!
**குழந்தை:** பொய் சொல்லாதம்மா இன்றைக்கு அமாவாசை.

* * * * *

**நோயாளி** : டாக்டர், எனக்கு மீசையே வளர மாட்டேங்கிது. ஏதாவது மருந்து இருக்கா?
**டாக்டர்:** லவ் பண்ணு. மீசை என்ன தாடியே வளரும்!

* * * * *

**ஆசிரியர்** : பரீட்சை மண்டபத்தில் இருந்துகொண்டு என்னடா பக்கத்தில் பேச்சு?
**மாணவன்:** சந்தேகம் கேட்டேன் சேர்.
**ஆசிரியர்:** என்னடா சந்தேகம்? என்னிடம் கேள்.
**மாணவன்:** இன்றைக்கு என்ன பாடம் சார் பரீட்சை? தமிழா? கணக்கா?

* * * * *

**ஒருவர்** :- எனக்கு பிடிக்காத மரக்கறின்னா அது பூசணிக்காய்தான்.
**மற்றவர்** :- ஏன்?
**ஒருவர்** :- அது என் பொண்டாட்டி மாதிரியே இருக்குதே!

# அழகுக் குறிப்புக்கள்



- ஸ்ரோபெரி பழத்தைக் கொண்டு முகத்தை சிறிது நேரம் மசாஜ் செய்து, 15 நிமிடம் கழித்து முகத்தைக் கழுவ வேண்டும்.
- உருளைக்கிழங்கை அரைத்து அதனை மூக்கின் மேலே கரும்புள்ளிகள் உள்ள இடத்தில் தடவி, 20 நிமிடம் ஊற வைத்து பின் வெதுவெதுப்பான நீரில் கழுவினால் கரும்புள்ளிகள் நீங்கிவிடும்.
- பேக்கிங் சோடாவை நீர் சேர்த்து பேஸ்ட் செய்து முகத்தில் தடவி சிறிது நேரம் ஸ்கரப் செய்து பின் கழுவ வேண்டும். இதனால் சருமத்தில் உள்ள இறந்த செல்கள் முழுமையாக வெளியேற்றப்பட்டு முகம் பொலிவோடும், அழகாகவும் இருக்கும்.
- எலுமிச்சைச் சாறு கரும்புள்ளிகளை நீக்குவதற்கு ஒரு சிறந்த பொருள். அதற்கு எலுமிச்சை சாற்றினை கரும்புள்ளிகள் உள்ள இடத்தில் தடவி மசாஜ் செய்து வர கரும்புள்ளிகள் அகலும்.
- பூண்டில் உள்ள உட்பொருட்கள் சருமத்தில் உள்ள கறைகளை எளிதில் போக்க வல்லது. அதற்கு ஒரு பூண்டு பல்லை இரண்டாக வெட்டி, அதனை முகத்தில் தேய்க்க வேண்டும். இப்படி ஒரு நாளைக்கு 3 முறை செய்து வந்தால் முகத்தில் இருக்கும் பிரச்சனைகள் நீங்கும்.
- வேப்பிலை ஒரு சிறந்த மருத்துவக் குணம்வாய்ந்த பொருள். எனவே வேப்பிலையை அரைத்து, அத்துடன் ஒரு சிட்டிகை மஞ்சள் தூளை சேர்த்து கரும்புள்ளிகள் உள்ள இடத்தில் தடவி வந்தால் எளிதில் கரும்புள்ளிகள் போய்விடும்.
- தீக்காயங்களுக்கும் உடனடித்தீர்வு கற்றாழைச் சாறுதான். இதன் சாறை இரவு வேளையில் முகத்தில் தேய்த்து காலையில் வெந்நீரால் கழுவ முகத்தில் உள்ள கருமை நீங்கி முகம் பொலிவு பெறும்.
- தலைமுடி பராமரிப்பில் கருப்பாகவும், வளர்ச்சியைத் தூண்டவும் பயன்படுகின்றது. தலையில் ஏற்படும் கேசப் பிரச்னைகள் மற்றும் பொடுகை நீக்குகின்றது. கற்றாழை சோற்று பகுதியை தேங்காய் எண்ணெயுடன் காய்ச்சி தலைக்குத் தேய்த்துவர கேசம் நன்கு செழித்து வளரும்.

# மன்னா விளம்பரப் பலகை

"உன்மேல் அன்பு செலுத்துகிறவர்களை நேசி.
உன்மீது கோபம் கொண்டவர்களை அதைவிட அதிகமாக நேசி."

"குறுக்கு வழியில் ஆயிரம் ரூபாவைச் சம்பாதிப்பவன் விரைவில் பத்தாயிரம் ரூபாவை இழப்பதற்கு தயாராகி விட்டான் என்பதே உண்மையாகும்."

......................

"ஒற்றைக் கம்பியில் நடப்பதற்கும், ஒழுக்கத்தில் நடப்பதற்கும் வேறுபாடில்லை. கம்பியில் தவறினால் இறப்புத்தான், ஒழுக்கத்தில் தவறினால் உயிர் நிலைபெறாது."

......................

"உண்மையாக நடப்பதால் துன்பங்கள் குவிகின்றது என்பதற்காகப் பொய் வாழ்கையைத் தேடாதே."

"நம்பி எதையும் துணிந்து செய்யும் அன்பு எதையும் பொறுத்துக்கொள்ளும்"

"தற்காலிக சுகபோகங்களுக்காக நாம் நம்முடைய ஒழுக்கத்தை பழுதாக்கி கொள்ளலாகாது. வாழ்வில் இன்பம் பெறுவதற்குரிய வழி நம்முடைய ஒழுக்கத்தைப் பாதுகாப்பதேயாகும்."

......................

"எவன் ஒருவன் தாய்க்குத் தலை வணங்குகிறானோ
எவன் ஒருவன் விதவைக்கு பொட்டிட்டு பூச்சூடுகிறானோ
அவனே மனித சமூகத்தின் மனித தெய்வம்"

..................

"ஓரிடத்தில் ஓய்வுவெடுக்க வேண்டுமானால் - நீ முதலில் துரிதமாக ஓடவேண்டும்"

சில மனிதர்கள் வரமாக நம் வாழ்க்கையில் வருவார்கள்.
சில மனிதர்கள் பாடமாக நம் வாழ்க்கையில் வருவார்கள்.

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.199

## எஸ்ரா (அதிகாரம் 1 முதல் 10 முடிய)

உங்கள் விடைகளை ஏப்ரல் மாதம் 05ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதும் மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். **(பதிப்பாசிரியர்)**

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | | | | | | 02 |
| | | | | 03 | ✡ | | | | | 04 |
| | 05 | | | | 06 | | | | ✡ | |
| | | | | 07 | ✡ | | | 08 | | |
| 09 | | | | | | 10 | | | | 11 |
| | | 12 | 13 | | | | | | | |
| | | | | 14 | | | | | 15 | |
| | 16 | | | | | | | | | |
| | ✡ | 17 | | | | ✡ | 18 | | | |
| | | | | | 19 | | | 20 | | |
| 21 | | | | | | | | 22 | | 23 |

உங்கள் விடைகளை, *குறுக்கெழுத்துப் போட்டி, மன்னா பத்திரிகை அலுவலகம், கலையருவி, இல. 202, தலைமன்னார் வீதி, மன்னார்* என்ற முகவரிக்கு அனுப்பவும்.

(— என்ற அடையாளம் சுட்டி நிற்பது முழு இறைவார்த்தையின் இடைச்சொற்கள் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்)

### இடமிருந்து வலம்

1. பாரசீக மன்னரான சைரசின் ............ மித்ரதாத்தின் கையில் அவற்றை ஒப்படைத்தார்.
5. அவர்கள் பேராற்றுக்கு ...................ப் பகுதிகளையெல்லாம் ஆட்சி செய்துள்ளனர்.
6. ...................... இஸ்ரயேலுக்கு இன்னும் நம்பிக்கை உண்டு.
9. ஏழாவது மாதத்தில் முதல் நாளிலிருந்து ஆண்டவருக்கு ........................ செலுத்தத் தொடங்கினார்கள்.
10. மேதிய ......................ல் இருந்த எக்பத்தானா அரண்மனையில் ஏட்டுச்சுருள் ஒன்று அகப்பட்டது.
16. அவர்களைக் கசிப்பியாவிலிருந்த .................. தலைவரான இத்தோவிடம் அனுப்பிவைத்தேன்.
17. அவருடைய கடவுளான ஆண்டவரின் அருட்...................... அவரோடு இருந்ததால் அவருக்குத் தேவையான அனைத்தையும் மன்னர் அவருக்குக் கொடுத்தார்.
21. யூதாவிலும், எருசலேமிலும் வாழ்ந்த யூதருக்கு இஸ்ரயேலின் கடவுள் பெயரால் ..................... உரைத்தனர்.

### மேலிருந்து கீழ்

1. அவர்கள் ஒவ்வொருவரும் தம் வசதிக்கேற்ப ஐநூறு கிலோ கிராம் ............. மூவாயிரத்து நானூற்று இருபத்தைந்து கிலோகிராம் வெள்ளியும், நூறு குருத்துவ ஆடைகளும் கொடுத்தார்கள்.
4. கடவுளது இந்த இல்லத்தின் மற்ற ஊழியர் எவர்மீதும் திறையோ, .......................... தீர்வையோ சுமத்துவது முறையன்று.
9. எங்களுள், சிலரை ................க விட்டுவைத்தீர்.
10. யூதா மாநிலத்திலுள்ள ...................... கடவுளின் கோவிலுக்குச் சென்றிருந்தோம்.
11. உமக்கும் சகோதரர்களுக்கும் நலமெனப் பட்டதை உங்கள் கடவுளின் .........................ப்படி செய்யும்.
12. அவர் நல்லவர், ஏனெனில் அவர் .....................ம் இஸ்ரயேல் மீது என்றென்றும் உள்ளது.
13. தங்கள் குற்றநீக்கப் ........................ ஒரு கிடாயைச் செலுத்தினர். (2வது எழுத்து 1வது எழுத்துக்குமேலே உள்ளது)
15. அப்போது செயல்தியேல் மகன் செருபாபேலும், யோசதாக்கின் மகன் ஏசுவாவும் .......................... எருசலேமிலுள்ள கடவுளின் கோவிலை மீண்டும் கட்டியெழுப்பத் தொடங்கினர்.

### வலமிருந்து இடம்

2. வேற்றுநாட்டு மக்களால் அச்சம் .......................... பலிபீடத்தை அதற்குரிய இடத்திலே அமைத்தனர்.
3. அரச அலுவலகர்களுக்குக் ...........................க் கொடுத்து அவர்களின் திட்டங்களைச் சீர்குலைக்கத் தூண்டினர்.
4. எஸ்ரா இஸ்ரயேலின் கடவுளான ஆண்டவர் மோசேக்கு அளித்திருந்த திருச்சட்டநூலில் ...................... (3வது எழுத்து இறுதியாக உள்ளது)
7. மக்கள் அனைவரும் மேற்குறிப்பிட்டதன் காரணமாகவும் ......................... காரணமாகவும் கடவுளது இல்லத்தின் வளாகத்தில் நடுங்கிக்கொண்டு உட்கார்ந்திருந்தனர்.
8. கடவுளின் ..................க் கட்டும் பணியைத் தடைசெய்யாதிருங்கள்.
19. ஆகவே இப்பொழுது மன்னர் விரும்பினால் பாபிலோனில் உள்ள தமது ......................ல் தேடிப் பார்க்கட்டும்.
20. ஆனால் தற்பொழுது சிறிது காலமாய் எம் கடவுளும், ஆண்டவருமாகிய உமது ..................... துலங்கியுள்ளது.
22. இதனால் குருக்கள் விண்ணகக் கடவுளுக்கு .....................ப் பலிகள் செலுத்தி மன்னரும் அவர்தம் மைந்தரும் நீடூழி வாழ வேண்டுமென மன்றாடுவார்களாக.

### கீழிருந்து மேல்

10. காலையிலும் .................................... ஆண்டவருக்கு எரிபலிகள் ஒப்புக்கொடுத்தனர்.
14. உமது வார்த்தையின்படியே ........................ செய்வோம். (இறுதி எழுத்து 1வது எழுத்துக்குக்கீழே உள்ளது)
15. கடவுளே உம்மை நோக்கி என் ..........................த் திருப்ப வெட்கி நாணுகிறேன்.
16. அவர்கள் ..................... ஏழாம் ஆட்சியாண்டில் ஐந்தாம் திங்கள் எருசலேமை அடைந்தார்கள்.
18. யூதர்களின் ஆளுநரும், யூதர்களின் .................. களும் கடவுளின் கோவிலை அது முன்பு இருந்த இடத்தில் மீண்டும் எழுப்பட்டும்.
19. அதில் தொன்றுதொட்டு ......................... எழுந்துள்ளன.
20. "இக்கட்டடத்தைக் .......................... யார் யார்?" என்று வினவினர்.
23. மேலும் அவர்கள் மன்னரின் ..................... மடல்களைச் சிற்றரசர்களிடமும், யூப்பிரத்தீசின் அக்கரையிலிருந்த ஆளுநர்களிடமும் கொடுத்தனர்.

## விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 197 சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசுபெறும் மூன்று அதிஸ்டசாலிகள்:



**முதலாம் பரிசு:**
இசக்கியேல்,
ஜோசப்வாஸ் நகர்,
தோட்டவெளி.



**இரண்டாம் பரிசு:**
I. இருதயமேரி,
இல: 54, கற்குளம்,
ஆசிகுளம், வவுனியா.

**மூன்றாம் பரிசு:**
செ. அனுசியா கூஞ்ஞ,
அரிப்பு மேற்கு,
சிலாவத்துறை.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 78 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 63 பேர்.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 197ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

1. M. பிளன்ரீனா, இல: 34/9, கன்னியர்மடவீதி, மன்னார்.
2. அ. சஞ்சீபன், சாளம்பன், ஆண்டான்குளம்.
3. அ. புளோறன்ஸ், கங்காணிதீவு, நானாட்டான்.
4. டெபோறா, மோகன்ராஜ், தபாலகவீதி, மன்னார்.
5. K.R. கலிஸ்ரஸ், இல: 54, கற்குளம், சிதம்பரபுரம்.
6. A. பேர்ஜின், கற்குளம், ஆசிகுளம்.
7. கே. துளசிகா, இல: 54, கற்குளம், ஆசிகுளம்.
8. S. செபமாலை மார்க், 7ம் வட்டாரம், வங்காலை.
9. புஸ்பாசேவியர், இல: 58/A, மத்தியவீதி, உவர்மலை.
10. செ. அரியமலர், சாளம்பன், ஆண்டாங்குளம்.
11. ஸ். ரெலன், சாளம்பன், ஆண்டாங்குளம்.
12. அ. செபஸ்தியாம்பிள்ளை, சாளம்பன், ஆண்டாங்குளம்.
13. செ. ஜெபராக்கினி, சாளம்பன், ஆண்டான்குளம்.
14. J. ஆதனா, சாளம்பன், ஆண்டான்குளம்.
15. S. யூலிக்கா, இல: 38, வீரபுரம், நேரியகுளம், வவுனியா.
16. D.P. சாறா, மாவிலங்கேணி, முருங்கன்.
17. எ. ஜெனோலின், புத்திரர்கண்டான், முருங்கன்.
18. செ. அஞ்சலா டயஸ், மரியாள்வீதி, தாழ்வுபாடு.
19. K. மடோனா, இல: 54, கற்குளம், வவுனியா.
20. எ. ஜெய்மென் ராஜா, புத்திரர்கண்டான், முருங்கன்.
21. வ. அருண் கிருத்திக் துரம், மரியாள்வீதி, தாழ்வுபாடு.
22. D.P. டக்சன் யோனாஸ், மாவிலங்கேணி, முருங்கன்.
23. ஆன் சோபிகா, முருங்கன் கமம், முருங்கன்.
24. தேவினா, பத்மராஜா, பெத்தனி, மடுமாதா வீதி, மன்னார்.
25. ஞா. வினோதர்சி, முதலைகுத்தி, உயிலங்குளம்.
26. செ. ஜெபறாஜ், சாளம்பன், ஆண்டாங்குளம்.
27. பெ. விறைன் குரூஸ், மரியாள்வீதி, தாழ்வுபாடு.
28. செ. வளன் நிலுஜன் துரம், மரியாள் வீதி, தாழ்வுபாடு.
29. செல்வி வயலட் யோண், ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.
30. செ. ஆன் நியூசிக்கா துரம், மரியாள்வீதி, தாழ்வுபாடு.
31. அ. ஒசின் சோபியா, சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
32. ராஜ், கிறிஷ் குலாஸ், 8ம் வட்டாரம், பேசாலை.
33. அ. டிலோஜன், சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
34. அ. பெனடிற் பிறாங், எழுவைதீவு, யாழ்ப்பாணம்.
35. பி.டேவிற், பெற்றா, மன்னார்.
36. வி. அபிஷாந், இலுப்பைக்கடவை,
37. ச. மரிய கொண்சிக்கா குரூஸ், சிலாவத்துறை.
38. வி. விதுஷாளினி, இலுப்பைக்கடவை.
39. அ. ஜஸ்மின் ஷறோன், ஆவணம், நானாட்டான்.
40. பி. நித்தியானந்தன் குரூஸ், ஆனாள்நகர், வங்காலை.
41. ஜீன்போன் லக்மினி குரூஸ், வங்காலை.
42. ஜேம்ஸ் இலக்கியன், தோட்டவெளி.
43. செ. ஆன் பிளசி பெனாண்டோ, முத்தரிப்புத்துறை.
44. J. மேரி ஸ்வேதா, சவேரியார்புரம், சிலாவத்துறை.
45. நி. நியோவின் பறுனாந்து, முத்தரிப்புத்துறை.
46. அன்சிலின், பெர்ஜின், முதலைகுத்தி, உயிலங்குளம்.
47. A. நிருசன், உப்புக்குளம், மன்னார்.
48. அ. நிசாந், முருங்கன் கமம், முருங்கன்
49. அ. டிலோஜனா, சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
50. றொபேட் றமீசன், சாந்திபுரம், மன்னார்.

## 53வது சமூகத்...

04ஆம் பக்கத் தொடர்ச்சி.

**தொடர்புகள் கூடினாலும் தனிமையாக்குதல்.**

தொழில்நுட்பத் தொடர்புகள் நம்மிடையே அதிகரித்துள்ள போதிலும் அவை நம்மை தனிமைப்படுத்தும் வகையிலும் செயலாற்றுகின்றன என்ற முரண்பாட்டை, திருத்தந்தை இச்செய்தியில் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

தொடர்புகள் கூடியுள்ள வேளையில் நாம் தனித்தனியே பிரிக்கப்படும். ஆபத்திலிருந்து எவ்விதம் மீள்வது என்பதை ஒரு கேள்வியாக எழுப்பியுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இதற்கு ஒரு பதிலாக மனித சமுதாயத்தை உடலுக்கு ஒப்புமைப்படுத்தி சிந்திக்கலாம் என்ற பதிலையும் அளித்துள்ளார்.

**மனித சமுதாயம் ஓர் உடல்**

உடல் என்ற உருவகத்தைப் பயன்படுத்தியுள்ள புனித பவுல் இந்த உறவை வலுப்படுத்தக் கூறும் அறிவுரை நம்மை இணைக்கும் என்று தன் செய்தியில் சுட்டிக்காட்டியுள்ள திருத்தந்தை "பொய்யை விலக்கி ஒருவரோடு ஒருவர் உண்மை பேசுங்கள். ஏனெனில் நாம் யாவரும் ஓருடலில் உறுப்புக்களாய் இருக்கின்றோம்" (எபேசியர் 4:25) என்று புனித பவுல் கூறியுள்ள சொற்களை நினைவுறுத்தியுள்ளார்.

உறவின் முக்கியத்துவம் இக்காலத்தில் அதிகமாய் உணரப்படும் வேளையில் உறவை வளர்க்க உதவியாக நாம் வலைத்தளங்களைப் பயன்படுத்தவும் கற்றுக்கொள்ளவேண்டும் என்று தன் செய்தியில் நினைவுறுத்தும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் மனித உறவுகளை வளர்க்க கிறிஸ்தவர்கள் பெரும் பங்காற்றவேண்டும் என்று விண்ணப்பித்துள்ளார்.

**சந்திப்பிற்கு உதவும் சமூக வலைத்தளங்கள்**

மனிதர்கள் ஒருவரை ஒருவர் நேருக்குநேர் சந்திப்பதே உண்மையான சந்திப்பு என்பதை எடுத்துரைக்கும் திருத்தந்தை இத்தகையச் சந்திப்பிற்கு நம் சமூக வலைத்தளங்கள் உதவியாக இருக்கவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

வலைத்தளங்கள் நம்மைத் தனிமைப்படுத்தாமல் ஒருவரோடு ஒருவரை இணைக்கவும் நாம் கூடிவந்து செபிக்கவும் ஒருவருக்கொருவர் உதவவும் பயன்படுத்தப்பட்டால் நமது வலைத்தளங்களின் முழு பயனை நாம் பெறமுடியும் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தன் 53வது செய்தியின் இறுதியில் கூறியுள்ளார்.

**திருத்தந்தையின் டுவிட்டர் செய்தி**

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வெளியிட்ட 53வது சமூகத் தொடர்பு உலக நாள் செய்தியின் ஒரு தொடர்ச்சியாக தன் டுவிட்டர் செய்தியைப் பதிவு செய்துள்ளார். "நம்மைப் பொறியில் சிக்கவைக்காமல் விடுதலை செய்து சுதந்திரமாக வாழும் அனைத்து மக்களின் உறவைப் பாதுகாப்பதற்கே வலைத்தளம் உருவாக்கப்பட்டுள்ளது இதையே நாம் விரும்புகின்றோம்" என்ற சொற்கள் திருத்தந்தை வெளியிட்ட டுவிட்டர் செய்தியில் இடம்பெற்றன.

1967ஆம் ஆண்டு புனித திருத்தந்தை 6ஆம் பவுல் அவர்கள் சமூகத் தொடர்பு உலக நாளை நிறுவினார் என்பதும் ஒவ்வோர் ஆண்டும் இவ்வுலக நாள் தூய ஆவியாரின் வருகைப் பெருவிழாவுக்கு அடுத்த ஞாயிறு சிறப்பிக்கப்படுகின்றது என்பதும் வரலாற்று குறிப்புக்கள். ●

## ஒற்றுமையின்மை......

03ஆம் பக்கத் தொடர்ச்சி.

இழப்புக்கள், பிரச்சனைகள் கொண்ட நாடுகளுக்கு தரிசித்து அங்குள்ள நன்மை, தீமைகளை அறிந்து கொள்வதற்காக பல நாடுகளுக்கு விஜயத்தை மேற்கொள்வதுபோல் இலங்கை நாட்டிலும் மக்கள் கொண்டுள்ள நிலைமைகளை அறிந்து கொள்வதற்காக இலங்கை நாட்டுக்கு ஜேர்மன் நாட்டு கத்தோலிக்க திருச்சபையின் பேராயர் அதிமேதகு லூட்விங் சிக் ஆண்டகை தலைமையில் கொண்ட குழு மன்னார் மாவட்டத்திற்கு கடந்த சனிக்கிழமை (05.01.2018) விஜயத்தை மேற்கொண்டது.

இவ் குழுவினரின் கருத்தமர்வில் கலந்து கொண்ட மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுத் தலைவர் அருட்பணி. அ. ஞானப்பிரகாசம் அடிகளார் தொடர்ந்து இவர்கள் மத்தியில் கருத்துத் தெரிவிக்கையில் மன்னார் மாவட்ட பிரஜைகள் குழு ஆரம்பிக்கப்பட்டது 1980ஆம் ஆண்டாகும். மன்னார் மாவட்டத்தைச் சார்ந்த மூத்த உறுப்பினர்கள் மனித நேய சம்பந்தமான பலதரப்பட்ட காரணங்களுக்காக இவ் அமைப்பை உருவாக்கினார்கள். இவ் பிரஜைகள் குழு அமைப்பை மன்னாரின் முன்னாள் ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகை வடிவமைத்துக் கொடுத்துள்ளார்.

இவ் அமைப்பானது காணாமல் ஆக்கப்பட்டோர் விடயமாகவும், சிறையில் அரசியல் கைதிகளாக இருப்போரின் விடயமாக தனது கடமையை ஒரு செயற்திட்ட அடிப்படையில் செய்துகொண்டு வருகின்றது. மன்னார் மாவட்ட பிரஜைகள் குழு. மன்னார் மாவட்ட மக்கள் எதிர்நோக்கும் குடும்பப் பிரச்சனைகள், நிலப்பிரச்சனைகள், வைத்தியசாலைப் பிரச்சனைகள், சட்ட ரீதியான பிரச்சனைகள் மற்றும் மனித உரிமை சம்பந்தமான பிரச்சனைகள் ஆகியவற்றின் தீர்வுகளுக்காக இவ்வாறு மக்கள் நலன் கருதி பலதரப்பட்ட வேலைகளைச் செய்து வருகின்றது. அத்துடன் நீதியை பெற்றுக் கொடுக்கும் நோக்குடன் ஐ.நாவுடனான பயணத்திலே இவ் அமைப்பு செயற்பட்டு வருகின்றது. இந்நேரத்தில் நாங்கள் ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்டுகின்றபோது பல முட்டுக்கட்டைகளை சந்திக்க வேண்டியும் உள்ளது. இங்குள்ள அரசியல் வேறுபாடுகள், சாதிப் பிரச்சனைகள் மதங்களுக்கிடையேயுள்ள பிழையான எண்ணங்களும், பொருளாதார போட்டிகளும் அரசு சார்பான திணைக்களங்களின் செயற்பாடுகளும் அதாவது தொன்பொருள் ஆய்வு திணைக்களம் இவ்வாறான திணைக்களங்கள் மக்களின் நலனுக்கான செயற்பாட்டில் முட்டுக்கட்டைகளாக இருக்கின்றன.

அத்துடன் எமது மக்களின் நிலங்கள் எல்லாம் பறிக்கப்படுகின்றன. இதிலும் இங்குள்ள மக்கள் பொருளாதார பின்னனிக்கு முக்கிய காரணமாக இருப்பதில் ஒன்று லீசிங் கம்பனிகள், நுண்கடன் திட்டங்கள். இவர்கள் மக்கள் மத்தியில் தேவையான பொருட்களை கடனாக வழங்கி மக்கள் தங்கள் உரிமைகள் பற்றி சிந்திக்கா வண்ணம் ஆடம்பரப் பொருட்களை வழங்கி கடனாளிகளாக ஆக்கி கடனைப்பற்றியே சிந்திக்கும் நிலைக்கு உட்படுத்தியுள்ளனர். மக்களின் நலன்நோக்கி நாங்கள் முன்னெடுக்கும் செயற்பாட்டிற்கு பல சவால்கள், தடைகள் காணப்படுகின்றன.

# நீங்காத நினைவுகள்

## 04ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 04 01 1954



உதிர்வு 04 02 2015

### திரு. சீமான் யோசப்
(நானாட்டான்)

**"இன்றே நீ என்னோடு வான்வீட்டில் இருப்பாய்"**

அப்பா என்ற வார்த்தைக்கு அன்பு மொழி பகர்ந்து வந்தீர் சுற்றியுள்ள உற்றாரோடு உறவினராய் இருந்து வந்தீர். அழகான உம் வதனம் கண்டு ஆண்டுகள் நான்கு கடந்தனவோ நித்தியத்தில் உம் ஆன்மா இளைப்பாற இறைவனிடம் வேண்டுகின்றோம்.

**பிரிவை நினைந்துருகும்,**
மனைவி, பிள்ளைகள், சகோதரங்கள், உற்றார் உறவினர்கள்.

## 9,1/2 ஆண்டு, 9ஆம் ஆண்டு நினைவஞ்சலி





திரினிற்றி அன்ரன் கமலநேசன் (குஞ்சு)

ஆன் மேரி திரேசா பயஸ் பிலிப்புப்பிள்ளை (பெரியா)

(கொன்வென்ட் வீதி, மன்னார்.)

மலர்வு : 29 - 04 - 1952
உதிர்வு : 08 - 02 - 2010

மலர்வு : 27 - 08 - 1945
உதிர்வு : 06 - 08 - 2009

**"இதோ உன்னைப் பெயரிட்டு நாமே அழைத்தோம். ஆகவே நீ நமக்கே சொந்தம்" (எசாயா 43:1).**

அன்பான எம் தெய்வங்களே!
எம்மை விட்டுப்பிரிந்து ஆண்டுகள் பல ஆனாலும்
எம்மைவிட்டு விலகாது உம் நினைவு.
இறைவன் பாதத்தருகில் அமர்ந்திருக்க
நாளும் பொழுதும் இறைவனிடம் வேண்டுகின்றோம்.

***உம் பிரிவால் துயருறும்:***
***சகோதரர்கள், சகோதரிகள், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள்.***
***தகவல் : கசியன் பிலிப்புப்பிள்ளை, இலண்டன்***

## 07ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 13 05 1945



உதிர்வு 12 02 2012


### திரு. சவிரி பறுணாந்து (செல்வம்)
(மாந்தை)

இறைவனில் சங்கமமாகி 7 ஆண்டுகள் மறைந்தாலும்,
ஐயா! உங்கள் அன்பும், பாசமும், விட்டுச் சென்ற விசுவாச வாழ்வும் என்றும் எம்மை விட்டு அழியாது.
உங்களுடைய மலர்ந்த முகமும், வீரத்துவமான இறைவாஞ்சையும் இன்னும் எங்களுக்குள் வாழ்கின்றன.
மண்ணகத்தில் பெயர் அழிந்தாலும், ஆண்டுகள் பல மறைந்தாலும் ஐயா நீங்கள் என்றும் எங்களோடு இருக்கின்றீர்கள்.
என்றும் உங்கள் ஆன்மா இறைவன் சந்நிதியில் இளைப்பாற இறைவனை வேண்டுகின்றோம்.

பிரிவால் நினைந்துருகும்;
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

## 02ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 24 01 1936



உதிர்வு 27 02 2017

### திரு. சுவாந்தக்குரூஸ் இசிதோர் (அருளப்பா)
(உயிலங்குளம், மன்னார்)

**"ஆண்டவரிடம் அச்சம் கொள்வோரின் முடிவு மகிழ்ச்சிக்குரியதாய் அமையும். அவர்கள் இறக்கும் நாளில் ஆசி பெறுவார்கள்." (சீராக். 1:13)**

மண்ணக வாழ்வை மகத்துவமாய் வாழ்ந்து
விண்ணகம் சென்ற எம் அன்பு ஐயாவே!
நிழல் போல் எம்மோடு நீர் இருந்து மறைந்தாலும் அழியாது
உம் நினைவலைகள் எம்முள்ளே எந்நாளும் உயிர்வாழும்
நானிலத்தில் எம்மை விட்டு மறைந்துபோய்
ஈராண்டு சென்றாலும் - பரமன் பாதம்
உம் ஆன்மா இறைபுகழ்பாடி என்றும்
மகிழ்ந்திருக்க தினமும் நாம் வேண்டுகின்றோம்.

**பிரிவை நினைந்துருகும்,** அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை, உறவினர்கள்.

## சில்லாலை.....

03ஆம் பக்கத் தொடர்ச்சி.

ஆயர் தனது மறையுரையில் இலங்கையில் ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் கத்தோலிக்க மக்கள் எதிர்கொண்ட சவால்களையும், அதனை மேற்கொள்ள புனித யோசேவ்வாஸ் பொதுநிலை மக்களின் விசுவாசத்தை வலுப்படுத்தி வழிநடத்த மேற்கொண்ட முயற்சிகளை எடுத்துக்கூறி யாழ்ப்பாண மறைமாவட்டத்தில் இவ்வருடம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள அழைத்தல் ஆண்டில் பெதுநிலையினர் தமது விசுவாச வாழ்வை வலுப்படுத்தி திருச்சபையின் நற்செய்தி அறிவிப்புப்பணியில் ஆர்வமுடன் ஈடுபட முனையவேண்டும் என்ற அழைப்பினையும் விடுத்தார்.

திருப்பலியின் இறுதியில் புனிதரின் திருச்சுரூப ஆசீர்வாதம் ஆயரினால் வழங்கப்பட்டது. திருப்பலியைத் தொடர்ந்து இளையோர் ஆண்டு நிறைவுநாள் நிகழ்வும், அழைத்தல் ஆண்டு அங்குரார்ப்பண நிகழ்வும் நடைபெற்றன.

இளையோர் ஆண்டில் விற்பனை செய்யப்பட்ட அதிஸ்டலாப சீட்டைகளுக்கான சீட்டிழுப்பும் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஆயிரத்திற்கும் அதிகமான பொதுநிலையினர், குருக்கள், துறவிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். இந்நிகழ்விற்கான ஏற்பாடுகள் அனைத்தும் சில்லாலைப் பங்குத்தந்தை அருட்திரு. அகஸ்ரின் அடிகளாரினால் மேற்கொள்ளப்பட்டிருந்து.●

## இளைஞர்....

01ஆம் பக்கத் தொடர்ச்சி.

இளைஞர் ஆண்டு உத்தியோகப்பூர்வமாக பேராயரினால் ஓலை வாசிக்கப்பட்டு பிரகடனப்படுத்தப்பட்டது. இளையோர் ஆண்டானது இளையோர்களுக்கு முக்கிய கவனஞ்செலுத்த வேண்டும் என்பதனை குறித்து நிற்கின்றது. திருத்தந்தையின் கூற்றுப்படி, நாம் நமது இளையோரை நமது குருத்துவ மற்றும் மேய்ப்புப்பணிகளின் பங்காளிகளாக்க வேண்டும். உண்மையில் அடுத்த ஆண்டு எங்கள் தலைமை ஆயர் அவர்கள் உலக ரீதியில் இளையோர் ஆண்டாக அறிவிக்கவுள்ளார். இளையோர் ஆண்டுக்கான மேய்ப்புப்பணிச் சுற்றுமடல் விரைவில் வெளியிடப்படும். பங்குத்தந்தையர்கள் இளையோரோடு இணைந்து நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்தி இளையோர் ஆண்டைக் கொண்டாடுமாறு ஊக்குவிக்கின்றேன் என்று தனது மறையுரையில் பேராயர் கேட்டுக்கொண்டார்.●

## பேசாலையில்

03ஆம் பக்கத் தொடர்ச்சி.

இவ் முகாமில் கலந்து கொண்ட மன்னார் சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ். வெற்றிநேசன் ராஜன், பேசாலைப் பிரதேச வைத்தியசாலை பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி இம்மானுவேல் ஈற்றன் பீரிஸ் ஆகியோருடன் இரத்ததானம் செய்வோரையும் படங்களில் காணலாம். இவ் முகாமில் 62 நபர்கள் இரத்ததானம் வழங்கியுள்ளதாக பேசாலைப் பிரதேச வைத்தியசாலை பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி இம்மானுவேல் ஈற்றன் பீரிஸ் தெரிவித்தார்.●

## வள்ளுவம் கண்ட....

03ஆம் பக்கத் தொடர்ச்சி.

தமிழ் நாட்டில் இருந்து வருகைதந்த அருட்திரு. வெனி இளங்குமரன் அடிகளார் இவ் சிறப்புச்சொற்பொழிவை நிகழ்த்தினார். கடந்த 10.02.2019 ஞாயிறு பிற்பகல் 3.00 மணிக்கு மன்னார் தாழ்வுபாடு வீதியில் உள்ள குடும்பப்பணி நிலைய மண்டபத்தில் இந்நிகழ்வு நடைபெற்றது. பின் விருந்தினர் மதிப்பளிப்பு, மங்கள விளக்கேற்றல் நிகழ்வுகளைத் தொடர்ந்து மன்னார் சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி மாணவியரினால் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடப்பட்டது. தொடர்ந்து இறைவணக்கம் இடம்பெற்றது. பின்னர் மன்னார் கலார்ப்பனா நாட்டியப்பள்ளி மாணவியரினால் வரவேற்பு நடனம் இடம்பெற்றது. தொடர்ந்து எழுத்தாளர் எஸ்.ஏ. உதயன் அவர்கள் இந்நிகழ்விற்குத் தலைமைதாங்கினார்.

மன்னார் தமிழ்ச்சங்கத் தலைவர் அருட்திரு. கிறிஸ்துநேசரெட்ணம் அடிகளார் அறிமுக உரையாற்றினார். சொற்பொழிவின் நிறைவில் மன்னார் அரசாங்க அதிபர் கௌரவ. திரு. மோகன்றாஸ் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். நிறைவாக மன்னார் தமிழ்ச்சங்க நிதிச் செயலாளர் ஜனாப் கலீல் முஹம்மது நஜீம் அவர்களினால் நன்றியுரை வழங்கப்பட்டது. ●

## புனித டொன் போஸ்கோ.....

04ஆம் பக்கத் தொடர்ச்சி.

அருட்பணியாளர் ஒருவர் சிறந்த முறையில் பணியாற்றுகின்றார் என்பதற்கு என்ன அடையாளம் என்று தன் மறையுரையின் இறுதியில் கேள்வி எழுப்பிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் மனித கண்கொண்டும் இறைவனின் கண்கொண்டும் இவ்வுலகைப் பார்க்கவும் தன் பணியில் மகிழ்வை உணரவும் முடிந்த அருட்பணியாளர் நன்கு பணியாற்றுகின்றார் என்று கூறி முடித்தார்.●

## கிறிஸ்தவ நாகரிகம்......

11ஆம் பக்கத் தொடர்ச்சி

இந்த உலகம் மடைமை எனக் கருதுவதையும் இவ்வுலகிற்கு ஒவ்வாததையும் தனக்கு மகிமையாக்கிக் கொண்ட பவுல் கிறிஸ்துவின் அனுபவத்தை தம்மில் ஆதாயமாக்கிக் கொள்ள உலகியல் செல்வங்களை குப்பை எனக் கருதினார். இவ்வாறு தனது எபேசு அனுபவத்தை வாழ்ந்து மறைசாட்சியாகி விண்ணக அனுபவத்திற்கு தன்னை தகுதியுடையவனாக்கிக் கொண்டார்.

**தூய பவுலின் மறை தூதுப் பயணங்கள்**

கி.பி.46-49 வரையான காலப்பகுதியில் பவுலுடைய 1ஆம் பயணம் அமைந்திருந்தது. பர்ணபாவும், யோவானும், மாற்குவும் இருந்தனர். இதுவரை கிறிஸ்தவ நம்பிக்கையை அறியாத மக்களுக்கு நற்செய்தி அறிவித்தலே இப்பயணத்தின் நோக்கமாகும். சைப்பிரஸ் தீவிற்கும், சின்ன ஆசியாவிலுள்ள நகரங்களுக்கும் சென்றார். சாலமின், பாப்போ, பெருகை, பிசித்தியா, அந்தியோக்கியா, இக்கோனியா, லிஸ்திரா, தெருபை ஆகிய இடங்களில் பணியாற்றினார். கி.பி 50-52 வரை மூன்று ஆண்டுகள் இரண்டாம் பயணம் அமைந்திருந்தது. பர்ணபாவுடன் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக சீலா, திமோத்தேயு, லூக்கா ஆகியோரை தன்னுடன் அழைத்துச் சென்றார்.

எருசலேம் சங்கத் தீர்மானங்களை அறிவித்து கிறிஸ்தவர்களை விசுவாசத்தில் உறுதிப்படுத்துவதே இப்பயணத்தின் நோக்கமாகும். சீரியா, சிசிலியா, லிஸ்திரா, துரோவா, பிலிப்பி, தெசலோனிக்கா, பெரெயா, எதென்ஸ், கொரிந்து, எபேசு நாடுகளுக்குச் சென்று இயேசுவின் நற்செய்தியைப் பரப்பி கிறிஸ்தவ வாழ்வை நிலைநாட்டினார். தொடர்ந்து கி.பி. 54-58 வரையான காலப்பகுதியில் பவுலுடைய மூன்றாம் பயணம் அமைந்திருந்தது. பயணத்தோழர்களாக திமோத்தேயு, தீத்து, லூக்கா ஆகியோர் உடன் சென்றனர். பவுலுக்கு ஏற்படப்போகும் துன்பத்தைப் பற்றி தூய ஆவியானவர் முன்னறிவித்தமையால் கிறிஸ்தவ சமூகங்களை சந்தித்து கிறிஸ்தவர்களை விசுவாசத்தில் ஊக்கப்படுத்த எபேசு, கொரிந்து, துரோவா, மிலேத்து, செசரியா இடங்களுக்குச் சென்று விசுவாசிகளை உறுதிப்படுத்தினார். பின்னர் ஜெருசலேமில் யூதர்கள் கையில் அகப்பட்டு இறுதி விசாரணைக்காக உரோமைக்கு அழைத்துச்செல்லப்பட்டார். உரோமை வரை திருச்சபை பரவியது. நீரோவின் கலாபனையில் கிறிஸ்துவுக்கு சாட்சியாகவும் விசுவாசிகளுக்கு முன்மாதிரிகையாகவும் வேதசாட்சியாக புனித பேதுருவுடன் மரித்தார்.●

## மன்னாரில்....

03ஆம் பக்கத் தொடர்ச்சி.

மறைமாவட்ட இளையோர் ஆணைக்குழு சில பங்கு இளையோரின் ஒத்துழைப்போடு மது போதை ஒழிப்பு சம்மந்தமான விழிப்புணர்வு தெருக்கூத்து நிகழ்வினை மன்னார் சித்திவிநாயகர் தேசிய பாடசாலையிலும், மன்னார் பொது வைத்தியசாலை பிரதான சந்தியிலும் காட்சிப்படுத்தியது. இந்நிகழ்வை மன்னார் மறைமாவட்ட இளைஞர் ஆணைக்குழு இயக்குனர் அருட்பணி. லக்கோண்ஸ் பிகிறாடோ அடிகளாரும், மன்னார் நகரசபை தலைவர் திரு. ஜெராட் அவர்களும் ஒழுங்குபடுத்தியிருந்தார்கள்.●

### மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம் :

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, 'MANNA'
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 02002029782

## இல்லற வாழ்வில் 50வது ஆண்டு பொன்விழா வாழ்த்து!



"நான் ஒருபோதும் அவர்களை கைவிடவும் மாட்டேன் அவர்களை விட்டுப்பிரியவும் மாட்டேன்" (எபி. 13:5)

இளமருதங்குள கிராமத்திலே
இல்லறத்தைத் தொடங்கியவர்களே!
நல்லறத்தைத் தம் பிள்ளைகளுக்கு
நன்றாகச் சொன்னவர்களே!
இன்பத்திலும், துன்பத்திலும்
இணைபிரியா இருவர்களே!
இருவரல்ல ஒருவரென்று
இவர்களில் காண்போமே
ஐ பத்து வருடங்கள்
இல்லறத்தில் வாழ்ந்தவர்களே
இன்னும் பல்லாண்டு
நலமாக வாழ வாழ்த்துகின்றோம்.

திரு. திருமதி. சுவானி அலேஸ் நீற்றம்மா,
வேப்பங்குளம், வவுனியா

1968.09.13 - 2018.09.13

**வாழ்த்துவோர்** : அன்புப் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 100 ஆவது ஆண்டு பிறந்த நாள் வாழ்த்து



09.02.1919 - 09.02.2019

இறைவனால் படைத்தளித்த உலகமெனும் பூங்காவில் குருநகரில் பூத்த திருமதி. மேரி யோசேப்பின் அமிர்தநாதர் தனது 100வது பிறந்த நாளை தனது வதிவிடமாகிய திருகோணமலையில் கொண்டாடுகின்றார். 09.02.2019 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு அலரித்தோட்டம் உப்புவெளியிலுள்ள இறைஇரக்கக் கோவிலில் நன்றித் திருப்பலியும், 11ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 4.00 மணிக்கு மன்னாரில், கீரி என்னும் இடத்தில் அவரால் கட்டப்பட்ட நற்கருணை நாதர் கோவிலில் நன்றித் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்படும். அனைவரும் அவருக்காக இறைவனுக்கு நன்றி கூறி செபிக்கும்படி கேட்டு நிற்கின்றோம்.

திருமதி. மேரி யோசேப்பின்
அமிர்தநாதர் (அம்மம்மா)
(திருகோணமலை)

**வாழ்த்துவோர்**: சகோதரர்கள், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

# நீங்காத நினைவுகள்

## 35ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி. செபமாலை சத்தியசீலன்**
(விடத்தல்தீவு)

மலர்வு : 15 - 02 - 1927
உதிர்வு : 09 - 02 - 1984

"உன் பெயரைச் சொல்லி உன்னை அழைத்தேன் நீ எனக்கு உரியவன்" (எசாயா 43:1)

காலங்கள் கடந்து சென்றாலும்
அம்மா, உங்கள் நினைவுகள்
எம்மைவிட்டு நீங்கமறுக்கின்றன!
நீங்கள் எமைப் பிரிந்து
முப்பத்தைந்து ஆண்டுகள் ஆகிவிட்டன.
மறக்கமுடியவில்லை உங்களை!
ஊட்டி வளர்த்த விசுவாசம்
உரமாய் நெஞ்சில் உயர்ந்து நிற்க
பணியின் நிறைவில் பரமன் அடியில்
பரிசுத்த கூட்டத்தில் இளைப்பாற வேண்டி
கண்கள் பனிக்க இதயம் கனக்க
இறைபாதம் இறைஞ்சுகின்றோம்.

**பிரிவால் நினைந்துருகும்,** பிள்ளைகள்.

## 01ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 05 08 1947



உதிர்வு 03 02 2018

**திருமதி. மரியநாயகம் ஜெயராணி மிராண்டா**
(வங்காலை)

என்றும் எம்மோடு வாழ்ந்து கொண்டிருக்கின்றீர்
ஏழு மக்களைப் பெற்று அதில் இரண்டை இழந்தாலும் பதினைந்து பேரப்பிள்ளைகளைக் கண்ணடீர்கள். அவர்கள் அம்மம்மா, அப்பம்மா எனக் கேட்கின்றனர் என்றும் காலன் உங்களை அழைத்தாலும் கருணை கொண்ட தெய்வத்திடம் கையளிக்கின்றோம் உங்கள் ஆன்மாவை அமைதி பெறுக உங்கள் ஆன்மா ஆண்டவர் பாதத்தில்.
அமைதி! அமைதி! அமைதி!

**பிரிவால் நினைந்துருகும்,**
அன்புக்கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்.

## 2ஆம் மாத நினைவஞ்சலி | 19ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திரு. அந்தோனி யேசுதாசன்
(ஏசு)
(நேள்ளியன் குடியிருப்பு,
ஓலைத்தொடுவாய்)

மலர்வு 15-02-1950
உதிர்வு 01-10-2018



திருமதி. யேசுதாசன்
அன்னம்மா (சீதா)
(நேள்ளியன் குடியிருப்பு,
தோட்டவெளி)

மலர்வு 25-10-1955
உதிர்வு 13-12-1999

இல்லறத்தை நல்லறமாக்கி எமக்கெல்லாம் வழிகாட்டி
பண்பாய், பாசமாய், நேசமாய் எம்மை அரவணைத்து,
உயர் வாழ்வு தந்த அம்மா, அப்பாவே!
நீங்கள் விட்டுச்சென்ற அடிச்சுவட்டில்
நாங்கள் நடைபயில எமக்காக மன்றாடுங்கள்.
உங்கள் ஆன்மா ஆண்டவரில் அமைதிபெற
உளமார வேண்டுகின்றோம்.

**பிரிவால் நினைந்துருகும்,**
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

## 02ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 12 12 1941



உதிர்வு 09 02 2017

**திரு. செபமாலை மரியாம்பிள்ளை**
(இளைப்பாறிய அதிபர், சமாதான நீதவான்)
சூரியகட்டைக்காடு, நானாட்டான்

வாழ்ந்த காலமெல்லாம் வாழவைத்த தெய்வமே!
வானுலகு சென்றும் ஆசி வழங்கும் வள்ளலே!
எவ்வளவு துன்பம் வந்தாலும் எதையும்
பொருட்படுத்தாது பொறுப்பெடுத்த கடமைகளை
செவ்வனே ஆற்றி சிறப்புடனே சென்றீர்கள் பப்பா!
உங்கள் அன்பை தோற்கடிக்கும் மற்றொரு
அன்பை உலகில் யாரும் தரப்போவதில்லை
'பப்பா' என்று சொல்ல இனி யாரும் இல்லை!

**பிரிவால் நினைந்துருகும்,** அன்புள்ள மனைவி, மகள், மகன்மார், பேரப்பிள்ளைகள், மருமக்கள், உறவினர்கள், நண்பர்கள்.

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 23 11 1958



உதிர்வு 10 02 2009

**திரு. யோசவ் அல்போன்ஸ் யோகானந்தம்**
(உபதபால் அதிபர்,
முதலைகுத்தி, உயிலங்குளம்)

ஆண்டுகள் பத்து உருண்டோடின ஆனால் உங்கள்
பிரிவை எமக்காய் மறக்க முடியாதப்பா!
அன்பிலும், பண்பிலும் எமை வளர்த்தீரே
மண்ணில் வாழ்ந்த நாட்கள் போதுமென்று
விண்ணக வாழ்வில் உம்மை ஏற்றிடவே
எல்லாம் வல்ல இறைவன் எண்ணியதால்
எம்மிடமிருந்து தம்மிடம் உம்மை ஏற்றார் - அப்பா
அப்பா அன்று எம்முடன் இருந்து இறைவனை வேண்டிநீர்கள்
இன்று இறைவனிடம் இருந்து எமக்காய் வேண்டுவீர்கள் அப்பா

**பிரிவால் நினைந்துருகும்,**
குடும்பத்தினர்.